கேலக்ஸியின்

# விண்மீன்

மின்னிதழ்

இதழ் 3
ஆகஸ்ட் 2025

ஆகஸ்ட் 2025 இதழ் 3



நிஸ்வா என்றொரு பழமையான நகரம்!!!

“கட்டுரையும் ஒரு சிறுகதையே;
சிறுகதையும் ஒரு கட்டுரையே”

பேராசிரியர் மு.பழனி இராகுலதாசன்

www.galaxybs.com

GALAXY BOOK SELLERS & PUBLISHERS
ISBN 978-81-989182-0-8
9 788198 918208

விண்மீன்
மின்னிதழ்

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல
தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே
நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.
- நாலடியார்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
- ஔவையார்

**பதிப்பாளர்**
பாலாஜி பாஸ்கரன்

**ஆசிரியர்**
பரிவை சே குமார்

**இணை ஆசிரியர்**
தேவதர்சினி நடராஜன்

**வடிவமைப்பு**
சென் பாலன்

**Published by**
Galaxy Book Sellers & Publishers

**Print Partners**
Printech, UAE

**Travel Partner**
FJ Tours & Travels, UAE

**Galaxy Book sellers & Publishers**
www.galaxybs.com
+91 99944 34432

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

ISBN 978-81-989182-0-8
9 788198 918208

# வாசிப்பும் எழுத்தும்

'யார் வேண்டுமானாலும் எழுதலாம்' என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு. இந்த வாசகம் ஒருமுறை எங்களது 'கதைப்போமா' நிகழ்வில் எழுத்தாளர் ஜெஸிலா பானு அவர்களால் மறுக்கப்பட்டது. அதெப்படி எல்லாரும் எழுத முடியும். நல்ல வாசிப்பனுபவம் இருந்தால்தான் எழுத முடியும் என்று சொன்னார். அதுதான் உண்மையும் கூட. வாசிப்பே எழுத்தைச் செம்மையாக்கும்.

நாங்கள் இந்த வருடம் நடத்திய சிறுகதைப் போட்டிக்கு வந்திருந்த கதைகளில் பலர் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்ட செய்திகளை வைத்து கதை எழுதியிருந்தார்கள். இது தவறென்று சொல்லவில்லை, ஆனால் அப்படி எழுதும் போது அந்தச் செய்தி நம் கண் முன் விரியாமல் கதையாய் விரிந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று தோன்றியது. மேலும் வாசிப்பு அனுபவமே இல்லாமல் எழுதிய எழுத்து என்பதை அது அப்பட்டமாக நமக்குக் காட்டியது. அப்போதுதான் 'யார் வேண்டுமானாலும்...' என்ற வாசகத்தை 'புத்தக வாசிப்பு இருக்கும் யார் வேண்டுமானாலும்...' என்று மாற்றிக் கொள்ள வேண்டும் எனத் தோன்றியது.

நானும் கல்லூரி முதலாம் ஆண்டு இறுதியில் எழுத ஆரம்பித்து இப்போது வரை தொடர்கிறேன் என்றாலும் அப்போது எழுதியதற்கும் இப்போது எழுதுவதற்கும் எனக்கு நிறைய வித்தியாசம் தெரிகிறது. அப்போதும் புத்தக வாசிப்பு இருந்தது என்றாலும் அது வார, மாத இதழ்கள், ஐயா வீட்டிலும், நூலகத்திலும் இருந்தும் எடுத்துப் படிக்கும் புத்தகங்கள் என்ற நிலையில்தான் இருந்தது. அபுதாபி வந்த சமயத்தில் உலகமும் சமூக வலைத்தளங்களுக்குள் வந்து சேர, சேர்ந்த நட்பு வட்டமும் நிறைய, நிறைவாய்ப் படிக்கும் வாய்ப்பை அமைத்துத் தந்தது. மேலும் நிறையப் புதியவர்களைப் படிக்கவும் வாய்த்தது. வாசிப்பு நம் எழுத்தை மாற்றும் என்பதை நான் நன்றாகவே உணர்ந்திருக்கிறேன்.

நான் ஊருக்குப் போகும் போது ஐயா என்னிடம் 'நிறைய வாசிங்க... அப்பத்தான் எழுத்து இன்னும் சிறப்பாகும்' எனச் சொல்லி, சில எழுத்தாளர்களைக் கண்டிப்பாக வாசிக்கணும் எனச் சொல்லி அவர்களின் புத்தகங்களைத் தருவார். இந்த இதழின் சிறப்புப் பேட்டிக்காக, ஐயாவிடம் கேள்விகள் கேட்டபோது அவர் சொன்ன பதிலில் 'ஒவ்வொரு மனிதனின் மனதுக்குள்ளும் ஆயிரம் ஆயிரம் அனுபவ அலைகள் தத்தளிக்கின்றன; அவற்றுக்கு எழுத்து வடிவம் கொடுங்கள் போதும்' என்று சொல்லியிருக்கிறார். அதுதான் உண்மை, என்னிடம் கூட 'சுற்றியிருப்பவர்களை, உங்கள் ஊர் மக்களை வைத்து உங்களால் நிறைய, நிறைவான கதைகளைத் தரமுடியும்... எழுதுங்கள்' என்பார்.

இதைத்தான் எழுத்தாளர் ஜெயகாந்தன் ஒரு பேட்டியில் 'என்னைப் பெரிதும் பாதிப்பவை மனித வாழ்வின் பிரச்சினைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சனைகளே' என்று சற்றே மாற்றிச் சொல்லியிருப்பார். இரண்டின் கருத்தும் ஒன்றுதான். எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன், 'அடுத்தவரின் பாராட்டிற்காக மட்டும் ஒரு போதும் எழுதாதீர்கள். அது போலவே எழுத ஆரம்பித்தவர்கள் எதற்காக எழுதுகிறேன், எதை எழுத விரும்புகிறேன் என்பதைத் தானே தேடி கண்டறிய வேண்டும். விரும்புவதை எல்லாம் எழுத்தில் கொண்டு வருவது எளிதில்லை' என்று சொல்லியிருக்கிறார். உண்மைதான் பாராட்டுக்காகவோ, என் எழுத்து சிறப்பானது என்ற மார்தட்டலுக்காகவோ எழுதாதீர்கள். நல்ல எழுத்து அதற்கான இடத்தை அதுவே பெற்றுக் கொள்ளும். நாம் தள்ளிக் கொண்டு போய் நிறுத்தத் தேவையில்லை, அப்படி நிறுத்தி மகிழும் போது அது நம்மை அந்த நிறுத்தத்திலேயே நிறுத்திவிடும். மேலும் நம் எழுத்தின் மீதான விமர்சனம் வரும்போது ஏற்றுக் கொண்டு அதை மாற்றிக் காட்டும் பக்குவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். இவன் என்ன சொல்வது..? இவனுக்கு என்ன தெரியும் எனப் பகையை வளர்க்காதீர்கள். அது எழுத்தை விழுங்கிவிடும்.

தனது முகநூல் பக்கத்தில் 'யாரும் கதைகள் எழுதுவதற்குச் சொல்லித் தர மாட்டார்கள். சொல்லித் தரவும் முடியாது. நீங்கள் ஓரளவிற்கு எழுதப் பழகிக் கொண்டால் நுணுக்கங்கள் சொல்லித் தருவார்கள்' என்று எழுத்தாளர் நாராயணி கண்ணகி அவர்கள் சொல்லியிருந்தார்கள். உண்மைதான், என்னிடம் பணம் கட்டுங்கள் சொல்லித் தருகிறேன் என வகுப்புக்கள் நடத்தும் எவராலும் வாசிப்பவரை ஈர்க்கும் எழுத்தைச் சொல்லித்தர முடியாது. உங்களின் வாசிப்பும், வாழ்வின் மீதான நேசிப்பும் மட்டுமே அதைச் சாத்தியப்படுத்தும்.

இன்று நாம் எழுத நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. அதிகமான போட்டிகள் நடத்தப்படுகின்றன. சமூக வலைத்தளக் குழுமங்களில் எழுத வாய்ப்பு அமைகிறது. நாம் தொடர்ந்து எழுதலாம். போட்டிகளுக்கெல்லாம் வெற்றி பெற வேண்டும் என எழுதுவதைவிட, எனக்கு நல்லதொரு கதை எழுதும் வாய்ப்பு என்பதாய் நினைத்து எழுதலாம். வெற்றியாளர்கள் மாறிக் கொண்டே இருப்பார்கள். ஒருநாள் அந்த இடத்தில் நம் படைப்பும் இருக்கும் என்பது நிச்சயம். எழுதுவதை எவ்வளவு ரசித்துச் செய்கிறோமோ அதேபோல் வாசிப்பதையும் செய்ய வேண்டும். வாசிப்பே எழுத்தை மேம்படுத்தும்.

பரிவை சே குமார்

# இதழில்....


**சிறுகதைகள்** :

குருவிக்கூடு - தி.வள்ளி
யார் சிறந்தவர்கள்? - மணிமேகலை இராஜாராம்
விதியை மாற்றும் பெண்கள் - பிரேம ராகவி
அறிவுரைகள் விற்பனைக்கல்ல! - எம். சங்கர்
தியாகம் - உமா ஸ்வாமிநாதன்

**நேர்காணல்** :

"கட்டுரையும் ஒரு சிறுகதையே" மு.பழனி இராகுலதாசன் - தேவதர்ஷினி நடராஜன்

**கட்டுரைகள்** :

நிஸ்வா என்றொரு பழமையான நகரம்!!! - இளங்கோ ராமசாமி
ஜப்பானிய ஹைக்கு- தொடக்கமும் தொடர்ச்சியும், பகுதி - 2 - ச.கமலக்கண்ணன்
பூவார் சென்னி மன்னன் - பாலாஜி பாஸ்கரன்

**புத்தகப்பார்வை** :

ஆரச்சாலை - எஸ்.எஸ். நூருல் இர்பான்
செம்மீன் - எஸ். சரத்குமார்
முன் பனியும் பின் மறையும் - பாலமுருகன்.லோ
சோளகர் தொட்டி - ஆர். சுபாஷினி

**குறுந்தொடர்** :

அந்த மாலை பகுதி-2 - ஸ்ரீராம்

**ஒரு பக்கக் கதை** :

புரிந்தது! - மலர்மதி

**சினிமா** :

சந்தியா ராகம் – பரிவை சே.குமார்

# நிஸ்வா என்றொரு பழமையான நகரம்!!!



இளங்கோ ராமசாமி



## பகுதி -1






எனக்குப் பூர்வீகம் கரூர் நகருக்கு அருகில் உள்ள தும்பிவாடி என்ற சற்றே பெரிய கிராமம். ஆனால் நான் வளர்ந்தது ஐந்து வெவ்வேறு ஊர்களில்; படித்தது ஒன்பது கல்வி நிறுவனங்களில்; பணி புரிந்தது ஆறு நிறுவனங்களில்; கல்விக்காகவும், பணி நிமித்தமும் கடந்த நாற்பத்தெட்டாண்டு கால வாழ்வில் பத்து ஊர்களில் வாழும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. அவற்றில் மிக அதிக காலமாகத் தொடர்ந்து பத்தாண்டுகளாக நான் வாழும் நகரம் நிஸ்வா.

ஓமானின் தலைநகரான மஸ்கட்டிற்கு அடுத்த படியாக இரண்டாவது முக்கியத்துவம் பெற்ற இந்நகரின் பெருமைகளை எடுத்தியம்பி கேலக்ஸியின் வாசகர்களை அழைத்துக் கொண்டு இந்நகரையும் அருகில் உள்ள பகுதிகளையும் சுற்றி வருவதே இத் தொடர் கட்டுரையின் நோக்கம்.

மஸ்கட்டில் இருந்து அமீரகத்தின் “அல் எய்ன்” என்ற புகழ்பெற்ற எல்லைப் புற நகருக்குச் செல்லும் சாலையில் 150 கிலோ மீட்டர் தொலைவிலும், ஒன்றரை மணி நேரப் பயணத்திலும் அமைந்துள்ள ‘நிஸ்வா’, ‘அல் தஹ்லியா’ மாகாணத்தின் தலை நகராகும்.

இன்றைய சுல்தானேட் ஆஃப் ஓமான் என்ற ஒருங்கிணைந்த தேசம் 1950 களுக்கு முன்னர் “சுல்தானேட் ஆஃப் மஸ்கட்” மற்றும் “இமாமேட் ஆஃப் ஓமான்” என்னும் இரு தனித்தனி நாடுகளாக இருந்தன. மஸ்கட்டின் ஆட்சி வழிவழியாக சுல்தான்களின் வாரிசுகளுக்குக் கைமாற்றிவிடப் படும் பாரம்பரிய மன்னராட்சி முறை.

“ஓமான்” என்ற உள்நாட்டின் ஆட்சித் தலைமை ‘இமாம்’ என்றழைக்கப்பட்ட மத குருமார்களிடம் இருந்திருக்கிறது.. தலைமை இமாமைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கற்றறிந்த, செல்வாக்கு மிக்க பல்வேறு பகுதிகளின் மற்றும் இனக்குழுக்களின் ஷேக்குகள் வசம்.

இமாம் எந்த ஊரைச் சேர்ந்தவரோ அந்த ஊரே இமாமேட் ஆஃப் ஓமானின் தலை நகரமாக இருக்கும். அவரது காலத்திற்குப் பிறகு தேர்தல் நடத்தப் பட்டுப் புது இமாம் வேறு நகரில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்நகரம் புதிய தலைநகரமாகச் செயல்படத் துவங்கும்.

இவ்வாறு இன்டீரியர் ஓமான் என்றழைக்கப்பட்ட மேற்கு ஹஜர் மலைத் தொடருக்கும், சவுதி அரேபியாவை ஒட்டி எம்ப்ட்டி குவார்ட்டர் ( Empty Quarter) என்றழைக்கப்படும் ரப் அல் ஃகலி (Rab Al Khali) என்ற பாலை நிலப்பகுதிக்கும் இடைப்பட்ட இமாமேட்டின் தலை நகரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமையைப் பொறுத்து நிஸ்வாவும், ருஷ்டாக்கும் மாறி மாறி இருந்திருக்கின்றன.

நாட்டின் தலைவராக இமாம் இருந்தாலும் ஒட்டுமொத்த அதிகாரமும் அவரிடம் குவிக்கப் படவில்லை. நாட்டின் ஒவ்வொரு மாகாணத்தையும் நிர்வகிக்க தனித் தனி கவர்னர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர். அக் கவர்னர்கள் தங்கள் இனக்குழுக்களைத் தலைமை தாங்கி வழி நடத்தி வந்தனர்.


சுல்தான் சையது பின் தைமூர்

1950 களின் முற்பகுதியில் ஓமானில் எண்ணை வளம் இருப்பது கண்டறியப் பட்டது. அது வரை நட்பு பாராட்டி வந்த மஸ்கட்டின் சுல்தான் 'சையது பின் தைமூர்', புதிதாகப் பதவிக்கு வந்து நிஸ்வாவில் இருந்து ஆட்சி புரிந்து வந்த 'காலிப் அல் ஹினாய்' என்ற இமாமை எதிர்த்து இங்கிலாந்து ராணுவத்தின் துணையோடு போரில் இறங்கினார். 1954 முதல் 1959 வரை இமாமேட்டுடன் நடந்த ஜபல் அக்தர் போரில் சுல்தான் சையது பின் தைமூர் வெற்றி பெற்று சுல்தானேட்டையும், இமாமேட்டையும் ஒன்றினைத்தார். இமாம் காலிப் அல் ஹினாய் சவுதி அரேபியாவிற்குப் புலம் பெயர்ந்தார்.

இந்தப் போரில் பிரிட்டிஷ் போர்விமானங்களின் குண்டு வீச்சில் சிதைவுற்ற நிஸ்வாவின் புகழ்பெற்ற வட்ட வடிவக் கோட்டை புதுப்பிக்கப்பட்டு இன்று ஓமானின் முக்கிய அடையாளங்களுல் ஒன்றாகத் திகழ்கிறது. சுல்தான் சையது பின் தைமூர் தொடுத்த போரால் ஏற்பட்ட காயங்களுக்கு அவரது மகன் சுல்தான் காபூஸ் பின் சையது அல் சையது மருந்திட்டு ஆற்றி மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து ஒரு தாய் மக்களாக அமைதியுடன் வாழ வழிவகை செய்தார்.

இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்த நிஸ்வா என்ற நகரிலும், அல் தஹ்லியா மாகாணத்தில் பஹலா, ஜிப்ரீன், இஸ்கி, இம்தி, பிர்கித் அல் மௌஸ், ஹம்ரா, மிஸ் ஃபாத் அல் அப்ரீன், வாதி நக்கர், வாதி தம், வாதி முஹைதீன், வாதி தனுஃப், ஜபல் அக்தர், ஜபல் ஷாம்ஸ் என ஒரு டஜனுக்கும் அதிகமான புராதனத்தையும், கலாச்சாரத்தையும் புதைத்து வைத்திருக்கும் தனித்துவமான இயற்கை எழில் கொஞ்சும் சிற்றூர்களும் உள்ளன.

நிஸ்வாவை ஒரு முழு உடலாகக் கற்பனை செய்தால் நிஸ்வாவின் புகழ்பெற்ற கோட்டை இருக்கும் பகுதியைத் தலையாகவும் நான் மேலே மேற்குறிப்பிட்டுள்ள ஊர்களை அவ்வுடலின் இன்ன பிற அங்கங்களாகவுமே கருத வேண்டும்.

'"விண்மீன்" இதழுக்காக நிஸ்வாவைப் பற்றி ஒரு கட்டுரை எழுதித் தாருங்கள் எனச் சகோதரர் பாலாஜி பாஸ்கரன் கேட்ட போது அதனை எப்படி ஒரு கட்டுரையில் எழுத முடியும் என்ற கேள்வி என்னைத் துளைத்தது.


இமாம் காலிப் அல் ஹினாய்

சரி வழக்கம் போல ஒரு தலைப்பை வைத்து எழுத ஆரம்பிப்போம் மற்றதை கருப் பொருள் பார்த்துக் கொள்ளும் என எழுதத் துவங்கினேன். வரலாற்றில் என்னைப் பின்னோக்கி இழுத்துச் சென்ற "நிஸ்வா" இப்போது தன்னை எப்படி அறிந்துணர வேண்டும் என விண்மீன் வாசகர்களுக்கு வழிகாட்டப் பணித்திருக்கிறது.

அதன் முதற்கட்டமாக ஒரு வாரம் பத்து நாள் தங்கிச் சுற்றிப் பார்த்துக், கதைகள் பேசி, இளைப்பாறிச் செல்லத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுங்கள்.

நீங்கள் இங்கு வந்து சேர வேண்டியது ஒரு வியாழக் கிழமையன்று. பிற்பகல் இரண்டு மணிக்கு பழைய நிஸ்வாவின் குறுகிய சந்துகளுக்குள் இருக்கும் நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட ஆனால் பழைமையைத் தக்கவைத்துக் கொண்டுள்ள ஏதாவது ஒரு மண் வீட்டில் அறையெடுத்து பெட்டிகளை வைத்து விட்டு ஒரு குட்டித் தூக்கம் போட்டு இளைபாறிக் கொண்டிருங்கள்.

நீங்கள் கண்விழிக்கும் போது அடுத்த மாத விண்மீன் இதழ் உங்களை வந்தடைந்திருக்கும். அப்போது உங்களை நிஸ்வாவின் புகழ் பெற்ற வெள்ளிக் கிழமைச் சந்தைக்கு முதல் நாள் மாலையில் இருந்தே முழு முனைப்புடன் தயாராகிக் கொண்டிருக்கும் ஓமானிகளைச் சந்திக்க அழைத்துச் செல்கிறேன்.

அதுவரை உங்களிடம் இருந்து விடை பெறுகிறேன்.

(தொடரும்)

# குருவிக்கூடு





**தி.வள்ளி**
**திருநெல்வேலி**

"இப்பவெல்லாம் அம்மாவுக்கு என்னை பாக்கவே பிடிக்கவில்லை " எட்டு வயது கீர்த்தனாவின் மனம் வருத்தத்தில் வெம்பியது . இத்தனை வருடங்களாக அம்மாவின் அன்பில் திளைத்து விட்டு, இப்போது கிட்டக்கவே நெருங்க முடியாத ஒரு சூழல் அவளை ரொம்பவே பயமுறுத்தியது. அம்மாவின் அறைவாசலில் நின்று எட்டிப் பார்த்தாள். அவளைத் திரும்பிப் பார்த்த சங்கீதா, உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.பிறகு உச்சஸ்தாயில், " போடி வெளியே... என் கண் முன்னால நிக்காத போ.. இங்க இருந்து போ... உன்னைப் பார்த்தாலே எனக்கு எரிச்சலா வருது .." என்று கத்தினாள். வெலவெலத்துப் போன கீர்த்தனா அங்கிருந்து வேகமாக நகர்ந்தாள்.

வெளிறிப் போன அவள் முகத்தை பார்த்த கார்த்திகேயன். "என்னடா செல்லம் இங்க வா. அம்மா கத்தினாளா... அவளுக்கு உடம்புக்கு முடியல ... உடம்பெல்லாம் வலிக்குது போல அதுதான் எரிச்சலில் கத்தியிருப்பா. நீ ஒன்னும் நெனச்சுக்காதடா .. அம்மா பாவம். இந்த நேரத்துல நாம தான் அவள புரிஞ்சுக்கனும " எனச் சொல்லியபடி லேசாக விசும்பும் மகளை அணைத்துக் கொண்டான் கார்த்தி.

இந்த ஆறு மாதத்தில் தான் வாழ்க்கை எவ்வளவு மாறிவிட்டது. அன்பான மனைவி, அழகான மகள், என்று ஆனந்தமாய் போய்க்கொண்டிருந்த வாழ்க்கையில் குளத்தில் எறிந்த கல்லாய் இந்தப் பிரச்சனை. கீர்த்தனாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளிடம் அப்பாவும் அம்மாவும் எதுவும் வெளிப்படையாக சொல்லாவிட்டாலும், அம்மாவுக்கு ஏதோ வரக்கூடாத நோய் வந்திருக்கிறது என்பதை புரிந்து கொண்டாள். அப்பாவும் அம்மாவும் ஏதோ பேசுவதும். அவளை கண்டதும் நிறுத்தி விடுவதும், அவளுக்கு ஏதோ உணர்த்தியது. இப்போதெல்லாம் அம்மா கிட்டவே நெருங்க முடியாதது... அம்மா தன்னைக் கண்டால் கத்தி வெளியே போகச் சொல்லுவது... அவள் மனதை ரொம்பவே பாதித்தது.

கார்த்திக்கு சங்கீதா, கீர்த்தனா மேல் வைத்திருந்த பாசம் நன்றாக தெரியும். தனது வாழ்க்கை இன்னும் ஓரிரு மாதங்களே என்பது தெரிந்த பிறகு, அந்த பிள்ளயை.. அதுவும் பெண் பிள்ளயை.. எப்படி வளர்த்து ஆளாக்கப் போகிறாரோ கணவன் என்ற வருத்தம் துக்கம் தொண்டையை அடைத்தது சங்கீதாவுக்கு. அதன் வெளிப்பாடு கீர்த்தனாவை பார்க்கும் போதெல்லாம் வருத்தம் மேலிட தன்னையும் அறியாமல் அப்படிக் கத்தினாள்.

கீர்த்தனாவுக்கு திடீரென வாழ்க்கை தடம் மாறியது மனதை ரொம்பவே பாதித்தது, அன்று மாலை பள்ளியில் இருந்து வந்ததும் அப்போது புதிதாக வேலைக்கு சேர்ந்திருந்த பாட்டி டிபனை கொடுக்க, சாப்பிட்டுவிட்டு, அம்மாவின் ரூமை எட்டிப் பார்த்தாள் பயந்து கொண்டே ..அம்மாவின் அருகில் போக ஆசையாக இருந்தும் ஏதோ ஒரு பயம் தடுத்தது,

"கண்ணா கீர்த்தனா! கிட்டவாடா" என்ற சங்கீதா, "இப்படி அம்மா பக்கத்துல உக்காரு..." என மகளைத் தன் பக்கத்தில் அமர்த்தி "நீ சமத்தா இருக்கனும்.. நல்ல படிக்கனும்.. என்னுடைய ஆசை எல்லாம் நீ வெளிநாட்டில் படிச்சு, பெரிய வேலைக்குப் போகனும். யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எக்காரணத்தைக் கொண்டும் எந்த சூழ்நிலையிலும் படிப்பை மட்டும் கைவிடக்கூடாது. எந்த சோகத்திலும் நீ வாழ்க்கையை தொலைத்து விடக் கூடாது. அப்பா உன்ன நல்ல பாத்துக்குவாரு... நீயும் அப்பாவப் பாத்துக்கோ.

"அது எப்படிப்பா பொம்பள புள்ளைய தனியா வளப்ப... சங்கீதா நல்ல பொண்ணு அவள மாதிரி ஒரு பொண்டாட்டி உனக்கு கிடைக்க மாட்டா. நீ அவ பேருல எவ்வளவு பாசம் வச்சிருக்கேன்னு எனக்கு தெரியும். ஆனா அதுக்காக அப்படியே வாழ்நாளை கடத்திட முடியுமா? உனக்குன்னு ஒரு துணை வேணாமா ..?"

பாவம் அவருக்கு என்னையும் உன்னையும் தவிர பெருசா எதுவும் பிடிப்பு கிடையாது. நான் இல்லாட்டியும் நீ அப்பாவ நல்லாப் பார்த்துக்கோ..."

"ஏம்மா இப்படி பேசுற?" என்ற கீர்த்தனா அழ ஆரம்பித்தாள். சங்கீதாவின் கண்களிலும் கண்ணீர் வழிந்தது.

"பேச வேண்டிய சூழ்நிலை வந்துடுச்சு கீர்த்தனா. நான் இல்லைனாலும் உன் வாழ்க்கையில் நீ முன்னேறனும். நிறைய படிச்சு நல்ல வேலை பாக்கனும். அதையெல்லாம் பார்க்க எனக்கு கொடுப்பினையில்லை"

அங்கு வந்த கார்த்தி, "ஏன் சங்கீதா இப்படி பேசுற... பாரு கீர்த்தனா எப்படி அழுறான்னு. உனக்கு சரியாயிடும்... நம்பிக்கை தான் வாழ்க்கை. .. நீதானே எப்போதும் நாம சந்தோஷமா இருக்கனும்னு அடிக்கடி என்கிட்ட சொல்லிக்கிட்டே இருப்ப... இப்ப நீயே அவளை அழ வைக்கிறியே" என்றான் ஆதங்கத்தோடு.

"கீர்த்தனா உன்னுடைய வீணையை எடுத்துட்டு வர்றியா? கொஞ்ச நேரம் எனக்கு வாசிச்சுக் காண்பி" என்றாள் சங்கீதா.

சங்கீதா நல்ல பாடகி அத்துடன் அருமையாக வீணை வாசிப்பாள். அவளே கீர்த்தனாவுக்கு சிறுவயதிலிருந்தே வீணை கத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள். சங்கீத குடும்பம். சங்கீதத்தின் மேல் உள்ள ஆசையினால் தான் மகளுக்கு 'சங்கீதா' என்ற பெயர் வைத்தார் அவள் அப்பா. அதேபோல இவள் தன் மகளுக்கு'கீர்த்தனா' என்று பெயர் வைத்திருந்தாள்.

கீர்த்தனா வீணை வாசிக்க, அந்த சந்தோஷத்தில் கண்மூடி கேட்டபடியே சங்கீதா அப்படியே உறங்கிப் போனாள்.

"அம்மா தூங்கிட்டா நீ உன் ரூமுக்கு போம்மா" என்றான் கார்த்தி.

மறுநாள் பள்ளிக்கூடத்தில் இருந்த கீர்த்தனவை கூப்பிட வீட்டிலிருந்த ஆள் வந்தது. கூடத்தில் பிரீசர் பாக்ஸ்ஸில் அம்மா படுக்க வைக்கப்பட்டிருந்தாள். அவளுக்கு பிடித்த ரோஜா வண்ண பட்டுப்புடவையில் நெற்றியில் குங்குமம் கை நிறைய வளையல்கள்.மங்கல கோலத்தில் அவளை சலனம் இல்லாத உயிரற்றவளாய் பார்த்த அதிர்ச்சியில் அழுகையில் வெடித்த கீர்த்தனாவை யாராலேயும் சமாதானப்படுத்த முடியவில்லை.

அம்மாவின் இறப்பில் இடிந்து போய் உட்கார்ந்திருந்த கீர்த்தனாவை மெல்ல மெல்ல வெளியே கொண்டு வர கார்த்தி தன் மனதை திடப்படுத்திக் கொண்டான். தந்தையாய் இருந்த அவன் தாயுமானவன் ஆனான்.

"உனக்கு அப்படி என்னப்பா வயசு ஆகுது ..? 35 வயசு தானே ஆகுது... ஒரு ஆறு மாசம் போகட்டும் நம்ம சொந்தத்திலேயே நல்ல பொண்ணு இருக்கா. கீர்த்தனாவையும் அம்மா மாதிரி நல்ல கவனிச்சுக்குவா .." என்று அவன் தாய் மாமாவும், அம்மாவும், பேச்சை ஆரம்பிக்க, "தயவுசெய்து இந்த பேச்சை ஆரம்பிக்கிறதா இருந்தா இப்பவே நீங்க ஊருக்கு கிளம்புங்க. நான் பார்த்துக்கிறேன் என் பொண்ணை... இனி எனக்கு அவள்... அவளுக்கு நான்"

"அது எப்படிப்பா பொம்பள புள்ளைய தனியா வளப்ப... சங்கீதா நல்ல பொண்ணு அவள மாதிரி ஒரு பொண்டாட்டி உனக்கு கிடைக்க மாட்டா. நீ அவ பேருல எவ்வளவு பாசம் வச்சிருக்கேன்னு எனக்கு தெரியும். ஆனா அதுக்காக அப்படியே வாழ்நாளை கடத்திட முடியுமா? உனக்குன்னு ஒரு துணை வேணாமா ..?"

அவர்கள் பேசப் பேச கீர்த்தனா பயத்தில் அப்பாவை கட்டிக் கொண்டாள். "அப்பா எனக்கு நீங்க மட்டும் போதும். வேற அம்மாவெல்லாம் வேணாம்.நம்ம அம்மா இடத்துல யாரும் வேணாம்..." தேம்பித் தேம்பி அழும் மகளை கட்டிக்கொண்டான் கார்த்தி, "கண்டிப்பா இல்லடா... அம்மா இடத்துக்கு வேற யாருமே வர மாட்டாங்க இது சத்தியம்... ஆனால் உன் அம்மா சொன்னது உனக்கு நினைவிருக்குல்ல. நீ நல்லா படிக்கனும், நல்லா இருக்கணும். அம்மா இறந்த சோகத்தில உன் வாழ்க்கை வீணாக்கிடக்கூடாது ..." அந்தச் சின்ன பெண் சோகத்தில் தலையசைத்தாள்.

டெல்லியில் கிளம்பிய பிளைட் சென்னையை தொட... நினைவுச் சங்கிலி அறுபட்டது. கீர்த்தனா ஏர்போர்ட்டை விட்டு வெளியே வந்து, புக் பண்ணி வைத்திருந்த கேப்பில் பண்ணி ஏறினாள்.

அம்மா இறந்து 12 வருடங்கள் கழிந்து விட்டது . நாளை மறுநாள் 13-வது திதி அதற்காகத்தான் அப்பா சென்னை வீட்டிற்கு ஒரு வாரம் முன்னதாகவே வந்து விட்டார். திதியை மட்டும் சங்கீதாவுடன் வாழ்ந்த அந்த வீட்டில் அவள் நினைவுடன் கொடுப்பது வழக்கம்.

கீர்த்தனாவின் நினைவுகள் பின்னோக்கி பறந்தது. தான் சிறுமியாக அப்பாவை கட்டிக்கொண்டு அழுத நாள் நினைவுக்கு வந்தது. அதன் பின் நடந்ததெல்லாம் நினைவிலாடியது. அப்பா இங்கே இருந்தால் உறவுகள் மறுமணத்திற்கு வற்புறுத்துவார்கள் என்று டெல்லிக்கு மாறுதல் வாங்கிக் கொண்டார். அவளையும் டெல்லி பள்ளியில் சேர்த்தார்.

அதன் பிறகு கார்த்தியின் வாழ்க்கையே முழுக்க முழுக்க கீர்த்தனாவுக்கு என்றாகிப் போனது. அப்பா தனக்காக ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்தது கீர்த்தனாவின் நினைவிலாடியது. விரைவில் சமையல் கத்துக் கொண்டு தனக்கு பிடித்ததை செய்தது. தலை பின்னுவதில் ஆரம்பித்து, பள்ளிக்கூடம் கொண்டு விடும் வரை பொறுப்பாக பார்த்து பார்த்து செய்வார். அதன் பிறகு தான் அவர் வேலைக்கு செல்வார்.சாயங்காலம் வீட்டிற்கு வந்ததும் அவளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பார்.

அவள் பெரியவள் ஆன போது கூட தன்னுடன் வேலை பார்க்கும் ராஜேஸ்வரியிடம் கேட்டுக் கொள்ள ராஜேஸ்வரி அவளுக்கு கூடவே இருந்து எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்தாள்.

அப்பா எவ்வளவு செய்தாலும், அம்மாவின் நினைவு கீர்த்தனாவுக்கு அவ்வப்போது வந்து பாடாய்படுத்தும். ஆனால் வளர வளர. அதை அப்பாவுக்காக வெளிக் காண்பிக்காமல் இருக்க கற்றுக் கொண்டாள். பாவம் தனக்காகவே வாழும் அப்பாவுக்கு தான் செய்யக்கூடியது இது ஒன்றுதான் என்று தோன்றியது ..

அப்பாவின் ஆசைப்படியே நல்லா படிச்சு, காலேஜ் முடித்த பிறகு, எம்.எஸ் படிக்க வெளிநாட்டுக்கு அப்ளை பண்ணினாள். ஆஸ்திரேலியா யூனிவர்சிட்டியில் அவளுக்கு எம். எஸ். கிடைக்க.. அடுத்த நான்கு மாதத்தில் ஆஸ்திரேலியா கிளம்ப வேண்டும்.

கார் காம்பவுண்டுக்குள் நுழைய மகளைப் பார்த்ததும் ஆர்வமாக ஓடி வந்த கார்த்திக் "வாடா கண்ணா..." என்று ஆரத்தழுவிக் கொண்டார். வீடெங்கும் அம்மாவின் வாசம் நிரம்பியிருக்க, ஒவ்வொரு இடத்திலும் அவள் அம்மாவுடன் கழித்த இனிய நினைவுகள் நினைவுக்கு வந்தது. அம்மாவின் சிரார்த்தம் நல்லபடியாக முடிய, அவள் அம்மாவின் படத்தின் முன்னால் நின்று கண்முடி பிரார்த்தித்துக் கொண்டாள் 'அம்மா நீ ஆசைப்பட்டபடி நான் நல்லா படிச்சு மேல் படிப்பு படிக்க வெளிநாடு போறேன் உன் ஆசீர்வாதம் எனக்கு கூடவே இருக்கனும்' என வேண்டினாள். 'அப்பாவை பார்த்துக்கோ கீர்த்தனா ...' அம்மாவின் கண்கள் அவளிடம் பேசியது போல தோன்றியது

அப்பா சோர்வாக தெரிந்தார் "என்னப்பா டல்லா இருக்கிறீங்க..? அம்மா ஞாபகம் வந்திருச்சா ..?"

"அதெல்லாம் ஒன்னும் இல்லடா கீர்த்தனா... உங்கம்மா ஆசைப்பட்டபடி நீ வெளிநாட்டுக்கு படிக்கப் போற ..."

"அப்பா நான் அப்ளை பண்ணது தப்புன்னு இப்ப பீல் பண்றேன்...நானும் போயிட்டா நீங்க எப்படிப்பா தனியா இருப்பீங்க..?" அப்பாவின் கண் கலங்கினாற் போல தோன்றியது. இவ்வளவு நாளும் கீர்த்தனாவுக்காகவே வாழ்க்கை என்றாகிவிட்டது. இனிமேல் தனிமையை பழகிக் கொள்ள வேண்டியதுதான். தன் உணர்வுகளை மறைத்துக் கொண்டார் கார்த்திகேயன்.

"அதெல்லாம் பழகிக்கலாம்மா... கொஞ்ச நாளைக்கு கஷ்டமா இருக்கும் அப்புறம் அப்படியே அதுவே பழகிடும் " என்று சிரித்தார். அவர் சிரிப்பில் ஒரு வெறுமையை உணர முடிந்தது கீர்த்தனாவால் .

"அப்பா நான் ரொம்ப யோசிச்சு தான் ஒரு முடிவு பண்ணினேன்... நீங்க அதுக்கு சம்மதிக்கனும்."

"என்னடா ஏதோ பீடிகை போடுற ..?"

"இல்லப்பா.. நான் சிறு வயசுல பண்ணுன தப்பு என் அம்மா இடத்துல யாருமே வரக்கூடாதுன்னு நினைச்சேன். ஆனா உங்கள பத்தி யோசிக்க மறந்துட்டேன். எனக்கு அந்த வயசுல யோசிக்கவும் தோணல. இது நாள் வரை நீங்க எனக்காகவே வாழ்ந்துட்டீங்க. உங்களுக்குனு ஒரு வாழ்க்கை இருக்கிறதையே மறந்துட்டீங்க. காலம் பூராவும் இப்படியே இருக்க முடியாதுப்பா... தனிமை ரொம்ப கொடியது... கண்டிப்பா நீங்க உங்களுக்குன்னு ஒரு துணையை அமைச்சுக்கனும். உங்களுக்கும் வாழ்க்கையில் பிடிப்பு வேண்டும்"

கடகடவென சிரித்து விட்டார் கார்த்திகேயன் "என்னம்மா சொல்ற... இந்த பாரும்மா... நீ சொன்னதுக்காக டை அடிச்சிருக்கேன். மத்தபடி முடி எல்லாம் நரைக்க ஆரம்பிச்சிருச்சு. காலம் போன காலத்துல கல்யாணம் பண்ணிக்க சொல்றியே... நல்ல காமெடி... உனக்கு ஒரு மாப்பிள்ளை தேடுற வயசுல எனக்கு ஒரு பொண்ணு தேடணும்னு நீ சொல்றது சரியா சொல்லு ... யாராவது ஒத்துக்குவாங்களா ..?"

"மத்தவங்க பேச்சுக்காக நாம ஏன் கவலைபடனும்? அப்படி கவலைபடக் கூடாதுன்னு தானே நீங்க என்னை கூட்டிகிட்டு டெல்லிக்கு வந்தீங்க. அன்னைக்கு நீங்க மாமா சொன்னதை, ஆச்சி சொன்னதைக் கேட்டு இன்னொரு கல்யாணம் பண்ணி இருந்திருக்கலாம் ஆனால் ஒன்னு மட்டும் நிச்சயம் நீங்க இந்த முடிவுக்கு சரின்னு சொன்னாதான் நான் ஆஸ்திரேலியா போறதப் பத்தி யோசிப்பேன். இல்லைன்னா நான் இங்கு கிடைக்கிற வேலைய பாத்துட்டு உங்களுடையே இருப்பேன்"

பதறிப்போனார் கார்த்திகேயன் "என்னம்மா சொல்ற! உங்க அம்மாவுடைய கனவே நீ நல்ல படிக்கனும் வெளிநாட்டில் படிக்கனும்ங்கறதுதான். எல்லாம் கூடி வரும்போது மாட்டேன்னு சொல்றியே ..."

"இல்லப்பா உங்களுக்கு ஒரு துணை அமையாமல் நான் இங்கிருந்து கிளம்புறதா இல்ல.என் ஃப்ரெண்டோட அப்பாவே திருமண தகவல் நிலையம் வச்சிருக்காரு. அதுல உங்களுக்கு ஏத்த மாதிரி நான் ஒரு பொண்ண இல்லை... எனக்கு இன்னொரு அம்மாவை தேடி கண்டுபிடிக்கப் போறேன்..."

தன் தோழியின்' சினேகா திருமண தகவல் மைய'த்திற்கு அடுத்த நாளே கிளம்பினாள் கீர்த்தனா. அவள் தோழி அவளை தன் அப்பாவுக்கு அறிமுகப்படுத்தினாள்.

விவரங்களைக் கேட்ட ராமசாமி , "நல்ல பொண்ணுமா... நல்ல மனசு உனக்கு. அப்பாவுடைய தனிமையை புரிஞ்சுகிட்டு அவருக்கு ஒரு துணை வேணும்னு நினைக்கிறது தப்பில்ல ..."

"அங்கிள்!! அப்பாவுக்கு அப்படி ஒன்னும் வயசில்ல ...46 வயசாகுது ..நாம என்ன ரொம்ப சின்ன பொண்ணையா தேடுறோம். அவங்களுக்கு ஏத்த மாதிரி, அவங்க உணர்வுகளை புரிஞ்சுக்கிற மாதிரி, அவங்களுக்கு ஒரு நல்ல தோழமையை கொடுக்கிற மாதிரி, ஒரு பெண் வேண்டும்."

"கீர்த்தனா நீ தேடுற மாதிரி ஒரு பெண் இருக்கிறா. பெயர் ஆதிரை... வயசு 38. பெரிய குடும்பம் தம்பி தங்கச்சி எல்லாம் படிக்க வைச்சு, எல்லாத்தையும் செட்டில் பண்ணிட்டு தான் கல்யாணம்னு பிடிவாதமா இருந்தா. அப்படியே வயசு 35 ஆயிடுச்சு. இப்ப மூணு வருஷமாதான் அவளுக்கு பொண்ணு பாக்குறோம். வர்ற மாப்பிள்ளைகளை எல்லாம் அவ அம்மாவே தட்டி கழிச்சுடறா. என்னமோ மகளுக்கு 25 வயசுல பொண்ணு பாக்குற மாதிரி நினைப்பு அந்த அம்மாவுக்கு. ஆனா ஆதிரை தங்கமான பொண்ணு. அவ அம்மானால தான் அவளுக்கு கல்யாணம் இழுத்துகிட்டே போகுது. உனக்கு விருப்பம் இருந்தா நாம ஆதிரை கிட்டயும் அவ அம்மாகிட்டயும் பேசலாம்..."

"கண்டிப்பா அங்கிள் நீங்க சொன்ன பிறகு நான் அவங்களை சந்திக்க ஆவலா இருக்கேன் "

"சரிம்மா.. இப்பவே அவங்கள வரச் சொல்கிறேன்" என்றவர் கையோடு ஆதிரையின் அம்மாவுக்கு போன் பண்ணி விஷயத்தை சொல்லி, இருவரையும் தன் அலுவலகத்திற்கு வரச் சொன்னார்.

அவர் சொன்னது போலவே ஆதிரையின் அம்மா அவருடைய அலுவலகத்திற்கு வந்தாள்.

"வாங்கம்மா… ஆதிரை வரலையா?"

" இப்பதான் அவளுக்கு போன் பண்ணினேன் ஆபீஸ்ல பர்மிஷன் சொல்லிட்டு வர்றேன்னு சொன்னா… சித்த நேரத்துல வந்துருவா. எடுத்த எடுப்புல அவ எதுக்கு? நான் பேசி பாத்துட்டு புடிச்சிருந்தா அவ பேசட்டும் "என்றவள் கீர்த்தனாவை மேலும் கீழும் பார்த்தாள்.

'பெரிய பொண்ணாத்தான் இருக்கா …என் பொண்ணுக்கு கல்யாணமே ஆகலைன்னாலும் பரவாயில்லை.. இவ்வளவு பெரிய பொண்ணுக்கு அம்மாவா?' என்ற எண்ணம் மனதில் ஓடியது. தட்டிக் கழித்து விட வேண்டியது தான் என்ற எண்ணத்தில் பேச்சை ஆரம்பித்தாள்.

"சார் சொன்னாரு நீ தான் கீர்த்தனா … இல்லையா? உங்க அப்பாவுக்குத் தான் கல்யாணமா?" அவள் குரலில் இருந்த கேலி என கீர்த்தனாவின் மனதை உறுத்தியது.

"உனக்கு உங்க அப்பான்னா ரொம்ப பாசமா?"

"கண்டிப்பா ஆன்ட்டி.. அவர்தான் என்னுடைய உயிர் ,உலகம் எல்லாம். .."

"உங்க அப்பாவுக்கு ..?"

"அப்பாவுடைய உலகமே நான்தான் … அம்மா இறந்தாலும், கல்யாணம் பண்ணிக்காம என்னை தாய்க்குத் தாயா தகப்பனுக்கு தகப்பனா வளர்த்திருக்கிறாரு"

" இப்ப ஆஸ்திரேலியாவுக்கு ரெண்டு வருஷம் படிக்கப் போற அப்படித்தானே …"

"ஆமாம் ஆன்ட்டி… ரெண்டு வருஷப் படிப்பு நடுவில வர முடியாது. .. அப்பாவுக்குனு ஒரு உறவு இருந்தா அவரப் பத்தி நான் கவலைப்படாம என்னுடைய படிப்பில கவனத்தை செலுத்த முடியும். .. அதான்"

"ரெண்டு வருஷம் ஆஸ்திரேலியாவுல படிச்சிட்டு நீ இந்தியாவுக்குத் தான் வருவ இல்லையா… இந்தியா வந்த பிறகு உங்க அப்பா மகள் பாசம் தொடரும் அப்ப என் மகளோட நிலைமையை யோசிச்சுப் பாத்தியா ..?"

ஸ்தம்பித்துப் போனாள் கீர்த்தனா.

"இந்தப் பாரும்மா கீர்த்தனா .. நான் சுத்தி வளைச்சி பேச விரும்பல. நீ எனக்கு ஒரு வாக்குறுதி கொடுத்தால் எனக்கு இந்த கல்யாணத்துல எந்த ஆட்சேபனையும் இல்ல …"

"சொல்லுங்க ஆன்ட்டி…?"

"படிச்சு முடிச்சதும் நீ இந்தியா திரும்பக் கூடாது … அப்படியே இங்க வந்து கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் ஆஸ்திரேலியாவுல தான் செட்டில் ஆகனும். என் மகளுடைய வாழ்க்கையில நீ தலையிடக் கூடாது .இதுக்கு சம்மதம்னா இந்த கல்யாணம் நடக்கும்."

ரெண்டு கைகளையும் தட்டு ஓசை கேட்க நால்வரும் திரும்பி பார்த்தனர்…

வாசலில் ஆதிரை நின்றிருந்தாள்.

"சபாஷ்.. அருமை மா உன்னுடைய கண்டிஷன் .."

"பை த பை.. நான் தான் ஆதிரை …" என்று தன்னை கீர்த்தனாவுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டவள், அம்மாவைப் பார்த்து, "ரொம்ப நல்லா இருக்குமா… அப்பாவும் பொண்ணுமாய் அழகிய பாசமான குருவிக்கூடு… அந்தக் கூட்டுக்கு வாழப்போன குருவி… பாசமான அந்த குருவிகள பிரிச்சு… பெண் குருவிய வெளிய தூக்கிப் போட்டு விட்டு… கூட்டக் கலைச்சிடுச்சாம். எப்படி இருக்கும்மா இந்த கதை ..?"

"நான் சொல்றது …" ஆரம்பித்த அம்மாவிடம், "இருங்கம்மா நான் இன்னும் முடிக்கல… ஒன்னு எனக்கு நல்லா விளங்கிடுச்சு… எனக்கு ஏன் கல்யாணம் தள்ளிப் போகுதுன்னு காரணம் இப்போ புரிஞ்சிருச்சு. உங்கள மாதிரி அம்மாக்கள் பண்ற போதனையாலதான் வாழப் போற பெண்கள் உறவுகளை பேணத் தெரியாம தடுமாறி வாழ்க்கையையே தொலச்சுட்டு நிக்கிறாங்க. அந்தக் காலத்துல பொண்ணுக்கு புகுந்த வீட்டு உறவுகளை உன் சொந்தமா பாவிச்சு வாழ்க்கை நடத்துன்னு புத்திமதி சொல்லுவாங்க. உங்கள போல அம்மாக்கள் உறவுகளை பிரிக்கிறது எப்படி… குடும்பத்தை கலைக்கிறது எப்படின்னு சொல்லி கொடுக்குறீங்க … கீர்த்தனா நான் இப்ப சொல்றேன் இந்தக் கல்யாணம் நடக்கிறது நடக்காதது வேற விஷயம் ..ஆனால் நான் சத்தியமா உறவுகளை பிரிச்சு அதுல நான் சுகமா வாழனும்னு ஆசைப்பட மாட்டேன். ஏன்னா… உங்க அப்பா எப்படி உனக்காக இன்னொரு கல்யாணம் பண்ணாம வாழ்ந்தாரோ… அதே போல நான் என் தம்பி, தங்கைகளுக்காக இவ்வளவு நாள் கல்யாணமே வேண்டாம்னு இருந்தேன். ஆனா இப்ப உன்ன பார்த்ததும் உன்ன போல ஒரு அன்பான மகள் எனக்கு இருந்தால் எனக்குன்னு ஒரு உறவு பிடிப்பு வாழ்க்கையில இருக்கும்னு தோணுது "

அவள் கைகளைப் பிடித்துக் கொண்ட கீர்த்தனா .. கண்களில் கண்ணீர் வழிந்தோட, "சித்தி.. நீங்க தான் எங்க வீட்டுக்கு ..எங்க அம்மா இடத்துக்கு வரணும்… உங்களை விட எங்கப்பாவை யாரும் நல்லா புரிஞ்சுக்க முடியாது … உங்க வாழ்க்கையில நான் என்னைக்குமே குறுக்க வரமாட்டேன் …"

"நீ அப்படியெல்லாம் சொல்லத் தேவையில்லை கீர்த்தனா . இந்தக் கல்யாணம் நடந்தால் நீ என் மகள்… நான் பெற்றெடுக்காத மகள் … என்னை சித்தி என்று கூப்பிட வேண்டாம் உனக்கு ஆட்சேபணை இல்லைனா 'அம்மா'ன்னு கூப்பிடலாம் "

கண்ணீருடன் தலையசைத்தாள் கீர்த்தனா.

அடுத்த ஒரு மாத மாதத்தில் சர்வதேச விமான நிலையத்தில் அப்பாவும் அம்மாவும் கையசைத்து வழியனுப்ப … மனம் நிறைய… நிம்மதியுடன் படிக்க ஆஸ்திரேலியா கிளம்பினாள் கீர்த்தனா.

பர்ஸில் இருந்த அம்மாவின் போட்டோவை எடுத்து "அம்மா நான் செஞ்சது சரிதானே அப்பாவை நீ என்கிட்ட தானே ஒப்படைச்ச. கடைசில என்னை எப்படி அப்பாகிட்ட ஒப்படைச்சியோ… அதே போல நானும் அருகில் இல்லாத நிலையில் அப்பாவை நல்லபடியா கவனிச்சுக்கறதுக்கு ஒரு துணை வேணும்னு தோணுச்சு .என் முடிவு உனக்கு சம்மதம் தானே… இனி நான் நிம்மதியா என் படிப்பை முடிச்சு உன் கனவை நிறைவேத்துவேன்."

போட்டோவில் இருந்த சங்கீதாவின் புன்முறுவல் அவளை ஆசீர்வதிப்பது போல..ஆமோதிப்பது போல தோன்றியது…

அம்மாவின் படத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்ட அவள் கண்களில் கண்ணீர் அருவியாய் கொட்டியது.




# ஆரச்சாலை



S.S.நூருல் இர்ஃபான்



ஆரச்சாலை, ஆபத்து மிகுந்த சாலையில் டாக்டர் சென்பாலன் அவர்களின் ஓர் அழகிய பயணம்.

பல்லாவரம் பலருக்கும் அறிந்த இடம், அது பல உயிர்களை பலி வாங்கும் இடமாக மாறுவதை டாக்டரின் எழுத்தில் படிக்கும் போது நம் கண் முன் நடப்பதை போன்ற உணர்வு ஏற்பட வைக்கின்றது.

கதைகளில் வரும் அனைத்தும் கற்பனையே என்று டாக்டர் புத்தகத்தின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டுள்ளார். ஆனாலும் பைக் ரேசர் தீரன் லைவில் லைக் பண்ணுங்க, ஷேர் பண்ணுங்க, கமெண்ட் பண்ணுங்க, சப்ஸ்கிரைப் பண்ணுங்க என்று வார்த்தையை கூறி விட்டு அவன் பன்னும் அலப்பறையை விவரிக்கும் போது மஞ்சள் வீரனைக் கண் முன் கொண்டு வந்து விடுகின்றார்.

அப்பாவாக இருந்து கொண்டு ஈச்சங்காடு ஈஸ்வரி அம்மாவாக மாறி காவிக்குள் அதிகாரிகளைப் போட்டு, அப்பாவி மக்களை ஏமாற்றி, ஆரச்சாலையை பேய்சாலையாக மாற்றி, கல்லா கட்டும் கதையை கலக்கலாக எழுதி இருக்கின்றார்.

பேயிடமிருந்து ஆரச்சாலையை மீட்டெடுப்பதற்கு திருவின் பைக் ஓட்டம், திரு பைக்கில் செல்வதைப் படிக்கப்படிக்க அவனைப் பைக்கிலிருந்து இறக்கிவிட்டு நான் பைக் ஓட்டுகின்றேன் என்ற நிலைக்கு வந்துவிட்டேன். குறிப்பிட்ட பைக் பறக்கும் இடம் வரும்போது நானும் பறந்துவிட்டேன், ஒரு நடுக்கத்தில் திடுக்கிட்டு ஒரு பெரு மூச்சு விட வைத்து விட்டார் எழுத்தாளர் சென்பாலன்.

பல காவல் அதிகாரியின் தலை தப்பிப்பதற்கு கார்த்திக் ஆல்டோவின் தலை அடமானம் வைக்கப்படுவதையும், அந்த பேயைக் கண்டுபிடிப்பதற்கு எடுக்க கூடிய முயற்சியையும் மிகவும் அழகாக எழுதியுள்ளார் எழுத்தாளர் என்று சொல்வதை விட துப்பறிவாளர் சென்பாலன் என்று தான் சொல்ல வேண்டும்.

விஞ்ஞானமும், அறிவியலும் பேயாக மாறுவதை எழுத்து வடிவில் அழகாக எழுதி எழுத்தாளர் விஞ்ஞானி சென்பாலனாக மாறிவிட்டார்.

பல்லாவரத்தின் பழைய வரலாறும், முஹர்ரம் மாதத்தில் முஸ்லிம்களில் சிலர் கொண்டாடப்படும் அஞ்சு கை கொண்ட பஞ்சாவின் வரலாறும் ஆரச்சாலையை மேலும் அழகுப் படுத்தியுள்ளது.

மரணத்தை நோக்கிப் பாயும், பைக் ரேசர்களின் மரணங்கள், மரணத்தை வைத்து வியாபாரம் செய்யும் ஆன்மீகம், அதை வழி நடத்தும் உயரதிகாரி, அனைத்தையும் கண்டுபிடிக்கும் துப்பறிவாளர்கள் என்ற எல்லா கதாபாத்திரங்களையும் எந்தவொரு தொய்வில்லாமல் அருமையான தொடர்புடன் படிப்பவரையும் புத்தகத்தை தொடர்பை துண்டிக்கவிடாமல் ஈர்க்க வைத்துள்ளார் எழுத்தாளர்.

மக்களின் மடமைத் தனத்ததிற்கும், மூட நம்பிக்கைகளுக்கும் எதிராக எழுதுவதும் ஒரு புரட்சி தான், அதை திராவிட சித்தாந்தத்தின் வளர்ப்பு டாக்டர் சென்பாலனின் எழுதும்போது கேட்கவா வேண்டும் மிகவும் அருமை.

# அந்த மாலை பகுதி –2/4

## வினோத் - வினோதினி

ஸ்ரீராம்



"ஏன் பொய் சொல்லணும்? நாங்க அவனுக்கு கல்யாணம் பண்ணணும்னுதான துடிச்சுக்கிட்டிருக்கோம்... வேற ஏதாவது சொல்லக் கூடாத பிரச்னை இருக்கா?"

"அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை அங்கிள்... நீங்களும் லவ் மேரேஜ்னு வினோத் சொல்லி இருக்கான். நீங்க உங்க மேட்டரை உங்க அப்பாம்மா கிட்ட ரொம்ப வித்தியாசமா ப்ரசண்ட் பண்ணினீங்களாம்... இவனுக்கு நீங்க கேட்டும் கூட உங்களிடம் சொல்ல என்னவோ தயக்கம்... என்ன இருந்தாலும் இதற்கு எல்லாம் பேரன்ட்ஸ் கிட்ட சொல்ல ஒரு தயக்கம் நேச்சுரலாவே இருக்கும்தானே? அவனே பார்த்தா கூட உங்க ஜாதியிலேயே பாருன்னு சொன்னீங்களாமே... சொன்னான். என்ன அங்கிள் அப்படிப் பார்க்கறீங்க... நான் வேற ஜாதி இல்லை.. கவலைப்படாதீங்க.. ஓ.. அவன் இவன்னு சொல்றேனேன்னு பார்க்கறீங்களா... அவர் இவர்னுல்லாம் உங்களுக்காக சொல்லலாம், இம்ப்ரஸ் பண்ணலாம்.. ஆனா நாங்க அப்படி பேசிக்கறதில்ல அங்கிள்... எதுக்கு போலித்தனமா... எனக்கு அதெல்லாம் பிடிக்காது... இப்போ கூட படபடன்னு பேசிகிட்டீங்களாமே... கல்யாணமே வேண்டாம்னு சொன்னானாமே... ரொம்பக் கவலை ஆயிட்டீங்க போல..."

திடீரென வந்து எதிரே உட்கார்ந்து படபடவென பேசும் அந்தப் பெண்ணை நிதானமாகப் பார்த்தார் மூர்த்தி.

என்ன பெண் இவள்... நிஜம் பேசுகிறாளா? பொய்யா? இப்படிக் கூட வந்து பேசுவார்களா? சற்றுமுன் நடந்ததைக் கூடச் சொல்கிறாளே...

"என்ன அங்கிள்.. இப்படியெல்லாம் பேசறாளேன்னு பார்க்கறீங்களா... வினோத்திடம் விஷயத்தை விட்டா இழுத்தடிச்சுடுவான் அங்கிள்... அவன் எப்பவுமே அப்படிதான்... உங்களுக்குத் தெரியாதா? வயசாவுது இல்ல... சட்டுபுட்டுனு விஷயத்தை ஓபன் பண்ணுடான்னா கேட்க மாட்டேங்கறான்... ஸாரி அங்கிள்... நான் அவன் இவன்னு சொல்றது பழக உங்களுக்கு கொஞ்ச நாளாகும்..."

"உன்னைப்பற்றி சொல்லு"

"நான் வீட்டுக்கு ஒரே பொண்ணு... நோ சிஸ்டர்ஸ்... நோ பிரதர்ஸ்... எங்கப்பா போன மாசம்தான் ரிடையர் ஆனார். அவர் என்னிடம் ரொம்பப் பிரியமா இருப்பார். என்ன பார்க்கறீங்க... அவருக்குத் தெரியுமான்னு கேட்க நினைக்கறீங்க... கரெக்ட்டா? தெரியும் அங்கிள்... வினோத் மாதிரி இழுத்தடிக்க விரும்பலை நான். முன்னாடியே சொல்லிட்டேன். ஒரே ஒரு விஷயம் என்ன தெரியுமா அங்கிள்... எனக்கும் வினோத்துக்கு மூணு மாசம்தான் வயசு வித்தியாசம்... பயப்படாதீங்க... நான் மூணு மாசம் சின்னவள்!" சிரித்தாள் வினோதினி.

"அவன் பேர் வினோத். என் பேர் வினோதினி. இந்த விஷயமே எங்களை ஒருவரை ஒருவர் பார்க்க வச்சுது அங்கிள்..."

"......................"

"என்ன அங்கிள்... நல்லா பேசுவீங்கன்னு வினோத் சொன்னான். சும்மாவே இருக்கீங்க... எங்களுக்குள்ள முதல்ல சண்டைதான் வந்து கொண்டிருந்தது. ஒரே மாதிரி பேர்ங்கறதால பிரெண்ட்ஸ் கிண்டல் அடிச்சாலும் இவன் ஒதுங்கி ஒதுங்கிப் போனான். போகப்போக அண்டர்ஸ்டேண்டிங் வந்துடுச்சு..."

அண்டர்ஸ்டேண்டிங்கா? அப்படீன்னா?

அவளையே பார்த்தார் மூர்த்தி. "வினோத் ஒண்ணும் சொன்னதே இல்லையே... கல்யாணமே வேண்டாம்னுதான் சொல்றான்...நீ யாரையாவது பார்த்திருந்தா சொல்லுன்னு கூட கேட்டுப் பார்த்தும் இல்லைன்னுதானே சொன்னான்?"

"பொய் அங்கிள்... நாங்க ஒரு வருஷமா பழகறோம்.."

"உன் நட்சத்திரம்?"

"உத்திரம் அங்கிள்... உங்க பையன் புனர்பூசம் இல்லையா... பொருந்தும். கவலைப்படாதீங்க.. வேற கோத்ரம்தான். அதுவும் பிரச்னை இல்லை. ஜாதகத்துல பத்துக்கு ஏழு பொருத்தம் இருக்கு.. நானே பார்த்துட்டேன்."

"உனக்கு ஜாதகம் பார்க்கத் தெரியுமா? "

"தெரியும் அங்கிள்... கத்துக்கிட்டேன்"

"உங்கப்பாவுக்கு இதில் முழு சம்மதமா? அவருக்கு ஒண்ணும் வருத்தமில்லையா?"

"வருத்தம் ஆரம்பத்துல இல்லாம இருக்குமா? இருந்தது. அப்புறம் சமாதானமாயிட்டார்... யு நோ அங்கிள்.. அம்மா இல்லைங்கறதால நான் அவருக்கு ரொம்ப செல்லம். இருந்தாலும், இருங்க... அவரையே கேட்டுடலாமே..." போனை எடுத்தவள் அப்பாவின் பெயரைத் தெரிவு செய்து கால் செய்தாள்.

"வேண்டாம்.. வேண்டாம்.. அவர் கூட நான் இப்போ பேச விரும்பலை"

போனைக் கீழே வைத்து விட்டாள் வினோதினி. மூர்த்தி விட்ட பெருமூச்சு முடியும் முன் அந்த அறைக்குள் நுழைந்தவரைப் புன்னகையுடன் வரவேற்றாள் வினோதினி.

"அப்பா..." என்று மூர்த்தியைப் பார்த்தவள், அப்பாவிடம் "அங்கிள்" என்றாள்.

"தெரியுமே... போட்டோ காமிச்சுருக்கியே.." என்று புன்னகைத்தார் அவர். "ஐயம் பாலாஜி" என்றார் இவருக்காய் கைநீட்டி.

அவர் விரல்களைத் தொட்டு கையை இழுத்துக் கொண்டவர் "ஃபோட்டோவா?" என்றார்.

"அப்பா... " என்று அவரைப் பார்த்தவள், 'ஓ... கமான் அங்கிள்... நாங்க ஒரு வருஷமா பழகறோம்... உங்க ஃபோட்டோ என்கிட்டே இருக்காதா?"

மூர்த்தி புன்னகைக்கவில்லை.

பாலாஜியைப் பார்த்தார். "உங்களுக்கு இதில் சம்மதமா? வருத்தம் ஒன்றும் இல்லையா? என் பையன் பற்றி உங்களுக்குத் தெரியுமா?"

"ஓ... நல்லாத் தெரியும்... சில ஜோசியர்கள் உங்க பையன் ஜாதகத்துல செவ்வாய் தோஷம் இருக்குன்னு சொல்வாங்கன்னு கூட தெரியும். ஆனால் அதெல்லாம் இல்லை. எங்களுக்கு பிரச்னையும் இல்லை. என்ன பிரச்னை இருந்தால்தான் இனிமேல் என்ன செய்ய முடியும்? ரெண்டு பேரும் முடிவு பண்ணிட்டாங்க..."

"செவ்வாய் தோஷமா? என் பையனுக்கா?"

"அப்பா.. கொஞ்ச நேரம் சும்மா இருக்கீங்களா? கிரேஸி மோகன் டிராமால வர்ற கேரக்டர் மாதிரி வார்த்தைக்கு வார்த்தை ஏதாவது போட்டுக் கொடுத்துகிட்டே இருப்பீங்களா? அதெல்லாம் ஒண்ணும் இல்லை அங்கிள்..."

"கொஞ்ச நாள் கழிச்சு எங்களுக்குள்ள ஒத்துவரல்ல... நாங்க பிரியறோம்னுல்லாம் சொல்லக் கூடாது.. நல்லா யோசிச்சு முடிவெடுக்கணும்."

"அம்மா.. நீ ரொம்ப வேகமா இருக்கே... இது விளையாட்டில்லம்மா... என் பையன் கொஞ்சம் முன்கோபி.."

"ஐயோ... கொஞ்சமா...? வார்த்தைக்கு வார்த்தை எதிர்வாதம் பண்ணுவான்...எதையும் லேசுல ஒத்துக்க மாட்டான்..."

மூர்த்தி ஆச்சர்யமானாலும் அவள் குறிக்கிட்டதைத் தடை செய்து தொடர்ந்தார்.

"கொஞ்ச நாள் கழிச்சு எங்களுக்குள்ள ஒத்துவரல்ல... நாங்க பிரியறோம்னுல்லாம் சொல்லக் கூடாது.. நல்லா யோசிச்சு முடிவெடுக்கணும். என்னைப்பொறுத்தவரை இந்தக் காலத்துப் பொண்ணுங்க, பையனுங்க எல்லாம் கல்யாண விஷயத்துல பொறுப்பு இல்லைன்னுதான் தோணுது...."

"அங்கிள்... அந்தக் கவலை எல்லாம் உங்களுக்கு வேணாம்... இன்னிக்கு எல்லாம் முடிவு செய்துடலாம். நீங்க பேசறதைப் பார்க்கும்போது உங்களுக்கு சம்மதம்னு தெரியுது...கரெக்ட்டா?"

வினோத்தும் வார்த்தைக்கு வார்த்தை "கரெக்ட்டா?" என்று கேட்பது நினைவுக்கு வந்தது.

இவளாகவே முடிவு செய்து கொள்கிறாளே... அவர் மௌனம் தொடர,

வினோதினி ஃபோனை எடுத்து விட்டு வைத்தாள்.

வினோத் உள்ளே நுழைந்தான். "அதுக்குள்ற என்னைக் கூப்பிட்டுட்டே.." என்றான் விநோதினியைப் பார்த்து. "அப்பா" என்று புன்னகைத்தான்.

மூர்த்தி செயலற்று அமர்ந்திருந்தார். 'சற்றுமுன்தான் என்னுடன் வார்த்தையாடினான்....'

சர்வர் இந்தப் பக்கமே நீண்ட நேரமாய் வரவில்லை. தூரமாய் நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார். மூர்த்திக்கு சந்தேகமாய் இருந்தது.

(தொடரும்)

(முதல் பகுதியில் 'யார் நீ..?' என்ற அத்தியாயத்துக்கான தலைப்பு தவறுதலாக கதையின் தலைப்பாக போடப்பட்டிருந்தது. இந்தப் பகுதி முதல் கதையின் தலைப்பு 'அந்த மாலை' எனவும், அதன் கீழே அத்தியாயத்துக்கான தலைப்பும் இருக்கும், நன்றி)

# யார் சிறந்தவர்கள்?



**மணிமேகலை இராஜாராம்**
**பாரதி நகர், முகவை**



வழக்கம் போல பள்ளிக்கூட நாட்களுக்கான பரபரப்பான காலை...

மனீஷாவையும், முத்தழகையும் வேகமாக இழுத்துக் கொண்டு பள்ளிப் பேருந்து நிற்குமிடம் நோக்கி ஓடினேன்.

"உங்க பஸ்சு இன்னும் போகலத்தா.... பதறாம வாங்க" என்று சத்தமாகச் சொன்ன வாசுகி அம்மாள் தனது பேத்திகளுடன் நின்று கொண்டிருந்தார்.

"இப்பத்தான் பெரிய பேத்திக்கு பஸ்சு வந்துட்டு போகுது, சின்னவுகளுக்கு இனிமேத்தேன் வரும்...ஆமா, உங்க பெரிய மக எத்தனாவது படிக்கிறாக..."

"பெரியவுக ஒம்போதாவது படிக்கிறாக... சின்னவுக ஒன்னாவது..."

"ஒம்பதாவதா... அப்ப அவுகளுக்கு இப்பவே பத்தாவது பாடமுல்ல நடத்துவாக. நல்லா கவனமா படிக்கச் சொல்லு... நல்ல மார்க் வாங்கனுமுத்தா' என்று மனிஷாவைப் பார்த்துச் சொன்னார்.

அப்போது பள்ளிப் பேருந்து வந்தது. இருவரையும் அனுப்பி விட்டு வீடு வந்து சேர்ந்து வீட்டு வேலைகள் பாத்துக் கொண்டே இருந்தாலும், பத்தாம் வகுப்பு பாடங்கள் இப்பொழுதே நடத்த ஆரம்பித்தால், மனீஷாவின் ஒன்பதாம் வகுப்பு பாடங்கள் என்ன ஆகும் என்ற சிந்தனை ஓடிக்கொண்டே இருந்தது. 'எதுவாகினும் சந்திப்போம்' என்று உள்மனம் சொல்லியது.

மாலை பள்ளிப் பேருந்துக்காக காத்திருக்கும் போது, வாசுகி அம்மாளிடம் திரும்பவும் கேட்டேன், "எப்படிம்மா சொல்றிங்க... பத்தாவது பாடம்தான் நடத்துவாங்கனு"

"எங்க பெரிய பேத்திக்கி அவுக ஸ்கூல்ல அப்புடித்தானே நடத்துனாக"

"அப்படியா..."

'அப்ப அவுக ஸ்கூல்ல அப்படி இருக்கும்...மனீஷா ஸ்கூல்ல அந்த மாதிரி இருக்க வாய்ப்பிருக்காது' என நான் மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்.

பள்ளிப் பேருந்து வந்தது...

பேருந்தை விட்டு இறங்கி வீடு போகும்வரை மனீஷாவும், முத்தழகும் அன்றைய பள்ளியில் நடந்த விடயங்களை ஒவ்வொன்றாய் சொல்லிக்கொண்டே வருவார்கள், நானும் கதை கேட்பதுபோல கேட்டுக் கொண்டே வந்தேன்.

அப்போது மனீஷா சொன்னாள், "அம்மா அடுத்த வாரத்திலிருந்து பத்தாப்பு பாடம் நடத்துவாங்களாம்..." என்றதும் என் மன ஓட்டங்களை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வெவ்வேறு விடயங்களை பேசிக்கொண்டே வீடு வந்து சேர்ந்தோம்.

வழக்கம்போல அவர்கள் இருவரும் வீட்டுப் பாடங்களை செய்து கொண்டிருக்க, அவர்களுக்கான தேநீரை உண்டாக்கிக் கொண்டிருக்கும்போது, 'இந்த ஒன்பதாம் வகுப்பு பாடங்கள் முழுமை பெறாமல் போகிறதே எனற எண்ணமும் கவலையும் எனக்குள் இருந்தன. இருந்தாலும், மனீஷாவிடம் மிகுந்த கவனமுடனும், நன்றாக படித்து மதிப்பெண் வாங்க வேண்டும் என்ற அறிவுரையை சொல்லிவிட்டு அன்றைய வீட்டுப் பாடத்திற்குள் கரைந்து போனேன்.

அடுத்த வாரம், பத்தாம் வகுப்பு பாடங்கள் பள்ளியில் தொடங்கி மாதாந்திர மாதிரித் தேர்வுகளும் வைக்கத் தொடங்கினர், அதில் மனீஷாவும் நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்தாள். அடிப்படையில் அவள் நன்றாக படிக்கும் மாணவிதான் என்றாலும் எப்போதும் கணக்கு பாடத்தில் மட்டும் 70% மதிப்பெண்ணிற்கு மேல் எடுக்கமாட்டாள் என்பது எனக்கு கொஞ்சம் வருத்தமாக இருந்தாலும் அவளிடம் காட்டிக் கொள்ளாமல் தேர்வு சமயங்களில் அதிக கவனம் கொடுத்து படிக்கச் சொல்வேன்.

கணக்குப் பாட மதிப்பெண் குறித்து அவளுக்கும் எப்போதும் வருத்தம் இருக்கும். “அம்மா என்னோட ஃப்ரென்ட்செல்லாம் ட்யூசன் படிக்கிறாங்கமா... டியூசன் சாரும் முக்கியமான கேள்விகளெல்லாம் குறித்து கொடுப்பாராம்”என்றாள்.

நான், “உனக்கு முக்கியமான கேள்விகளை நான் குறித்து தர்றேன், கவலைப்படாதே... கவனமா வகுப்பில் சொல்லிக் கொடுப்பதை கவனி, மற்றதை பாத்துக்கலாம்” என்று சொன்னேன்.

சில மாதங்கள் கடந்தது, பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடந்தது. அங்கே மனீஷாவின் வகுப்பாசிரியரை சந்தித்து. “சார்... மனீஷா எப்படி படிக்கிறாங்க...” எனக் கேட்டேன்.

“நல்லா படிக்கிறாங்க....”

“கணக்குப் பாடத்தில் மதிப்பெண் குறைவா எடுக்குறாங்களே சார்...”

“பொதுத் தேர்வில் சதம் எடுக்கலைன்னா என் சட்டைய பிடிச்சுக் கேளுங்க மேடம்...” என்று அவர் சொன்னதும் எனக்கு மன வருத்தமாகிவிட்டது.

மனீஷா ஓரளவு நல்லா படிக்கிற மாணவிதான், இதில் நடுநிலையாக படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் மனநிலையையும் மன வருத்தங்களையும் நான் அங்கே காண முடிந்தது.

அப்போது எனது அலைபேசி ஒலித்தது...மனீஷாவின் தாத்தாதான்

‘ஹலோ...சொல்லுங்க மாமா”

“என்னமா...மீட்டிங் முடிஞ்சதா?”

“முடிஞ்சதுங்க மாமா...” என ஆரம்பித்து வகுப்பாசிரியர் சொன்னதையும் சொன்னேன்.

“இனிமேல் அவளைப் பற்றி அங்குள்ள வாத்தியார்கிட்ட கேட்க வேண்டாம்.. எம் பேத்தி நல்லா படிச்சிக்கிரும்” என்று சொல்லி, வீட்டு விசயங்களைப் பேசிவிட்டு வைத்தார்.

அதன் பிறகு நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் மதிப்பெண் அட்டையை பார்த்து கையொப்பம் இடுவதோடு சரி! நிறைகுறைகளை நாங்களே சரி செய்து கொண்டோம். மனீஷாவும், தொடர்ந்து நன்றாக படித்தாள்.

கடைசியாக நடந்த பெற்றோர் கூட்டத்தில் கையொப்பமிட்டு வரும்போது ஒரு ஆசிரியர், “மேடம் நீங்க மனீஷா அம்மாவா?” எனக் கேட்டார்.

“ஆமாங்க சார்”

“மனீஷா நல்லா படிக்கிறாங்க மேடம்” என்றதும் அவ்வளவு சந்தோசமாக இருந்தது. காரணம்! ஒவ்வொரு மாதாந்திர தேர்வும் பொதுத்தேர்வு போல கவனம் செலுத்தி படிக்க வைத்தேன். நான் மனீஷாவின் வகுப்பில் மட்டும்தான் அமரவில்லை, மற்றபடி எனக்கு அவளைவிட அழுத்தம் அதிகமாகவே இருந்தது. இருப்பினும், இந்த உழைப்பிற்கு மற்ற ஆசிரியர்களிடமிருந்து அதற்கான மதிப்பும், ஊக்கமும் கிடைக்காதது மனீஷாவுக்கு கொஞ்சம் வருத்தம் இருந்தது.

எல்லா பாடங்களிலும், 90% மதிப்பெண் எடுக்கும் மனீஷாவுக்கு வகுப்பாசிரியர்களின் அறிவுரையும், ஆலோசனையும் கிடைக்காமல் இருந்ததும் மனதளவில் ஒரு சிறிய கஷ்டமும் இருந்தது. பெற்றோராக நாம் சொல்வதைக் காட்டிலும் ஆசிரியரின் அறிவுரையை அவர்கள் பெரும் ஊக்கமாக நினைத்தனர். தினமும், பிள்ளைகள் பள்ளி முடிந்து வரும்போது அவர்களின் முகமறிந்து ஏதோ நடந்துள்ளது என்று பொறுமையாக கேட்டுத் தெரிந்து கொள்வேன்.

ஒருநாள் வகுப்பில் தேர்வு பேப்பர் கொடுத்ததாகவும், அதில் 99 எடுத்ததாகவும் ம்கிழ்வில்லாமல் கூறினாள்.

“அருமை... அத எதுக்கு கவலயாச் சொல்ற..?”

“இல்லமா... அந்த பேப்பரக் கூட சார் வந்து குடுக்கலமா...”

‘ஏன்? என்னாச்சு..? அப்போ யார் கொடுத்தாங்க..”

“க்ளாஸ் லீடர்கிட்ட கொடுத்து எல்லார்கிட்டயும்...குடுக்க சொல்லிட்டாங்க...”

“அதுக்கு நீ ஏன் வருத்தப்படுற..?”

“அவுங்க எதிர்பார்த்த மாணவ, மாணவி மார்க் எடுக்காம மத்தவங்க எடுத்தா பாராட்டவோ... வாழ்த்து சொல்லவோ அவங்களுக்கு மனம் வருவதில்லமா...” என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டாள்.

‘நாங்களும் நன்றாக கடின உழைப்போடுதானே படிக்கிறோம், எங்களையும் பாராட்டி ஆலோசனைகள் கொடுக்கலாமே..’ என்று ஆதங்கப்படும் மனீஷாவுக்கு நான் என்ன சொல்லி தேற்ற முடியும்..?

அதன் பின்னான சில நாட்களில் மதிப்பெண் அடிப்படையில் முதலிடம் பெறும் மாணவர்களைத் தரம் பிரிக்கும் படலம் நடந்தது. அதில் மனீஷா வகுப்பில் இருந்த 44 மாணவர்களில் 12 மாணவர்கள் மட்டும் தனியாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்குச் சிறப்பு வகுப்புகளை ஆரம்பித்தனர். அதில் மனீஷாவின் நண்பர்களும் இருந்தனர். அதில் மனீஷா மட்டும் இல்லாததை ஒரு கவலையோடு பகிர்ந்த அவளுக்கு எந்த வார்த்தைகளால் சமாதானப்படுத்த முடியும்...?

தினமும் பள்ளி முடிந்து வரும்போது இது பற்றியே பேச ஆரம்பித்தாள். இந்த பிரிவினைகளுக்கு முன்பெல்லாம் மாணவர்களுக்குள் ஆரோக்கியமான பகிர்தலும், நல்ல கலந்துரையாடலும் இருந்தது அவளின் பேச்சில் தெரியும். இப்போது அந்த 12 பேரை பார்க்கவே முடிவதில்லை என்றும், அப்படியே பார்த்தாலும் முன்புபோல நண்பர்கள் யாரும் பேசுவதில்லை என்றும் அவள் குறைபட்டுக் கொண்டாள்.

“அம்மா அந்த 12 பேருகிட்டயும், யாரு கூடவும் பேசக்கூடாதுனும், இங்கு நடத்தும் பாடங்களை மற்ற மாணவர்களோடு பகிர்ந்துக்கக் கூடாதுனும் சொல்லியிருக்காங்கம்மா... அதைவிட இப்ப எங்களுக்கு சார்களும் அதிகமா வர்றதே இல்லமா....”

"சார்க ஏன் வர்றதில்ல...."

"போர்ஷன் எல்லாம் முடிச்சாச்சு... நாளைக்கி டெஸ்ட்டு படிச்சிட்டு வாங்கனு மட்டும் சொல்றாங்க..."

'சரி...சங்கீதா, காயத்ரி, ராஃபியா யாருமே உங்ககிட்ட பேசுறதே இல்லையா...?"

"ம்ஹூம்... பாத்தாக்கூட யாரையோ பாக்குற மாதிரி பாக்குதுகமா..."

மனதிற்குள், தனியா பிள்ளைகள பிரிச்சு, பாடத்தைவிட வன்மத்த கத்து கொடுத்திருக்காங்களேனு மிக வருத்தமாக உணர்ந்தேன்.

இதைவிட கொடுமை, மனீஷாவின் நண்பர்கள் என்னிடமும் நன்றாக பேசுவார்கள், இந்தப் பிரிவினைகளுக்குப் பிறகு அவ்வப்போது நான் பள்ளிக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் அவர்கள் என்னைக்கூட பார்த்தும் பார்க்காதது போல செல்வதை கண்கூடாக பார்த்திருக்கிறேன், பெற்றோருக்கே இந்த நிலையெனில் வகுப்பில் மற்ற மாணவர்களின் நிலையை எண்ணி மிகவும் வருந்தினேன். இது இரு நாட்டுப் பிரிவினையைவிட கொடுமையானதாக இருக்குதே என்ற எண்ணம் மேலோங்கி நின்றது.

அவைகளை கடக்க மனீஷாவிடம் நல்லாப் படி என்பதே என் வார்த்தைகளாக இருந்தது. ஒரு சமயத்தில் அனைத்து குழந்தைகளும், சிட்டுக்குருவிகளின் குடும்பம்போல பாடம் சம்பந்தமான சந்தேகங்களை கலந்து பரிமாறிக் கொண்டதை கண்ட எனக்கு இந்தப் பிரிவினையை காணச் சகிக்கவில்லை.

பிரிவினை இல்லாமல் இருக்கத்தான் அனைவருக்கும் சமமான கல்வி என்பதே.. 'கல்வி ஒன்றைக் கற்றுக் கொள்... கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்ற கல்வியால் பிரிவும் கவலையும் வந்தது வருத்தமே!

நாட்கள் நகர்ந்தன...

அந்த 12 பேர்களின் செயல்பாடுகள் வெகுவாகவே மாறிப் போயிருந்தது. மற்றவர்களை எதிரிகள் போல பார்க்கத் துவங்கினர். அவர்களின் நடவடிக்கைகள் முற்றிலுமாக மாறியிருந்தது.

ஆசிரியர்களிடமும் அந்த வித்தியாசங்கள் தெரிந்தது. 12 பேர்களைத் தவிர மற்ற மாணவர்களிடம் ஒரு அன்பான பேச்சோ, ஊக்கப்படுத்தலோ இல்லாமல் இருந்தது. மாதாந்திர தேர்வு முடிவு பேப்பர்கள்கூட சம்பத்தப்பட்ட ஆசிரியர்கள் கொடுப்பதில்லை. அவ்வாறு அந்தந்த ஆசிரியர்களே கொடுக்கும்போது அதில் உள்ள பிழை, குறைகளைச் சொன்னால் மாணவர்களுக்கு ஒரு பேருதவியாக இருக்கும்., தவறுகளை சுட்டிக் காட்டும்போது அவர்களும் அதை திருத்திக் கொள்ள வாய்ப்புண்டு என்பதை இந்த ஆசிரியர்கள் உணர்வதில்லை என்ற வருத்தம் எனக்கு இருந்தது.

பொதுத் தேர்வுக்கான நாட்கள் நெருங்கிக் கொண்டு இருந்தது, எல்லா மாணவர்களும் படிப்பில் மூழ்கி இருந்தனர். அனைத்து மானவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடைபெறும் என்ற குறுஞ்செய்திகள் பள்ளியில் இருந்து வரும். ஆனால்! அங்கே நடப்பது வேறாக இருக்கும். முதல் மதிப்பெண் மாணவர்கள் என்ற அந்த 12 பேருக்கு தனியாக வகுப்புகள் நடக்கும்., மற்றவர்கள் அவரவர் படித்துக் கொள்ளவும் என்பார்கள்.



எனக்கு இதில் முரணாக தெரிவது இவர்கள் அனைவருமே நன்றாக படிக்கும் மாணவி, மாணவர்களென 10ம் வகுப்பு 'அ' பிரிவு என்று எடுத்த பின்பு இப்போது ஏனிந்த மாற்றம் என்ற கேள்வி எனக்கு இருந்தது.

இந்த சமயங்களில் தினமும் பள்ளியிலிருந்து அலைபேசிக்கு மாதிரி வினா-விடைகள் என PDF வந்த வண்ணம் இருக்கும், அதை உடனுக்குடனே பிரிண்ட் எடுத்து கொடுத்துக் கொண்டே இருப்பேன். மனீஷாவுக்கு நான் இருக்கிறேன் என்ற உறுதுணையாக நம்பிக்கை வார்த்தைகளை கொடுத்துக் கொண்டே இருந்தேன்.

பொதுத் தேர்வும் வந்தது, அந்த சமயத்தில் அந்த 12 பேரிலிருந்து ஒரு மாணவி இவற்றையெல்லாம் நன்றாக படித்துக்கொள் என்று ஒருசில குறிப்புகளை அலைபேசி வழி அனுப்பியிருந்தார். ஆனால்! மனீஷா முக்கியமான குறிப்புகளைத் தவிர்த்து அனைத்தையுமே முன்னரே படித்துக் கொண்டிருந்தாள், அதனால் அந்த குறிப்பு பெரிய வித்தியாசத்தைக் கொடுக்க வில்லை என்பதுதான் உண்மை.

இதில், ஆச்சர்யம் என்னவென்றால் மூன்று தேர்வு முடிந்த நிலையில் அவ்வப்போது நடக்கும் அனைத்து மாணவர்களுக்குமான சிறப்பு வகுப்பில் ஒரு ஆசிரியர் மனீஷாவிடம், 'நீ அந்த 12 மாணவர்களோடு அமர்ந்துகொள்' என்று கூறியுள்ளார், முதலில் மறுத்த மனீஷாவை வற்புறுத்தி அமரச் செய்துள்ளார் என்பதை மனீஷா என்னிடம் சொல்லியிருந்தாள், இதெல்லாம் என்ன மனநிலையோ என்ற வருத்தம் எனக்கு இருந்தது.

முதல் மூன்று தேர்வுகள் முடிந்த நிலையில், நான்காவது அறிவியல் தேர்வுக்கு முந்தைய நாள் 'சிறப்பு வகுப்பு நடைபெறும் அனைவரும் வரவேண்டும்' என்ற குறுஞ்செய்தி ஒன்று பள்ளியில் இருந்து எனக்கு வந்தது.

"அம்மா..நான் வீட்டிலிருந்தே படிக்கிறேன்..." என்ற மனீஷாவிடம், "நமக்காக ஆசிரியர்கள் வருவார்கள், கண்டிப்பாக நீ போகவேண்டும்..." என்று நான் சொன்னதும், "அங்க போனா மன உளைச்சல்தான்மா... பரீட்சை எப்படி எழுதுனேனு அந்த 12 பேர்களிடம்தான் கேட்பாங்க, அவங்கள்ல யாராவது சரியாக எழுதலைனா மற்ற யாரும் சரியாக எழுதியிருக்க மாட்டாங்கனு எங்ககிட்ட கேட்கக்கூட மாட்டாங்கமா...அது மட்டுமில்ல நாளைக்கு ஸ்கூல் பஸ்சு வராதும்மா.."

"அதப்பத்திலாம் நீ யோசிக்காத மனீஷா...காலைல நானே கொண்டு வந்து விட்டுட்டு சாய்ங்காலம் 4 மணிக்கு வந்து கூட்டிக்கிறேன்..." என்றதும் விருப்பமில்லாமல் போன மனீஷாவை வலுக்கட்டாயமாக நாந்தான் அனுப்பி வைத்தேன்.

எனக்கு மதியம் 1 மணிக்கு ஒரு போன் வந்தது, எடுத்துக் 'ஹலோ....' என்றதும் மனீஷா, "அம்மா க்ளாஸ் முடிஞ்சிருச்சு... வந்து கூட்டிட்டு போங்க..."என்றாள்.

பள்ளிக்குச் சென்ற நான் கலங்கிய கண்களோடு நின்ற மனீஷாவைப் பார்த்துப் பதறிப்போனேன். அவளோ என்னைப் பார்த்ததும் வேகமாக கண்களாய்த் துடைத்துக் கொண்டாள்.

எதுவும் கேட்டுக் கொள்ளாமல் ஆட்டோவில் கூட்டிக் கொண்டு வரும் போது கண்ணீர் துளி வெளிவரத் துடித்த வண்ணம் இருப்பதைப் பார்த்து, "என்னாச்சுமா..." என்றேன்.

"என்னை மட்டும் அந்த 12 பேருடன் ஒரு வாத்தியார் அமரச் சொன்னார்...நானும் அமர்ந்தேன்...ஆனா அவர்கள் யாருமே என்னுடன் பேசல...அவுங்கவுங்க குரூப்பா உட்காந்து படிச்சாங்க சாப்பிடும்போதுகூட நான் தனியா உக்காந்துதான் சாப்பிட்டம்மா... நாந்தான் அப்பவே சொன்னேன்லம்மா வீட்ல இருந்தே படிக்கிறேன்னு.... சயின்ஸ் மிஸ்சு கூட டாப்பரத் தவிர எல்லாரும் வெளிய போங்கனு சொன்னாங்கமா நாங்க என்ன நாயாம்மா...."

என்னிடம் அவளுக்குச் சொல்ல வார்த்தையில்லை, எனக்குள் வந்த அழுகையை மறைக்கும் இடம் ஒரு கையறு நிலைதான்... இதையெல்லாம் அவர்களிடம் கேட்டால், இந்த நேரத்தில் அந்த கோபத்தை மனீஷாவின் பக்கம் திருப்பினால் அது மேலும் மன உளைச்சலைத் தரலாம் என எண்ணத்துடன் அது குறித்து எதுவும் பேசாமல் இனிமேல் எந்த சிறப்பு வகுப்புக்கும் நீ போக வேண்டாம் என்று சொல்லி ஆறுதல் படுத்தினேன்.

கடைசித் தேர்வன்று வகுப்பில் அனைவரும் நினைவுப் புகைப்படம் எடுத்தார்களாம், அது இவற்றையெல்லாம் விட பெரிய கொடுமை என்றுதான் சொல்ல வேண்டும், ஆமாம்! அந்த 12 பேரைத் தனியாகவும் மற்றவர்களைத் தனியாகவும் எடுத்தார்களாம். இதைவிடக் கொடுமை என்ன வேண்டியிருக்கு, பள்ளிகால புகைப்படம் என்பது காலம் கடந்தும் மகிழ்வான நினைவுகளை நமக்குள் மலரச் செய்வது அல்லவா. அதில்கூட அந்தப் பள்ளியில் பிரிவினை என்றதும் வலித்தது.

எல்லாம் முடிந்தது, எத்தனை வலிகள் இருந்தாலும் சிறப்பாக தேர்வு எழுதிய மகிழ்ச்சியை மனீஷா மனதளவில் சுமந்து மகிழ்வாக இருந்தாள். எனக்கு அது போதுமென இருந்தது தேர்வு முடிவுகள் வரும் தேதி அறிவிக்கப்பட்ட போது ஒரு குறிஞ்சிப்பூவின் மலர்ச்சியை அவளின் முகத்தில் பார்த்தேன்.

தேர்வு முடிவுகள் வெளியாகி, ஒவ்வொரு செய்தியாக வரும்போது முதல் 5 மாவட்டத்தில் இராமநாதபுரம் இல்லையென்றதும், "என்னது இராம்நாட் இல்லையா... அப்ப எங்க பள்ளி முதலிடம் இல்லையா... நான் முதலிடம் இல்லையா..." என்று உரத்த குரலில் கேட்டுக் கண் கலங்கினாள்.

சிறப்புப் பயிற்சி எடுத்த பிள்ளைகள் கூட மாநில அளவில் முதலிடம் பிடிக்க முடியாமல் போன நிலையில் என் மகள் நான் முதலிடம் பிடிக்க முடியவில்லையே என வருந்தியது எனக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தாலும், கிட்டத்தட்ட பத்து மாதங்களாக பள்ளியில் 12 பிள்ளைகள் தவிர, மற்றவர்களை மாணவர்களாகக் கூட மதிக்காத நிலையில் என் மகள் 486 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் நான்காவது மதிப்பெண் பெற்றது பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

(இது உண்மை நிகழ்வின் அடிப்படையில் எழுதிய சிறுகதை, என் மகளின் மதிப்பெண்ணை ஏதோ பள்ளிக்காக சாதிக்கப் போகும் மாணவர்கள் எனச் சிலரை மட்டும் சிறப்பாகக் கவனித்து, மற்றவர்களை மிகவும் கீழ்த்தரமாக நடத்தும் ஆசிரியர்களுக்கு என் மகளின் மதிப்பெண்களைச் சமர்ப்பணம் செய்கிறேன். இனிமேலேனும் இதுபோல் நடந்து கொள்ளாதீர்கள்... உங்களைப் பொறுத்தவரை எல்லாரும் மாணவர்களே)

# “கட்டுரையும் ஒரு சிறுகதையே; சிறுகதையும் ஒரு கட்டுரையே”



## - பேராசிரியர் முனைவர் மு.பழனி இராகுலதாசன்



**தேவதர்ஷினி நடராஜன்**

பேராசிரியர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், பேச்சாளர், சமூக சிந்தனையாளர், மாணவர்களின் பேராசிரியர் எனப் பல முகம் கொண்ட, எல்லாருக்கும் பிடித்தவராய், எல்லோரையும் மதிப்பவராக, தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்து பணி ஓய்வு பெற்ற முனைவர் மு.பழனி இராகுலதாசன் அவர்கள் நல்ல சிந்தனையாளர், சிறப்பான வட்டார, வாழ்க்கைக் கதைகளையும் பல வரலாற்று, வாழ்வியல் கட்டுரைகளையும், சாகித்திய அகாதெமிக்காக பல மொழிபெயர்ப்புகளையும் எழுதியவர். இப்போதும் நிறைய வாசிக்கவும், எழுதவுமாக இருக்கும் அய்யாவின் மனதுக்குள் இருக்கும் ஆயிரம் ஆயிரம் கதைகள், நிகழ்வுகள், நினைவுகளில் இருந்து கொஞ்சத்தை இந்தப் பேட்டியின் மூலமாய் பெற்று இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்கிறோம். இந்தக் கேள்விகளுக்கான பதிலை அவர் எழுதி அனுப்பியிருந்தார். இவற்றை வாசித்த போது அய்யாவிடம் இருந்து இன்னும் நிறைய தகவல்களை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. காலம் அதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் இன்னும் நிறைவான தகவல்களை அய்யாவிடம் இருந்து பெற முடியும் என்ற நம்பிக்கை நிறையவே இருக்கிறது.

இனி பேராசிரியர் மு.பழனி இராகுலதாசன் அவர்களின் பேட்டியைத் தொடர்வோம்..

**கே. எழுத்தின் மீதான ஆர்வம் எப்போது ஏற்பட்டது?**

ப. இந்த வயதில், இப்போது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. ஆனால் சோழவந்தான் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு பயின்றபோது தமிழாசிரியர் இராசகோபாலனும், தமிழாசிரியர் ச.நடராசனும்தான் கட்டுரை எழுதத் தூண்டினார்கள். அதுதான் தொடக்கம் என்று சொல்லலாம்.

**கே. பழனி இராகுலதாசனாக எப்போது மாறினீர்கள்?**

ப. எங்கள் கிராமத்தில் எங்கள் குடும்பம்தான் பேப்பர் படிக்கிற குடும்பம். தினமணி, கல்கி, மஞ்சரி என்ற பத்திரிக்கைகள் வீட்டிற்கு வரும். என் அண்ணன் சங்கரலிங்கம் என்ற சிவசாமி சோழவந்தான் T.R. மகாலிங்கத்துடன் இணைந்து சங்கீதம் பயின்றவர். பயிற்சியை அவரால் தொடரமுடியவில்லை. அந்தத் தொடர்பால் எங்கள் வீட்டுக்கு 'மஞ்சரி' இதழ் வந்தது. மஞ்சரியில் ஒருமுறை புத்தர் பற்றிய புத்தகச் சுருக்கம் வெளியானது. அதைப் படித்தபோதுதான் 'இராகுலன்' என்ற பெயரைப் படிக்க நேர்ந்தது. அதன் தொடர்ச்சியாகத்தான் 'இராகுலதாசன்' என்ற பெயர் அமைத்துக் கொண்டேன். புத்தர் வரலாற்றில் 'இராகுலன்' மிகவும் பரிதாபத்திற்கு உரிய பாத்திரம் அல்லவா!

**கே. தங்களின் முதல் படைப்பு எப்போது எழுதப்பட்டது?**

ப. கட்டுரை என்றால் பள்ளியில் எழுதப்பட்ட கட்டுரையைத்தான் சொல்ல வேண்டும். அந்தக் கட்டுரையைப் பாராட்டி, அன்றைய சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் பொன்னம்மாள் பள்ளி விழாவில் புத்தகம் அளித்தார். அதுதான் எனது முதல் படைப்பும் முதல் பரிசும் என்று சொல்லலாம்.

**கே. பேராசிரியர் தமிழண்ணலுக்கும் தங்களுக்கும் இடையிலான நட்பு பற்றிச் சொல்லுங்கள்.**

ப. பேராசிரியர் தமிழண்ணல் ஓர் அபூர்வமான ஆசிரியர்; சிந்தனையாளர்; தமிழ் - தமிழ் வளர்ச்சி என்பதில் மிகவும் தெளிவான பார்வையும் படைப்புத் திறனும் உடையவர். நான் மதுரை தியாகராசர் கல்லூரியில் படித்தபோது மாணவர்களிடையே மிகவும் செல்வாக்கும், நெருக்கமும் உடையவர். தியாகராசர் கல்லூரியில் நான் பி.ஏ., எம்.ஏ., பயின்ற போது நெருக்கம் அமைந்தது. எனது கல்லூரி ஆண்டு மலர்க் கட்டுரைகளையும், கல்லூரி விழாக்களில் நான் பேசும் பேச்சுகளையும் மிகுந்த கவனத்தோடு கேட்டு, நேரில் அழைத்துப் பாராட்டுவார். மாணவர்களிடையே அவர்தான் மிகுந்த செல்வாக்கு உடைய பேராசிரியராக இருந்தார்.

**கே. கிராமத்திலிருந்து தேவகோட்டைக்கு வந்த போது என்ன உணர்ந்தீர்கள்?**

ப. அதுதான் எனக்கு இப்போதும் ஆச்சர்யமாக இருக்கிறது. என்மீது மிகவும் அன்பும் பிரியமும் கொண்ட பேராசிரியர் டாக்டர் சுப. அண்ணாமலைதான் தேவகோட்டை ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரியில் தமிழ் - பயிற்றுநர் பணிக்குப் பரிந்துரை செய்தார். பணியில் சேர வரும்போது எனக்கு வழிகாட்டியாக உடன் வந்தவர் நாடகக் கலைஞர் உடையப்பாவின் மகன் உ.சுப்பிரமணியன் என்ற நண்பர் ஆவார். வந்தேன், சேர்ந்தேன்; பிறகு அனுபவங்கள் விரிந்தன; வளர்ந்தன.

**கே. சிறுகதை மீதுதானே தங்கள் கவனம் இருக்கிறது. ஏன் நாவல் எழுதவில்லை?**

ப. 'சிறுகதை' என்பது ஓர் அபூர்வமான உருவம்; நாவல் பக்கம் போக வேண்டுமானால் அனுபவம் மிகவும் விசாலமாக இருக்க வேண்டும். அதற்கான பின்புலம், அனுபவம் அமையவில்லை. நீங்கள் கேட்பது போல ஒருமுறை கவிஞர் மீராவும் நாவல் எழுதுமாறு சுட்டிக்காட்டி, விரைவு படுத்தினார்; என்னவோ அந்தப் பக்கம் போகவில்லை.

**கே. நல்ல எழுத்தைக் கைவசம் வைத்திருந்தும் தொடர்ந்து சிறுகதைகளை எழுதியிருந்தால் மிகப்பெரிய இடத்தை தமிழ் இலக்கிய உலகில் பெற்றிருக்கலாம், அதை ஏன் தாங்கள் செய்யவில்லை?**

ப. நீண்ட கேள்வி, இதற்குக் குறிப்பிட்டு ஒரு பதிலைச் சொல்ல முடியாது. வாழ்க்கைச் சூழல், பணியாற்றும் சூழல், வேறுபிற பணிகளில் கவனம் என்று பல வகையான விடைகளைச் சொல்லலாம். வேறு ஒரு வகையில் சொல்வதானால் நான் மதுரை அல்லது சென்னையில் இருந்திருந்தால் இன்னும் நிறைய எழுதியிருக்கலாம்தான்; தேவகோட்டையில் கலை இலக்கியப் பெருமன்றம், சன்மார்க்க சங்கம், லெனின் நூலகம், இந்திய - சோவியத்துக் கலாச்சாரக் கழகம் என்று பணிகளை விரிவாக்கிக் கொண்டேன். இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

**கே. வரலாற்றுக் கட்டுரைகள் நிறைய எழுதியதால்தான் சிறுகதை எழுதுவதை நிறுத்திவிட்டீர்களா..?**

ப. ஆம்; ஒருவகையில் கட்டுரையும் ஒரு சிறுகதையே; சிறுகதையும் ஒரு கட்டுரையே; இப்படி நீங்கள் யோசித்துப் பாருங்களேன்.

**கே. சாகித்ய அகாதெமிக்காக தொடர்ச்சியாக மொழிபெயர்ப்பும், வாழ்க்கை வரலாறும் எழுதியுள்ளீர்கள், எழுதுகிறீர்கள். அந்த அனுபவம் குறித்துச் சொல்லுங்களேன்.**

ப. என்னுடைய பரந்த வாசிப்பில் சாகித்ய அகாதெமி நூல்களும் அடங்கும். சாகித்ய அகாதெமியில் கவிஞர் மீரா ஏதோ ஒரு பிரிவில் உறுப்பினராக இருந்தார். அப்போது எனது விண்ணப்பத்தைப் பார்த்து என் பெயரைப் பரிந்துரை செய்தார். அப்படித்தான் முதன் முதலாக 'கேசவதேவ்' என்ற ஆங்கில நூலைத் தமிழாக்கம் செய்தேன்; தொடர்ந்து அகாதெமி எனக்குப் பல வாய்ப்புகளைத் தந்தது. நூல்களைத் தேர்வு செய்வது, பரிசுக்குரிய நூல்களைத் தேர்வு செய்யும் பட்டியல் தயாரிப்பது என்று பல பணிகளைச் செய்திருக்கிறேன். இப்போது "தாகூரின் அழகியல் கோட்பாடுகள்" என்ற நூல் மொழி பெயர்த்திருக்கிறேன்; ஓரிரு வாரங்களில் நூல் வெளிவர இருக்கிறது.

**கே. மாணவர்களுக்கும் உங்களுக்கும் அமைந்த தொடர்பு குறித்துச் சொல்லுங்களேன்.**

ப. நல்ல கேள்வி; ஆசிரியர் என்றால் மாணவர்கள்தானே தொடர்பும் உறவும். எனக்கும் மாணவர்களுக்குமான தொடர்பு மிகமிக நேரியதாக, பயன் உள்ளதாக அமைந்தது. "மாதா, பிதா, குரு, தெய்வம்" என்ற வாழ்வியல் சூத்திரம் மிகமிக அபூர்வமானது. இது குறித்து மிகமிக விரிவாகவும் ஆன்மீகப் பூர்வமாகவும் எழுதலாம். இது மாதிரியான சூத்திர ரீதியான சொல்லமைப்பு அல்லது வாக்கிய அமைப்பு அல்லது சமுதாய சூத்திரம் உலகில் எங்கேயும் இல்லை. இந்தக் கேள்வியை மிகவும் கூர்மையாகக் கேட்டு விட்டீர்கள். இது குறித்து பக்கம் பக்கமாய் என்னால் எழுத முடியும். எனது 'கல்லூரி வாழ்க்கை' மாணவர் தொடர்பு குறித்து தனி நூல் எழுதிக் கொண்டிருக்கிறேன். அதன் பெயர் "தோட்டக்காரன்" என்று அமைகிறது. கல்லூரிதான் தோட்டம்; அங்கே பணியாற்றிய தோட்டக்காரன் நான்தான்.

ஒரு குறிப்பு: எனது முழுமையான கல்லூரி ஆசிரியர் பணியில் எந்த ஒரு மாணவரையும் நான் 'வா', 'போ' என்று சும்மா ஒருமையில் அழைத்ததே இல்லை.

**கே. தவத்திரு குன்றக்குடி அடிகளார், வண்ணதாசன், சூரிய தீபன் ஆகியோருடனான தங்கள் தொடர்பு பற்றிச் சொல்லுங்களேன்.**

ப. தவத்திரு குன்றக்குடி அடிகளாருடன் நேரடித் தொடர்பை, தியாகி கே.எம்.எஸ். தான் அமைத்துக் கொடுத்தார். அடிகள் கலை இலக்கியப் பெருமன்றத்தில் இருந்தார்; நானும் இருந்தேன். சிந்தனை - சிந்தனை வட்டம்; சிந்தனை வளர்ச்சி என்றெல்லாம் இயங்குவதற்கு வழிகாட்டியவர் தவத்திரு அடிகளார்தான். தேவகோட்டை தோழர்களுக்கு என்று ஒரு தனி, சிறப்புச் சந்திப்பை அடிகள் ஏற்படுத்தி அழைப்பார்; அந்தச் சந்திப்பில் நான் தவிர்க்காமல் இடம் பெறுவேன்; அடிகளின் தேசிய, சர்வ தேசிய சிந்தனைகள் என்னை மிகவும் கவர்ந்தன. அடிகளாருடனான சந்திப்பு பற்றி ஒரு சிறிய நூல் எழுதிக் கொண்டிருக்கிறேன்; அதன் பெயர் "அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்" (சிலப்பதிகாரம்) என்பது, நூல் விரைவில் வெளிவரும்.



சூரியதீபன் தியாகராசர் கல்லூரியில் எங்களுக்கு முன்னோடி மாணவராக இருந்தார்; மிகத் தீவிரமான இடது சாரிச் சிந்தனையாளர்; மிகவும் நேர்மையானவர்; அவர் தமிழ்நாடு, தனி ஈழம் என்று பேசுவார்; நான் ஏக இந்தியா, இந்திய ஒருமைப்பாடு என்று பேசுவேன்; எங்களை இணைத்தது இலக்கியம்; குறிப்பாக சிறுகதை இலக்கியம்; சிறுகதை வாசிக்கவும், எழுதவும் தூண்டியவர் அவர்.

உயர்திரு வண்ணதாசன் நட்பு ஓர் அரிய நிகழ்வு. பள்ளியில் நான் படித்தபோது (தந்தி) இதழில் சிரிப்பு படம் எப்படி வரைவது என்று எனக்கு வண்ணதாசனும் அவருடைய இனிய சகோதரர் கணபதியும்தான் வழிகாட்டினார்கள். இது ஒரு அதிசயம்தான். எங்கோ 'நெடுங்குளம்' என்ற சின்னஞ்சிறிய கிராமத்துக்காரனான நானும் 'திகசி' குடும்பத்தார்களும் ஒன்றிணைந்தது எப்படி என்று பார்த்தீர்களா? வண்ணதாசன் எனக்கு எழுதிய கடிதங்கள் நூற்றுக்கும் மேலே இருக்கும்; அந்தக் கடிதங்கள் அனைத்தையும் தொகுக்க வேண்டும். அக்கரைப்பூக்கள் தொகுதிக்கு அட்டைப்படம் வரைந்தவர் வண்ணதாசன்தான்.

**கே. இதுவரை தாங்கள் எழுதிய கதைகளில், கட்டுரைகளில் தங்களுக்கு மிகுந்த மனநிறைவைக் கொடுத்தது எது..? ஏன்..?**

ப. அப்படி ஒரு நிறைவான கட்டுரையை, அப்படி ஒரு நிறைவான கதையை, நான் இன்னும் எழுதவில்லையே!

**கே. ஒரு சிறுகதையை எப்படி எழுதினால் சுவராஸ்யமாக வாசிப்பவரை ஈர்ப்பதாக இருக்கும்?**

ப. மிகவும் சிக்கலான கேள்வி. இது வாசிப்பவருடைய சுவை, விருப்பம், கவனம் பற்றிய கேள்வி. எனது அனுபவமாக எதுவும் சொல்ல முடியாது. வேறு ஒரு வகையில் சொல்கிறேன். ஜெயகாந்தன் எழுதிய "அக்னிப் பிரவேசம்" கதையைப் படித்திருக்கிறீர்களா? ஆனந்த விகடனில் வெளிவந்த கதை. அந்தக் கதையை ஜெயகாந்தன் எழுதிப் பல ஆண்டுகள் கழித்து, ஒரு கருத்தரங்கில் ஜெயகாந்தனிடம் வாசகர்கள், "அக்னிப்பிரவேசம் கதையில் இடம் பெற்ற அந்த அபலைப் பெண் என்ன ஆனாள்?" என்று கேட்டார்கள். ஜெயகாந்தன் அதிர்ந்து போனார். வாசகர்களின் அறிவு நுட்பம், திறனாய்வுப் பார்வை ஆகியவை அவரைத் திகைக்க வைத்தது. அக்னிப்பிரவேசம் கதையில் ஒரு முரட்டு இளைஞனால் கெடுக்கப்பட்ட அவளுக்கு வாழ்க்கை இல்லையா? அவள் என்ன ஆனாள்? என்று வாசகர் கூட்டம் கேட்கிறதே என்று அவர் திகைத்துத்தான் போனார். அதற்குப் பிறகுதான் "சில நேரங்களில் சில மனிதர்கள்" என்றும் "கங்கை எங்கே போகிறாள்?" என்றும் எழுதி முடித்தார். "கங்கை கங்கையோடு போனாள்" என்று முடியும் அந்த நாவலையும் சேர்த்து, இந்த மூன்று படைப்பையும் ஒரு சேரப் படிக்க வேண்டும்!

**கே. தாங்கள் வாசித்ததில் கவர்ந்த சிறுகதை அல்லது நாவல் பற்றிச் சொல்ல முடியுமா..?**

ப. சிறுகதைகளே அதிகம் வாசித்தேன்; குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் கு.ப.ரா. எழுதிய 'பண்ணைச்செங்கான்' என்ற சிறுகதையையும், செக்காவ் எழுதிய 'வான்கா'வையும் சொல்லலாம். பைபிளில் இடம் பெறும் ஊதாரி மகன் (Prodigal Son) என்ற சிறுகதைதான் எனக்கு மிகவும் பிடித்த சிறுகதை. உலக அளவில் இதனை மிகச் சிறந்த சிறுகதை என்று சொல்லலாம்.

**கே. தமிழில் வந்த சிறுகதை பற்றிய முழுமையான ஆய்வு நூல் எது? ஏன்?**

ப. எழுத்தாளர் சி.சு. செல்லப்பா எழுதிய 'தமிழ் சிறுகதை பிறக்கிறது' என்ற நூலைத்தான் குறிப்பிட வேண்டும். இது எழுத்தாளர்கள் அனைவரும் படிக்க வேண்டிய நூல். அதுவும் நுணுக்கமான முழுமையான ஆய்வு ஏடு. இதற்குப் பிறகு இது போன்றதொரு நுணுக்கமான முழுமையான சிறுகதை பற்றிய திறனாய்வு நூல் எதுவும் வெளிவரவில்லை

**கே. தங்களது 'அக்கரைப்பூக்கள்' சிறுகதைத் தொகுப்பு யதார்த்த எழுத்து என்று பலரும் சொல்கிறார்கள். அது பற்றிய உங்கள் கருத்து?**

ப. கேள்வியிலேயே பதில் இருக்கிறது. அக்கரைப்பூக்கள் என்ற தொகுப்பில் இடம் பெறும் கதை மாந்தர்கள் அனைவரும் எனது சொந்தக் கிராமத்து மனிதர்களே. நான் பார்த்த மனிதர்கள், என்னோடு பழகியவர்கள்; எனவே யதார்த்தமாக இருப்பதில் வியப்பில்லையே!

**கே. இப்போது எழுதுபவர்களுக்குத் தாங்கள் சொல்லும் குறிப்புகள்?**

ப. உங்களைப் பற்றி எழுதுங்கள்; உங்களைச் சுற்றி உள்ளவர்களின் வாழ்க்கையை உற்றுக் கவனித்துப் பார்த்து எழுதுங்கள். ஒவ்வொரு மனிதனின் மனதுக்குள்ளும் ஆயிரம் ஆயிரம் அனுபவ அலைகள் தத்தளிக்கின்றன; அவற்றுக்கு எழுத்து வடிவம் கொடுங்கள் போதும்.

நன்றி.

# செம்மீன்

எஸ்.சரத்குமார்






நூல்: செம்மீன்
எழுத்து: தகழி சிவசங்கரப் பிள்ளை
மூலம்: மலையாளம்
தமிழாக்கம்: சுந்தர ராமசாமி
வெளியீடு: சாகித்திய அகாதமி
எழுத்தாளர் தகழி:

கேரளாவின் ஆலப்புழைக்கு அருகே உள்ள 'தகழி' என்னும் சிற்றூரில், 1914 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிறந்தவர் தகழி சிவசங்கரப்பிள்ளை. இவர் மலையாள இலக்கிய உலகில், தவிர்க்க முடியாத ஓர் எழுத்தாளர். முப்பதுக்கும் மேற்பட்ட நாவல்களையும், ஐநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் இவர் எழுதியுள்ளார். சிறு வயதிலேயே புத்தகங்களின் மீது ஆர்வம் கொண்ட இவர், ரஷ்ய இலக்கியங்களை விரும்பி படித்திருக்கிறார். இடதுசாரி கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட இவருடைய எழுத்துக்கள், மக்களிடையே முற்போக்குச் சிந்தனைகளை விளைத்தன.

'தியாகத்தினு ப்ரதிபலம்' என்னும் தன்னுடைய முதல் நாவலை எழுதியபோது, இவருடைய வயது வெறும் இருப்பது இரண்டு மட்டுமே! 'பதித்த பங்கஜம்', 'சுஷீலம்', 'தோட்டியுட மகன்' போன்ற நாவல்களை எழுதிப் புகழ் பெற்ற இவருக்கு, 'செம்மீன்' சாகித்திய அகாதமி விருதைப் பெற்றுத் தந்தது.

செம்மீன், 1956 ல் வெளியான நாவல். கேரள மீனவர்களின் வாழ்க்கையை, ஒரு மெல்லிய காதல் கதையோடு இணைத்து இவர் எழுதிய இந்நூல், இந்திய இலக்கியங்களுள் முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. மீனவர்களின் வாழ்க்கை முறையையும், அவர்களுடைய நம்பிக்கைகளையும் எவ்வித சமரசமுமின்றி பதிவு செய்யப்பட்டதே இந்நாவலின் சிறப்பு!

ஆங்கிலம், ஃப்ரெஞ்ச், ரஷ்யா உள்ளிட்டப் பல மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ள இந்நாவலை, தமிழில் சுந்தர ராமசாமி சிறந்த மொழி நடையில் மொழிபெயர்த்துள்ளார்.

**கதைச் சுருக்கம்:**

பரந்து விரிந்து ஓயாமல் எந்நேரமும் கொப்பளித்துக் கொண்டிருக்கும் கடலுக்கு அருகே நின்றபடி, பரீக்குட்டியும் கருத்தம்மாவும் காதல் மொழி பேசிக்கொண்டிருக்கிறார்கள். பால்ய வயதிலிருந்தே அவர்கள் இருவரும் நண்பர்கள். நட்பு காதலாக மாறி இருந்தது, அவர்கள் இருவருக்குமே நன்கு தெரியும்.

ஆனால் அவர்களுடைய மதம், இருவரையும் ஒன்று சேர விடாமல் தடுக்கிறது. ஆம்! பரீக்குட்டி, அக்கடல் கிராமத்தில் வாழும், ஓர் சிறிய இஸ்லாமிய வியாபாரி. அதே கிராமத்தில் வாழும் இந்து மதத்தைச் சேர்ந்த செம்பன்குஞ்சு மற்றும் சக்கி தம்பதியின் மூத்த மகள் தான் கருத்தம்மா.

இவர்களுடைய காதல் விஷயம், சக்கிக்கு நன்றாகவே தெரியும். அவள் கருத்தம்மாவை மறைமுகமாகவும், நேரடியாகவும் பலமுறை கண்டிக்கின்றாள். கருத்தம்மாவின் இயல்பான உணர்ச்சிகளுக்கு, மதம் ஒரு தடையாக இருக்கிறது. மனதில் உள்ள ஆசைகளை எல்லாம் வெளிப்படுத்த முடியாமல் அவற்றை நெஞ்சோடு புதைத்து வைக்கிறாள் கருத்தம்மா.

செம்பன்குஞ்சுவின் எண்ணமெல்லாம் சொந்தமாக ஒரு படகும் வலையும் வாங்க வேண்டும் என்பதே. எண்ணம், ஆசையாக மாறுகிறது. ஆசை, பேராசையாகிறது. படகும் வலையும் வாங்கப் போதுமான பணம் இல்லாதபோதும், அவற்றை எப்படியாவது வாங்கி நிறைய பணம் சம்பாதிக்க வேண்டும் என ஆசைப் படுகிறான் செம்பன்குஞ்சு. இதற்காகப் பரீக்குட்டியிடம் கடன் கேட்கிறான். பரீக்குட்டியும் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி செம்பன்குஞ்சுவுக்கு பண உதவி செய்கிறான். அப்பணத்தைக் கொண்டு, சொந்த படகும், வலையும் வாங்கும் செம்பன்குஞ்சு, பரீக்குட்டி செய்த உதவியை காலப்போக்கில் மறக்கிறான். பணத்தைத் திருப்பித் தராமல் காலம் தாழ்த்துகிறான் செம்பன்குஞ்சு. ஆனால் பரீக்குட்டிக்கு அதைப் பற்றிய கவலைகள் ஏதும் இல்லை. கருத்தம்மாவுக்காக அவன் எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராகவே இருக்கிறான்.

இந்நிலையில், வேறு ஊரைச் சேர்ந்த மீனவனான பழனி என்பவனை கருத்தம்மாவுக்குத் திருமணம் செய்து வைக்கிறார்கள். கருத்தம்மாவின் காதல் பற்றி தெரியாமலே அவளை மணந்து கொள்கிறான் பழனி. ஆனால், விரைவிலேயே அவள் பரீக்குட்டியைக் காதலித்த விஷயம் பழனிக்குத் தெரியவருகிறது. இருந்தும் கருத்தம்மாவை அவன் நம்புகிறான். புதிய வாழ்க்கையை அவர்கள் வாழத் தொடங்குகிறார்கள். இதன்பிறகு, அவர்களுடைய வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களே மீதிக் கதை.

*

ஆலப்புழையை ஒட்டியிருக்கும் நீர்க்குன்னம் மற்றும் திருக்குன்றப்புழை என்கிற கடல் கிராமத்தைச் சுற்றியே இக்கதை எழுதப்பட்டிருக்கிறது. மீனவ சமூதாயத்தில் வேரூன்றிக் கிடக்கும் இரண்டு விஷயங்களைப் பற்றியே அழுத்தமாக இந்நாவல் பேசுகிறது.

1. மீனவர்களின் நம்பிக்கைகளையும் மரபுகளையும்.

2. அவர்களிடத்தில் இருந்த சாதி மத பாகுபாடுகள்.

*

**நம்பிக்கைகளும் மரபுகளும்:**

அம்மக்கள் கடலை, தெய்வமாகவே பார்க்கின்றனர். கடலுக்கு, 'கடலம்மா' எனும் பெயரை வைத்து வழிபடுகின்றனர். கடலுக்குள் செல்கின்ற மீனவனின் உயிர், ஒழுக்கம் தவறாது கரையில் வாழும் அவனுடைய மனைவியிடம் தான் இருக்கிறது என அவர்கள் நம்புகின்றனர். அதாவது கணவன் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும்போது, கரையில் இருக்கும் அவனுடைய மனைவி, அவளுடைய கற்பை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில், கடலம்மாவின் கோபத்திற்கு ஆளாகி ஒட்டுமொத்த கிராமமும் அழிந்து போய்விடும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. அப்படி வழித்தவறிப் போன ஒருவளால், இதற்கு முன்பே ஒருமுறை அக்கிராமம் அழிவை சந்தித்திருக்கிறது என்கிற கதையும் அவர்களிடத்தில் பிரபலமான ஒன்று.

நாவலின் ஓர் இடத்தில் இடம்பெறும் வரிகள் இவை:

'கடலுக்குச் செல்லுகிற முக்குவனின் உயிர், கரையில் இருக்கும் முக்குவத்தி கையில் தான் இருக்கிறது'

ஆக, ஒரு சமூதாயத்தின் ஒட்டுமொத்த நம்பிக்கையும் (மூடநம்பிக்கை) ஒரு பெண்ணின் உடல் மீது வைக்கப்படுகிறது. அதாவது ஒரு பெண்ணின் உடலை வைத்தே ஒரு சமூகம் இயங்குகிறது!

நாவல் முழுக்க வெவ்வேறு சூழல்களில் வெவ்வேறு மனிதர்கள், கருத்தம்மாவிடம் இதை நினைவு படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இதனால், இயல்பான அவளுடைய உணர்ச்சிகளும் கடல் காற்றோடு கரைந்து காணாமல் போகின்றன. இதன் மூலம் பெண்களின் அன்றைய நிலைமையை நாம் புரிந்து கொள்ளலாம்.

கடலை, 'கடலம்மா' என தெய்வமாக வழிபடும் மக்களால், ஒரு பெண்ணை, பெண்ணாகக் கருத முடியவில்லை!

**சாதியும் மதமும்:**

இந்நாவல், இந்தியா சுதந்திரம் அடைந்த கால கட்டத்தில் எழுதப்பட்டது. அக்காலத்தில் மக்களிடையே இருந்த சாதிமத வேற்றுமைகள் பற்றி நாம் அறிந்ததே. அதை முழுமையாக பதிவு செய்திருக்கிறார் எழுத்தாளர்.

'நாலாம் மதத்துக்காரன் எவனாவது கெடுத்துவிட்டுப் போய் விடுவான்' என ஆரம்பத்தில் கருத்தம்மாவை சக்கி எச்சரிப்பதும், உயிர் பிரியும் வேளையில் கூட, இனி நீ கருத்தம்மாவை அண்ணன் போல கூடவே இருந்து பாத்துக்கனும்' என பரீக்குட்டியிடம் சக்கி கேட்டுக் கொள்வதும், அம்மக்கள் மனதில் எவ்வளவு ஆழமாக சாதி வேரூன்றி இருக்கிறது என்பதை உணரலாம்.

மீனவச் சமூதாய மக்கள் கீழே குறிப்பிட்டுள்ள ஏதோ ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களாகத் தான் இருப்பார்கள். இதை நாவலில் வரும் ராமமூப்பன் என்கிற கதாபாத்திரம் இப்படி விளக்குகிறது.

'அரயன் ஐந்து ஜாதி பிரிவுகள் கொண்டவன். அரயன், வலைஞன், முக்குவன், மரக்கான். இவர்களில் வலைஞன் மட்டும்தான் தோணியும் வலையும் வாங்கலாம். அவர்களுக்கு மட்டும தான் துறை அரையன் அவ்வுரிமையை வழங்குவார்'.

இதிலிருந்து மீனவச் சமூதாய மக்களின் உட்பிரிவுகள் பற்றியும், அதிலும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கத்தான் செய்கிறது என்பதையும் அறியலாம்.

செம்பன்குஞ்சு ஓர் முக்குவன். எனவே அவனுக்குச் சொந்தமாக ஒரு படகும் வலையும் வாங்கும் உரிமை இல்லை. அதையும் மீறி அவன் வாங்க நினைத்தால், அதை துறை அரையனிடம் சொல்லிவிட்டுத் தான் வாங்க வேண்டும். அதுமட்டுமல்ல, எந்த ஒரு காரியத்தையும் துறை அரையனிடம் ஊர் மக்கள் சொல்ல வேண்டும். தவறினால் அவர்களுக்குக் கடலுக்குள் செல்லும் உரிமை, பறிக்கப்படும். துறை அரையன், அதே ஊரில் வாழும் உயர் சாதி மீனவ சமூதாயத்தைச் சேர்ந்தவன்.

நாவலின் இரண்டாம் பாதியில் வரும் பாப்பிக்குஞ்சுவிடம் (செம்மன்குஞ்சுவின் இரண்டாவது மனைவி) கூட இந்த சாதிப்பாகுபாடை கண்டறியலாம்.

அவ்வளவு ஏன்? சொந்தங்களே இல்லாத அநாதையான பழனிக்கு, கருத்தம்மாவை திருமணம் செய்து வைத்ததன் பிண்ணனியில் கூட சாதி தான் இருக்கிறது.

பரீக்குட்டியிடம் கைநீட்டிக் கடன் வாங்கத் துணியும் செம்பன்குஞ்சுவுக்கு, தன் பெண் கருத்தம்மாவை அவனிடம் ஒப்படைக்கத் துணிவு இல்லை.

பழனி ஒரு இடத்தில், 'நீ ஒரு மீனவ சமூதாயத்தைச் சேர்ந்த பெண் தானே? அப்பறம் எதுக்கு அந்த முஸ்லிம் பையன் கூட சின்ன வயசுல இருந்து பழகின?' என்பான். விவரம் தெரியாதவன் என அறியப்படும் பழனிக்கே இந்த எண்ணம் தான் இருக்கிறது.

இப்படி நாவல் முழுக்க, சாதி மதம் பற்றிய ஏற்றத் தாழ்வுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

**சமூகம்:**

மேலே குறிப்பிட்டுள்ள மூடநம்பிக்கைகள் யாவும், அவர்களின் கலாச்சாரத்தோடு கலந்துவிடுவது தான், நாம் இங்கே கவனிக்க வேண்டிய விஷயம்.

மூடநம்பிக்கைகள், மக்களின் கலாச்சாரத்தோடு கலந்து விட்டால் அந்நாடு முன்னேறாது!

இன்றும் இது போன்ற நம்பிக்கைகள் கொண்டவர்கள், எல்லா மதங்களிலும் எல்லா சாதிகளிலும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

மீனவர்கள் சமூதாயத்தில், அவர்களுடைய குடும்ப முன்னேற்றத்துக்குப் பெண்களின் பங்கு மிகப்பெரியது. பிடிபடும் மீன்களைக் கூடையில் வைத்து, வீதி வீதியாக சென்று விற்பதன் மூலம் குடும்பம் நடத்தத் தேவையான பணம் அவர்களுக்குக் கிடைக்கிறது. இதை அவர்கள் பெருமையாகவும் கடமையாகவும் நினைக்கிறார்கள்.

விருப்பம் இல்லாத திருமணம் செய்தும் கூட, கருத்தம்மா தன்னுடைய கடமையில் இருந்து விலகவில்லை. சிறிது நாட்களிலேயே எல்லாவற்றையும் மறந்து, பழனியுடன் அவளால் குடும்பம் நடத்த முடிகிறது. இதன் மூலம், தான் ஒரு முக்குவத்தி (மீனவர்களின் சாதி உட்பிரிவு) என்ற அடையாளத்தை அவள் காத்துக் கொள்கிறாள்.

ஆனால், தொடர்ந்து இந்தச் சமூகம் அவள் மீது வைக்கும் குற்றச்சாட்டுகளை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. 'இவள் கெட்டுப்போனவள்' என்ற அடையாளத்துடன் தான் நாவல் முழுக்க அவள் பயணம் செய்கிறாள்.

அதன் விளைவு தான், நாவல் முடிவில் அவள் எடுக்கும் முடிவு!




*

**கடலம்மாவின் கோபம்:**

மொத்த நாவலையும் ஒரு குறுக்கு வெட்டு கோணத்தில் பார்த்தால், ஒரு பெண்ணினுடைய கற்பு பற்றியே முதன்மையாக பேசப்படுகிறது.

தகழியின் எழுத்துக்களை ஆராய்ந்த கே. எம். ஜார்ஜ், செம்மீன் நாவலை முன்னிலைப்படுத்தி, 'கற்பு என்றால் என்ன? அதன் வரையறைகள் என்ன?' என்று கேள்வி எழுப்புகிறார். 'கணவரிடத்தில் விசுவாசமாக இருப்பது கற்பா? அல்லது காதலனிடம் விசுவாசமாக இருப்பது கற்பா?' என கேட்கும் இவர், பெண்கள் தங்களது உணர்ச்சிகளை சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாமல் செயற்கையாக வெளியில் நடிக்கிறார்கள் என்கிறார்.

ஒரு முற்போக்கு எழுத்தாளர் என அறியப்படும் தகழி, ஒரு சமூகத்தின் மூடநம்பிக்கைக்குத் துணை போகும் விதமாக நாவலின் முடிவை அமைத்திருப்பது அதிர்ச்சியே!

*

இந்நாவல் 1965 ஆம் ஆண்டு, ராமு கார்யாட் இயக்கத்தில் இதே பெயரில் மலையாளத்தில் வெளியாகி, மிகப்பெரிய வெற்றியடைந்தது. சிறந்த திரைப்படத்திற்கான தென் இந்தியாவின் முதல் தேசிய விருதை வென்றது.

இதில் இடம்பெற்ற புகழ்பெற்ற பாடல்களின் மூலம், செம்மீன் உலகம் முழுக்கப் பரவியது. சிவில் சௌதிரி இசையில்,'மானசமைனே வரூ','கடலினக்கரெப் போணோரே' போன்ற பாடல்கள், காலத்தால் அழியாதது.

கருத்தம்மாவாக ஷீலாவும், பரீக்குட்டியாக மதுவும் நடித்திருந்தனர். பின்னாளில் இந்தப்படமே அவர்களுடைய அடையாளமாக மாறிப்போனது.

*

இந்நாவலை படித்து முடித்தவுடன் ஒரே ஒரு எண்ணம் தான் என் மூளைக்குள் ஓடியது. இத்தனை மரபுகளையும், நம்பிக்கைகளையும், சாதி மத பாகுபாடுகளையும் அமைதியாக இந்தக் கடல், பார்த்துக் கொண்டு தான் இருக்கிறது. மக்களின் மூடநம்பிக்கைகளை அதன் மீதே கிடத்தி, அதனையே பலி கிடா ஆக்குவதால் தான் என்னவோ சுனாமியாக வந்து நம்மை வாரிக் கொண்டு சென்றுவிட்டது.

எல்லோரும் சொல்லியது தான். மீண்டும் சொல்கிறேன்:

'இயற்கையின் முன்பு, நாம் ஓர் சிறு துகள்'

# புரிந்தது!

மலர்மதி





“இந்தாம்மா, இந்த மாச சம்பளம். நாளையிலிருந்து நீ வேலைக்கு வரவேணாம்.” என்றார் தணிகாசலம்.

‘பக்’கென்று அதிர்ந்தாள் பூங்கொடி.

“ஐயா.... ஏன் என்னை வரவேணாம்னு சொல்றீங்க?”

“நாங்க வீடு மாறப்போறோம்.”

பொய் சொன்னார்.

“சரிங்கய்யா....”

சோகமாய் அகன்றாள் பூங்கொடி.

அடுப்படியில் காபி போட்டுக்கொண்டிருந்த பத்மாவதி ஓடி வந்தாள்.

“ஏங்க வேலைக்காரியை திடீர்னு நிறுத்திட்டீங்க?”

“எல்லாம் காரணமாத்தான்.”

“அப்படி என்ன பொல்லாத காரணம்? இந்த காலத்துல வேலைக்காரிங்க கிடைக்கறதே கஷ்டம். ரொம்ப நாளைக்கு அப்புறம் அதுவும் என்னோட தம்பி தேடிப்பிடிச்சு கொண்டு வந்த வேலைக்காரி. தானுண்டு தன் வேலையுண்டுன்னு இருப்பவ. வீட்டு வேலையில எனக்கு எவ்வளவு ஒத்தாசையா இருந்தா தெரியுமா? ஒரு நல்ல வேலைக்காரியை நிறுத்திட்டீங்களே? இப்ப நான் தனியா அல்லல்படணுமா? என்னால முடியாது.” என படபடத்தாள் பத்மாவதி.

“பூங்கொடி ஒரு நல்ல வேலைக்காரிதான். நான் மறுக்கலை....”

“பின்னே? ஏன் நிறுத்திட்டீங்க?”

“சொல்றேன். ஒரு பெண் பிள்ளை என்றால் நாம் எப்படி பொத்தி, பொத்தி வளக்கறோம்?”

“நமக்குத்தான் ரெண்டுமே ஆண் பிள்ளைங்கத்தானே?”

“அதுக்காக அவங்களை எப்படி வேணாலும் விட்டுட முடியுமா? அவங்களையும் நாம் ஒழுங்கா வளர்க்க வேணாமா? மூத்தவன் ஃபைனல் இயர்ல இருக்கான். இன்னொருத்தன் செகெண்ட் இயர்ல படிக்கிறான். பூங்கொடி டீன் ஏஜ்ல இருக்கா. பாக்கறதுக்கு அழகா வேறு இருக்கா. ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிடக்கூடாதில்லையா? அதனால்தான் அவளை நிறுத்தினேன். அவளுக்கு பதிலா வயதான பொம்பளையை நாளையிலிருந்து வரச்சொல்லியிருக்கேன். போதுமா?” என்றார் தணிகாசலம்.

"என்னங்க பேசுறீங்க..? நல்லவேளை உங்க மனசுல தோணுன இந்த கீழ்த்தரமான எண்ணம் அவனுகளுக்குள்ள இதுவரை இல்லை. பெண்பிள்ளை இல்லாத வீட்டுல அவளை கூடப் பிறந்தவளா நினைக்கிறானுங்க. அவளும் அப்படித்தான் நடந்துக்கிறா. இன்னக்கி உலகம் வீட்டுக்குள்ள வந்திருச்சுங்க. கெட்டுப்போக ஏகப்பட்ட வழி இருக்கு, அதுல போகாம நல்லவங்களா இருக்காங்கன்னா அது நம்ம வளர்ப்புன்னு பெருமைப்பட்டுக்கலாம். ஆனா உங்க பிற்போக்குத்தனமான எண்ணத்தால நீங்க செஞ்சது அவனுகளுக்குத் தெரிஞ்சா அவனுக மனசுக்குள்ள ஒரு வலியோ, வடுவோ உண்டாகும். அதுவே தப்புச் செஞ்சா என்னன்னு தோண வைக்கும். முதல்ல உங்க முடிவை மாத்தி பூங்கொடிய வரச் சொல்லுங்க" என்றாள் கோபமாக.

மனதளவில் தான் இன்னும் பின்தங்கி இருப்பது அவருக்குப் புரிந்தது.

# ஜப்பானிய ஹைக்கு தொடக்கமும் தொடர்ச்சியும்



பகுதி : 2



**ச.கமலக்கண்ணன்,
ஜப்பான்**

கவிஞர்களின் வாழ்வே கவித்துவமாவது என்பது அரிது. இவரது கவிதை வாழ்வுக்கு வளம் சேர்த்தவை இவரது பயணங்களும் சீடர்களுக்கு இவர் எழுதிய கடிதங்களும்தான். இவருக்கு முன் வாழ்ந்த ஜப்பானியக் கவிஞர்கள் மற்றும் சமகாலத்தில் வாழ்ந்த சீனக் கவிஞர்களின் கவிதைத் தொகுப்புகளை இவர் சேமித்து வைத்திருந்தது கண்டறியப்பட்டுள்ளது. இவரது பயணங்களின்போது அவற்றைத் தன்னுடனேயே கொண்டு சென்றிருக்கிறார். இவருக்கு 500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கவிஞர் சாய்க்யோ (Saigyou) என்பவரைத் தன் ஆசிரியராக வரித்துக்கொண்டார். என்றாவது ஒருநாள் சாய்க்யோவின் ஏதாவது ஒரு கவிதை நூலை வாசிக்காவிட்டால் அன்றைக்கு நாக்கில் நெருஞ்சிமுள் குத்தியதுபோல் இருக்கும் என நண்பர்களிடம் அடிக்கடி கூறுவாராம்.

ஒரே இடத்தில் வசிப்பதைவிட இடம்பெயர்ந்துகொண்டே இருப்பதை விரும்பியிருக்கிறார். எனவே ஆடம்பரத்தைச் சுமையாகக் கருதினார். இவருக்கு முன் வாழ்ந்த கவிஞர்கள் தங்களது கவிதைகளை எழுதிய இடங்கள், கவிதைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்கள் ஆகியவற்றை நேரில் சென்று கண்டு அங்கே சிலகாலம் அந்த இடங்களில் தங்கிவிட்டு அடுத்த இடத்துக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒவ்வோர் இடத்திலும் இதற்குமுன் அங்கு புனையப்பட்ட கவிதையை நினைவுகூர்ந்து அதற்கு மறுமொழியாகவோ அக்கவிதையுடன் தொடர்புடையதாகவோ அல்லது அக்கவிதையில் வெளிக்கொணரப்படாத அவ்விடத்தின் சிறப்பையோ கவிதைகளாக வடித்திருக்கிறார்

இவர் பின்பற்றிய ஷிண்டோ மதம் வாழ்வை நேசிக்கவும் சிறு நிகழ்வுகளையும் பொருட்களையும்கூட உன்னிப்பாகக் கவனிக்கவும் கற்றுத் தந்திருந்தது. இவரது கவிதைகள் பெரும்பாலும் புல்லின் நுனி, பறவையின் கண், பூச்சிகள் சிறகுகளைத் தேய்த்துக்கொள்ளுதல் என எளிமையான பாடுபொருட்களையே கொண்டுள்ளன. கவிதைகள் வெளிப்படுத்திய கொடூரமான பார்வைகளையும் மாற்ற முனைந்துள்ளார். இவரது சீடர் ஒருவர் "தட்டாம்பூச்சியின் சிறகுகளை வெட்டிவிட்டால் அது சிவப்பு மிளகைப்போல் காட்சியளிக்கும்" என ஒரு கவிதையில் எழுதியிருந்தார். அவரைக் கடிந்துகொண்டு அதையே "சிவப்பு மிளகுக்குச் சிறகுகள் வைத்தால் அது தட்டாம்பூச்சியைப்போல் காட்சியளிக்கும்" என மாற்றி எழுதினார்.

இவ்வாறெல்லாம் கவிவளர்த்துக் கவிதைக் கடவுள்கள் நிலைக்கு உயர்த்தப்பட்டிருந்த கவிஞர்களைக் கொண்டிருந்த ஜப்பான் நாட்டில் இன்று கவிதையின் நிலை என்ன? கவிதையின் பாடுபொருளைத் தீர்மானிப்பது காலம்தான். அந்தக் காலகட்டத்தில் மக்களுக்கு எது தேவையோ அதுவே இலக்கியத்தில் வெளிப்படும். போர்களற்ற அமைதியான காலங்களில் காதலும் இயற்கையை விதந்தோதுதலும் முன்னிலை வகிக்கும். போர் முடிந்த காலத்தில் வென்ற நாடுகளில் களிப்பும் தோற்ற நாடுகளில் துயர நிகழ்வுகளும் நம்பிக்கையூட்டல்களும் பாடப்பெறும். 17-18ஆம் நூற்றாண்டுகளில் உச்சத்துக்குச் சென்ற ஹைக்குவின் நிலை கி.பி 1868இல் மெய்ஜி (Meiji) பேரரசு காலத்தில் இளைஞர்களிடையே தன் நிலையைத் தொழில்வளர்ச்சியிடம் பறிகொடுக்கத் தொடங்கியது.

ஜனவரி 3, 1868 ஜப்பானில் மிகப்பெரும் அரசியல் மாற்றம் நிகழ்ந்த நாள். 1867 வரை சுமார் 260 ஆண்டுகள் அண்டை அயலார் தொந்தரவின்றிப் பாதுகாப்பாக இருந்த ஜப்பானில் நிலவிய உள்நாட்டுப் பாதுகாப்பு இலக்கிய வளர்ச்சிக்கு வழிகோலியது. அச்சுத் தொழிலும் காகித உற்பத்தியும் முறைப்படுத்தப்பட்டு நூலகங்களும் வாசிப்பும் பன்மடங்கு பெருகின. தனிமைப்படுத்துதல் முடிவுற்ற 1868ஆம் ஆண்டில் சுமார் 800 பதிப்பகங்கள் ஜப்பானில் இருந்தன என்ற செய்தி வாசிப்பின் வீச்சை வெளிப்படுத்துகிறது. மேத்யூ சி. பெர்ரி என்ற அமெரிக்க மாலுமியால் ஜப்பானின் எல்லைகள் வலுக்கட்டாயமாகத் திறக்கப்பட்டு உலக நாடுகளுடன் வணிகங்கள் பெருகத் தொடங்கின. நவீனமயமாக்கல் தொடங்கியது. அதன் பக்கவிளைவாக மேற்கத்திய ஆதிக்கம் உணரப்பட்டது. இந்த உணர்விலிருந்து தற்காத்துக்கொள்ள நாட்டுப்பற்றும் அதிகரித்தது.

எல்லாத் துறைகளும் மேற்கத்தியக் கலாச்சாரத்திலிருந்து தற்காத்துக்கொண்டு ஜப்பானியத் தனித்துவத்தை வெளிப்படுத்தவும் அக்கலாச்சாரத்தைப் பின்பற்றி மேலும் சிறப்படையவும் என இருவேறு திசைகளில் பயணிக்கத் தொடங்கியதில் கவிதையும் விதிவிலக்காக அமையவில்லை. பாடுபொருட்கள் மாறின. வடிவமும் மாறிற்று. நம் புதுக்கவிதை போன்று இலக்கணக் கட்டுப்பாடுகள் தளர்ந்தன. இங்கே மேற்கத்தியக் கலாச்சாரம் எனக் குறிப்பிடப்படுவது அமெரிக்க ஐரோப்பியக் கலாச்சாரங்கள் மட்டுமல்ல. சீன, கொரியக் கலாச்சாரங்களும் ஜப்பானுக்கு மேற்கத்தியவைதான். 1867 வரை முடக்கி வைக்கப்பட்டிருந்த கிறிஸ்தவ மதமும் 1868க்குப் பிறகு வளரத் தொடங்கியது. இக்காலகட்ட உரைநடைகளிலும் கவிதைகளிலும் மேற்கத்தியக் கூறுகளின் கலப்பு சுமார் 75 ஆண்டுகள் நீடித்தது. அதன் பின்னர் ஜப்பானிய வரலாற்றின் அடுத்த திருப்புமுனையான இரண்டாம் உலகப்போர் தொடங்கிற்று.

கி.பி. 1945இல் போரின் முடிவில் உருக்குலைந்துபோன ஜப்பானை மீட்டெடுக்கப் பொதுவுடைமை இயக்கத் தலைவர்கள் முனைந்து வழிமுறைகளை வகுக்கத் தொடங்கினர். போரில் தோல்வியடைந்த ஒரு நாடு எப்படிப்பட்ட கசப்பான அனுபவங்களையெல்லாம் பெறும் என வரலாற்றில் முதல்முறையாக ஜப்பானியர்கள் உணர்ந்தனர். எதிர்காலம் மீதான நம்பிக்கைகள் சிதைந்தன. மதம் மற்றும் கலாச்சாரங்களின் மீதான குருட்டு நம்பிக்கைகள் தகர்ந்தன. எதையாவது பற்றிக்கொண்டு மேலேறிவிட மாட்டோமா எனத் தவித்தவர்களுக்கு எந்த நம்பிக்கையும் கைகொடுக்கவில்லை. பஞ்சம், வறுமை, கறுப்புச் சந்தை, நோய்கள், ஊட்டச்சத்துக் குறைவால் ஏற்படும் இறப்புகள், பெருகிவரும் போர் அனாதைகள், விலைமாதர்கள், தொழிலாளர் தகராறுகள் எனத் தலைவர்கள் பன்முனைத் தாக்குதல்களைச் சமாளிக்கவேண்டி இருந்தது.

அமெரிக்காவின் மக்களாட்சித் தத்துவமும் தொழில் வளர்ச்சியும் அணுகுண்டு வீசிய எதிரிகள் என்ற நிலையை மறக்கச் செய்து ஜப்பானியர்களை ஈர்த்தது. கல்வி உட்பட்ட துறைகளில் மேற்கத்திய நாடுகளில் இருந்த புதுமைகள் ஜப்பானியர்களால் பெரும் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டன. கடந்தகாலப் பெருமைகளைவிட நிகழ்காலக் குடியரசின் தேவை இளைஞர்களால் உணரப்பட்டது. இதன் விளைவாக 1947இல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் மக்களிடையே நம்பிக்கையை விதைத்தது. போர்களற்ற சமுதாயத்தை உருவாக்க அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதிர்காலத்தின் மீதான அச்சத்தைப் போக்கின.



நாட்டின் இறையாண்மை மன்னரிடமிருந்து மக்களுக்கு மடைமாற்றப்பட்டபோது இனிமேல் மன்னருக்காகப் போர்களுக்குச் சென்று மடியவேண்டியதில்லை என மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். அதுவரை பாடுபொருள்களாக இருந்த அழிவு, விரக்தி, மரணம், நிலையற்ற தன்மை ஆகியவை மாறி அன்பும் காதலும் நம்பிக்கையும் மேலோங்கத் தொடங்கின.

அதன்பின் 1950களில் ஏற்பட்ட அறிவியல் மற்றும் தொழில் வளர்ச்சி மக்களிடையே இருந்த இலக்கிய ஈடுபாட்டைக் குறைக்கச் செய்தது. புதுக்கவிதைகளை எழுதுபவர்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் இருந்தாலும் மரபுக்கவிதைகளான ஹைக்கு, தான்கா போன்றவற்றை எழுதுபவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்குச் சுருங்கினர். ஹொக்குவுக்கு ஹைக்கு என்று பெயரிட்ட மசாஓக்கா ஷிகி (Masaoka Shiki 1867-1902), ஒகிவாரா செய்சென்சுய் (Ogiwara Seisensui 1884-1976), ஓஸாக்கி ஹோசாய் (Ozaki Housai 1885-1926), சந்தோகா தனேதா (Santouka Taneda 1882-1940) ஆகியோர் கடந்த நூற்றாண்டின் ஹைக்குக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவருமே பாஷோவின் சீடப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் எனக் கூறலாம்.

காலப்போக்கில் கவிஞர்களின் எண்ணிக்கையும் கவிதையின் அடர்த்தியும் குறைந்து வருவது ஜப்பான் மட்டுமின்றி உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவானதுதான் என்றாலும் சுருங்கச் சொல்லிப் பொருள்தேடச் செய்யும் ஹைக்கு, அது தோன்றிய ஜப்பானைவிட்டுப் பல நாடுகளில் பல மொழிகளில் பரவியிருப்பது அதன் வடிவத்துக்கும் பொருள்கொள்ளக் கற்பனையை விரியவைக்கும் தன்மைக்கும் கிடைத்த வெற்றியே எனலாம்.

-நிறைவு பெற்றது.

# விதியை மாற்றும் பெண்கள்



இரவு உணவின் போது பூங்கோதை மிகவும் அமைதியாக இருந்தாள். அவள் முகம் அவளின் மன ஓட்டத்தை பிரதிபலிக்காத போதும், பூங்கோதை ஏதோ ஆழ்ந்த யோசனையிலும் வாட்டத்திலும் இருக்கிறாள் என்பதை சீதா புரிந்துக் கொண்டார். எப்பொழுதும் உணவு உண்ணும் நேரத்தில் அவளின் அன்றைய பொழுது நடந்த அனைத்தையும் ஒன்று விடாமல் பகிரும் பூங்கோதை, இன்று அவளின் செவ்வாயை உணவு உண்ண மட்டும் பயன்படுத்தினாள்.

உணவு முடித்தபின் தொலைக்காட்சி பார்த்து கொண்டிருந்த சீதா மற்றும் ரகுராமிடம், "சரிம்மா, நாளை காலை 8:40-க்கு எனக்கு டெல்லிக்கு விமானம். நான் சீக்கிரமா போய் தூங்குனாதான் காலையில் சீக்கிரம் எழுந்திரிக்க முடியும். இன்னைக்கு கயல் உங்க கூடவே தூங்கட்டும். நான் காலையில் கிளம்பும் போது கயல் முழிச்சான்னா என் கூடவே வரணும்னு அழுவாள். சரியா? குட் நைட் அம்மா, அப்பா" என்று சொல்லி அவர்களின் பதிலுக்கு காத்திராமல் மேலே அவன் அறைக்கு செல்ல படியேறினான் கிஷோர்.

"குட் நைட் அத்தை, மாமா" என்று சொல்லிவிட்டு தன் கணவனை பின்தொடர்ந்தாள் பூங்கோதை.

அவ்வளவு நேரம் அமைதியாக இருந்த சீதா, பூங்கோதை செல்ல தயார் ஆனதும் "ஒரு நிமிடம் பூங்கோதை. உன் கூட கொஞ்சம் பேசணும்" என்று கூறி தன் மடியில் உறங்கிக் கொண்டிருந்த மூன்று வயது பௌத்திரி, கயல் விழியின் உறக்கம் கலையாதவாறு தன் கணவன் ரகுராமிடம் கொடுத்தார்.

கிஷோரும், பூங்கோதையும் எதற்கு அழைத்தார் என்று புரியாமல் நின்றனர்.

சீதா அவர்கள் அருகில் வந்து "இன்னைக்கு உனக்கு என்ன ஆச்சு? ஏதோ யோசனையிலேயே இருக்கிறாய்? ஒண்ணுமில்லைன்னு பொய் சொல்லாதே. உன் முகத்தை வச்சே கண்டுபிடிச்சுட்டேன்" என்றார்.



பிரேம ராகவி

உடனே கிஷோர் "அம்மா, அது ஒண்ணுமில்லை. அவள் அலுவலகத்தில் அவளை ஒரு வருடம் ஆன்சைட்டு-க்கு ஜெர்மனி போறீங்களான்னு கேட்டுருக்காங்க. பூங்கோதைக்கும் அது முடியாதுனு தெரியும். ஆனா எங்க கல்யாணத்துக்கு முன்னாடியே அங்க போகணும்னு ஆசையாம். அங்க போயிட்டு வந்தா பூங்கோதை எதிர்பார்த்த ஒரு பிரமோஷனும் சுலபமா கிடைச்சிருக்குமாம். அதான் மேடம் இன்னைக்கு கொஞ்சம் வருத்தத்தோடு இருக்காங்க" என்றான்.

"ஆமா அத்தை. நான் பிரமோஷனிற்காக ரொம்ப ஆவலா இருந்தேன். கல்யாணத்திற்கு முன்னாடியே இந்த வாய்ப்பு கிடைக்கும்னு எதிர்பார்த்தேன். ஆனால் இப்போ கிடைச்சிருக்கு. எதுவும் செய்ய முடியாது. ஒரு நாள் கொஞ்சம் வருத்தமா இருக்கும். அப்புறம் சரி ஆகிவிடும் அத்தை" என்றாள் பூங்கோதை சிறு புன்னகையுடன்.

சீதா பூங்கோதையிடம் "ஏன் எதுவும் செய்யமுடியாது பூங்கோதை? அங்க போகணும்னு விருப்பப்பட்டேன்னு சொல்லுற. போயிட்டு வந்தா நீ ஆவலாய் எதிர்பார்த்த பிரமோஷன் கிடைக்கும்னு சொல்லுற. அங்கே போயிட்டு வரவேண்டியது தானே" என்று எதார்த்தமாக கூறினார்.

மூவரும் சீதாவின் கூற்றை நம்பமுடியாமல் பார்த்தனர்.

"அம்மா! என்ன சொல்றீங்க? பூங்கோதை போக வேண்டியது ஜெர்மனிக்கு. அதுவும் ஒரு வருஷம். அவள் எப்படி என்னை விட்டு தனியாக போக முடியும். அதுவும் கயலை யார் பார்த்துப்பா?" என்று கிஷோர் அதிர்ச்சியுடன் வினவினான்.

**“நீ இரண்டு வருஷத்துக்கு முன்னாடி ஆன்சைட்டுக்கு போனபோது கயலை நாங்க மூணு பேரும் பார்த்துக்கலையா? கயலுக்கு கொஞ்சம் கஷ்டமாக தான் இருக்கும். இல்லைன்னு சொல்லல.”**

"தெரியும் டா. இதையே எத்தனை தடவை சொல்லுவ? ஒரு வருஷம் தானே. கயலை பார்த்துக்க நம்ம மூணு பேரு இருக்கோமே. நீ இரண்டு வருஷத்துக்கு முன்னாடி ஆன்சைட்டுக்கு போனபோது கயலை நாங்க மூணு பேரும் பார்த்துக்கலையா? கயலுக்கு கொஞ்சம் கஷ்டமாக தான் இருக்கும். இல்லைன்னு சொல்லல. ஆனால் இந்த வாய்ப்பு போனால் மறுபடியும் வருமான்னு தெரியாது. அதுவும் அவள் ஆசைப்பட்ட இடம், பதவி உயர்வு கிடைக்கலாம்னு வேற சொல்கிறாள். அதான் சொல்லுறேன்" என்றார்.
கிஷோர் தயங்கினான். "அது இல்லம்மா. நானும் அடிக்கடி மீட்டிங், அது, இதுன்னு வெளியூர் போயிடுறேன். அவளும் இல்லாமல் உங்களை யார் பார்த்துப்பா? அதுவும் இல்லாமல் கல்யாணம் ஆன பிறகு இப்படி தனியா ஒரு வருஷம் அவள் வேற நாட்டுக்கு போனா மத்தவங்க என்ன சொல்லுவாங்க?" என்றான்.

"டேய், நாங்க என்ன சின்ன பிள்ளைங்களா? எங்களை நாங்க பார்த்துப்போம். நீ உன் வேலை காரணமா வெளியூர் போயிட்டு வர மாதிரி பூங்கோதையும் அவள் வேலை காரணமா போயிட்டு வரட்டுமே. அதுக்கு ஏன் இவ்வளவு தயக்கம் உனக்கு? அவளும் நல்லா படிச்சு, நல்லா வேலை செய்யுறா. உன்னை கல்யாணம் பண்ணதாலும், கயல் பிறந்ததாலும் அவள் உழைப்பையும், கனவுகளை தியாகம் செய்யணுமா, என்ன? கல்யாணத்துக்கு முன்னாடி இந்த வாய்ப்பு கிடைச்சிருந்தா போயிருப்பாள்தானே. அவள் அப்படி போகலைனாலும் சரி. நம்ம வீட்டு பெண். அவளோட அயராத உழைப்பையும், கனவுகளையும் நமக்காக தியாகம் செய்யுறதை என்னால் ஏத்துக்கமுடியாது. அப்புறம், மத்தவங்களை பத்தி ஏன் கவலைப்படுற? கல்யாணத்துக்கு முன்னாடி போனால், கல்யாணமாகாத பெண் எப்படி தனியா இருக்கலாம்னு பேசுவாங்க. கல்யாணம் ஆன பின்னாடி போனால், அதெப்படி கணவன் இல்லாமல் போகலாம்னு பேசுவாங்க. அதெல்லாம் கண்டுக்காத. சொல்லுறவங்க என்கிட்டதானே சொல்லுவாங்க? பார்த்துக்கறேன். எங்கிட்ட யார் வந்து நாக்கு மேல பல்லு போட்டு பேசுவாங்கன்னு பார்ப்போம். பூங்கோதை, நீ எதையும் யோசிக்காம போயிட்டு வா. நாங்க உனக்கு உறுதுணையா இருப்போம். உன் லட்சியங்களை என்றும் மதிப்போம்" என்றார் சீதா.

பூங்கோதை ஆனந்தத்தில் அவள் மாமியாரை ஆரத் தழுவி நன்றி கூறினாள். கிஷோருக்கு அப்பொழுது தான் தன் மனைவி மறைத்து வைத்திருந்த ஆசையும், கனவும் புரிந்தது.
ரகுராம் தன் மனைவியை பெருமையாக பார்த்தார். இதை தான் கூறியிருந்தால் கூட கிஷோரும், பூங்கோதையும் ஏற்றிருப்பார்களா என்று தெரியாது. அத்தை என்ன நினைப்பார் என்று தயங்கியிருப்பாள். ஆனால் சீதாவே கூறியதும் பூங்கோதை மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள். சீதாவை போல் அனைவரும் சிந்தித்தால் நிறைய பெண்கள் தங்கள் கனவுகளையும் ஆசைகளையும் மனதிற்குள் புதைக்க தேவையில்லையே. ஒரு பெண் நினைத்தால் சமுதாயத்தையும், விதியையும் மாற்றமுடியும் என்று எண்ணினார்.



# பூவார் சென்னி மன்னன்

பாலாஜி பாஸ்கரன்



## திருவாசகம் – இளையராஜா




எவ்வளவு பெரிய கூட்டத்திற்குள் சுற்றி இயங்கிக் கொண்டிருந்தாலும் மனம் திடீரென தனிமைக்கு ஏங்கும், தேடிச் செல்லும். நேரங்காலமின்றி ஓடித் திரிய வேண்டிய சூழல், அக புற அழுத்தங்கள் எப்படா அக்கடானு உட்காருவோம்னு ஏங்கும் மனது.

இப்படியாக ஒவ்வொரு நாளும் தேடித் திரியும் போது மன ஓய்வுக்கு எங்காவது தலைசாய்த்து சற்றே ஓய்வெடுத்தால், அமைதிப்படுத்தினால் நலமென்று தோன்றும். இப்படியே தொடர்ந்து ஓடி கடமைகளில் மூழ்கி அவைகளை நிறைவேற்றுவதிலேயே பெரும்பகுதி செலவிட்டு இறுதி நோக்கிச் செல்லும் போது ஒவ்வொன்றாக அறுபடும்.

பெரிதாக நினைத்தது, இன்றி அமையாததென்று நினைத்தது, போற்றிப் பேணிக் காத்தது எல்லாமே அதன் மதிப்பை இழக்கத் தொடங்கும்... மனதில் அதற்காக உண்டாக்கி வைத்திருந்த பிம்பங்கள் எல்லாமே சிறிதாகிப் போகும், எதும் இல்லாமல் கூடப் போகும்... என்ன வேணாலும் ஆகிக்கோ எனக்கொன்னும் கவலையில்லை, எல்லாம் அவன் செயல் என மெல்ல மெல்ல பற்றறும். அப்படியொரு நிலை, ஒரு நாள் எதற்கும் இறுதி எட்டும் போது உறுதியாக வரும்.

பற்றறுதல் ஆன்மீகத்தில் குறிப்பாக சைவத்தில் மிகவும் முக்கியமான கூறு. எளிதில் இயலாத செயல் என்றாலும் மீண்டும் மீண்டும் உணர்த்தப்படுவது பற்றறுத்தல். திருவாசகம் சைவத்தின் முத்துகளில் ஒன்று. ஐம்பத்தியொரு பகுதிகளையும் அறுநூற்றி ஐம்பத்தெட்டு பாடல்களையும் கொண்ட ஒரு பக்தி இலக்கியம் திருவாசகம். பன்னிரு சைவ சமயத் திருமுறைகளில் திருவாசகம் எட்டாம் திருமுறையாக உள்ளது.

திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது மூதுரை வாக்கு. உண்மைதான். செய்யுள் ஓசையின் இனிமையும் இசையும் கேட்போரை பாடுவோரைத் தன்னிலை மறக்கச் செய்யும். திருவாசகத்தில் யாத்திரைப்பத்து என்ற தலைப்பு நாற்பத்தைந்தாவது பகுதியாக வருகிறது. எல்லாம் முடித்து கிளம்புவோம், அவனடி சேர்வோம் பயணத்திற்கு கிளம்புங்கள் என்று அழைக்கும் நோக்கில் எழுதப்பட்ட பாடல்... எல்லாம் துறந்து விட்டு பொய்யான இவ்வுலக வாழ்வை விட்டு, நம்மை உடையவனின் காலடியில் போய்ச் சேர்வோம் என்று அழைக்கும் பாடல்.

யாத்திரைப் பத்து பாடல்களை முழுமையாகப் பொருள் உணர்ந்து அவற்றை உள்வாங்கிப் பாடும் போது நம்முள் இனிமையான ஒரு வெறுமை உண்டாகும்... அது நம் சிந்தையைப் பக்குவப்படுத்தும். முடிவுகள் எடுக்கும் போது ஒரு பெருந்தன்மை உண்டாகும்.

இப்படியாகப்பட்ட பாடலுக்கு இக்கால இசையும் சேர்ந்தால் எப்படி இருக்கும்? இசையின் ராஜா இளையராஜா திருவாசகத்திற்கு சிம்பொனி அமைப்பதற்காக ஆறு பாடல்களை எடுத்தாண்டிருக்கிறார். அதில் முதல் பாடலாக வருவது பூவார் சென்னி மன்னன் எனத் தொடங்கும் யாத்திரைப் பத்து பாடல். சிவபுராணம் சொல்லித் தொடங்கும் திருவாசகத்திற்கு சிம்பொனி அமைத்ததை இளையராஜா ஏன் பூவார் சென்னி மன்னனிலிருந்து தொடங்கினார் என்று ஆராய்வோமானால் அவரின் ஆன்மீக முதிர்ச்சி தெளிவாகத் தெரிகிறது... இதைப் பற்றி இன்னும் நிறையவே பேசலாம் எழுதலாம்.

நிற்க.

பூவார் சென்னி மன்னன் – பாடல் தொடங்கும் முதல் இசையாக பலமாக ‘டம்’மென கேட்கும் டிரம் இசை. முன்பு சொன்னது போல எத்தனை அழுத்தங்களால் நாம் இறுகியிருந்தாலும், இந்தப் பாடலைக் கேட்கத் தொடங்கியவுடன் முதல் ஒலியிலேயே ”ஒன்னுமில்லப்பா, பதறாத, ஒக்காரு ஒக்காரு பாத்துக்கலாம்” என்பதைப் போல ஒரு ஆறுதல்... பேரிரைச்சலாக இருக்கும் வகுப்பறையில் ஆசிரியர் குச்சியை வைத்து மேசையில் அடித்ததும் நிலவும் பேரமைதி போல அந்த டிரம் இசை கேட்டவுவன் மனது தன்னுள் இருந்த இரைச்சல்களையெல்லாம் அடக்கி அமைதியை நோக்கிப் பயணிக்கும்.

தொடரும் பாடல் உங்களை முதல் பத்து நொடிகளாகத் தொடர்ந்து விழும் அடிகளில் ஓரளவுக்கு கேட்க ஏதுவான மனநிலைக்கு அமைதிக்கு மனது வந்து விடும். பின்பு அடுத்த இருபத்தைந்து நொடிகள் தொடரும் கோரஸ் ஒருமுகப்படுத்தும்... கிட்டத்தட்ட மௌனம் சாத்தியமாகிவிடும்... அதன் பின்பு இளையராஜாவின் குரலில் பூவார் சென்னி மன்னன் எனத் தொடங்கி அடுத்த ஏழரை நிமிடங்கள் செல்லும் பாடல் உங்களை ஈர்த்து மயக்கும்.

காது கேட்கும் அளவிற்கு ஒலி அளவில் வைத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டு இந்தப் பாடலைக் கேட்கத் தொடங்குங்கள்... உங்களுக்குள் இருக்கும் இறுக்கங்கள் தளர்வதை உணர்வீர்கள்...

”தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
என்ன மாயம் இவைபோக....”

என நமை இளையராஜா இசையோடு இழுத்துச் செல்லும் போது கண்கலங்கினாலும் வியப்பில்லை... இசை மகத்தானது. பொருள் பொதிந்த இந்த திருவாசகப் பாடல்களுக்கு இசை அமைந்திருக்கும் ஒழுங்கு மனித கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டு நடந்த தெய்வச் செயலாகப் பார்க்கிறேன்.

”அடைவோம் நாம் போய்ச் சிவபுரத்துள்” என்று உயர்த்திப் போகும் போது நம் ஆன்மாவை உண்மையிலேயே பிரித்து சிவபுரத்திற்கு கொண்டு போய் விடுவாரோ என்று எண்ணத் தோன்றும்... அப்படியான இசையும் பாடலும் குரலும்...

”புடைபட்டுருகிப் போற்றுவோம்” என்று இறங்கி வரும்போதுதான் நம் உடம்புக்குள் உயிர் திரும்ப வந்தடைவது போன்ற நெகிழ்வு கிடைக்கும்... அதற்கடுத்து துள்ளி வரும் இசை கொஞ்சம் மகிழ்ச்சியின் வெளிப்பாடு... தன்னிலை மறந்து மனம் துள்ளும்.

இருக்கிறவங்க இருக்கட்டும் நாம் கிளம்புவோம் என்பதை” நிற்பார் நிற்க நில்லா உலகில் நில்லோம் இனி நாம் செல்வோமே” என்று வரும் போது நம் கைப்பிடித்து இழுத்துச் செல்லும் உணர்வு; மாயை களைந்த பெருமகிழ்ச்சி...

”பெறுதற் கரியன் பெருமானே” எனப் பாடி முடித்து பின்பு வரும் டிரம் ஒலி மீண்டும் மன ஒழுங்குக்கு கொண்டுவரும்.

எனக்கு மிகவும் நெருக்கமான உயிரில் கலந்த பாடலும் இசையும் இதுவென்று சொல்வேன். எப்பொழுதெல்லாம் என் மனதின் சமநிலை கெடுகிறதோ, இல்லை மனது அலைபாய்கிறதோ, மனதிற்கு ஓய்வு தேவைப் படுகிறதோ அப்பொழுதெல்லாம் ஒருங்கமைக்க, நிலைபெற இந்தப் பற்றறும் பாடலைக் கேட்பதுண்டு.



”தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதிவகையும் யாமார் எமதார் பாசமார் என்ன மாயம் இவைபோக....”

# அறிவுரைகள் விற்பனைக்கல்ல!





எம்.சங்கர்

“சிவகாமி” என்று அலறிய குரலிலிருந்தே சிதம்பரத்தின் கோபம் உச்ச நிலைக்கு ஏறிவிட்டது என்று புரிந்துவிட்டது அவர் மனைவி சிவகாமிக்கு. அவரது கோபத்திற்கான காரணத்தை ஓரளவு யூகித்து 11 மணிக்கு அவருக்குத் தரவேண்டிய குளிர்ந்த மோரை 11:30-க்கு கொண்டு வந்து அவர் முன்னால் நின்றாள்.

“நீ இந்த வேலக்காரங்களுக்கெல்லாம் ரொம்ப இடம் கொடுத்து கெடுத்து வச்சிருக்க. 11 மணிக்குத் தரவேண்டிய மோரை தராமல் வெளியில போயிட்டா இந்த சமையக்காரி…”
“இல்லீங்க நான்தான் அவள மாவரைக்க வெளியில அனுப்பிச்சேன். அவகூட அய்யாவுக்கு மோரக் கொடுத்துட்டு போறேன்னுதான் சொன்னா. நான் கொடுக்கறேன்னு சொல்லி அனுப்புச்சேன். என்னோட மிஸ்டேக்குதான்”

“நேத்து ராத்திரி நான் மீட்டிங் முடிச்சுட்டு லேட்டா வரேன்… வாட்ச் மேன் கேட்டத் திறந்து வச்சுட்டு தூங்கிகிட்டு இருக்கான்.”

“அவனுக்கு ஹை ஃபீவர்.. நான்கூட வீட்டுக்கு போகச்சொன்னேன்… அவன்தான் அய்யா வந்ததும் போறேன்னான். பாவம் தூங்கிட்டான் போல”.

“இப்படியே நீ இவங்களுக்காக வக்காலத்து வாங்கிவாங்கி அவங்க நல்லாக் கண்டுகிட்டாங்க. இத பாரு சிவகாமி இவங்கள எல்லாம் வைக்கற இடத்துல வைக்கணும் இல்லேன்னா தலைக்கு மேலே ஏறிடுவானுக.”

“பாவங்க அவங்களும் மனுஷங்கதானே… கொஞ்சம் மனிதாபிமானத்தோட நடந்துக்கலாமே ”.

“எனக்கு நீ சொல்லித்தரையா? சரி சரி இன்னிக்கு சாயங்காலம் முக்கியமான மீட்டிங் இருக்கு. பெரிய ஆளுங்கள்ளாம் வராங்க. பேசுறதுக்குத் தயார் பண்ணனும். பிஸியா இருப்பேன். கரெக்டா ஒரு மணிக்கு லஞ்ச், 3 மணிக்கு காஃபி, 5 மணிக்கு ட்ரைவர் வரணும். வரலேன்னா எல்லாரையும் சீட்டக் கிழிச்சு வீட்டுக்கு அனுப்பிடுவேன். அப்பவும் நீ இந்தச் சோம்பேறிங்களுக்காக பரிஞ்சுகிட்டு வரக்கூடாது. இப்பவே சொல்லிட்டேன்..”

“சரி சரி அதெல்லாம் வந்துடுவாங்க. நீங்க 5 மணிக்கு கிளம்பிப்போய் நல்லா பேசிட்டு வாங்க…” என்றபடி சிவகாமி உள்ளே சென்றாள்.

அவள் சொன்னபடியே நேரத்தில் எல்லோரும் வந்து அவருக்குத் தேவையானதைச் செய்தனர். 5 மணிக்கு ட்ரைவர் வந்து இவரைக் கூட்டிப் போகும்போது விழா தலைவர் இவருக்கு ஃபோன் செய்து விழாவில் சில மாற்றங்கள் இருப்பதாகவும் இவர் பேசும் இடத்தில் வேறு ஒருவர் பேசுவார் என்றும் சொல்ல, சிதம்பரம் வெகுண்டார்.

“ அதெப்படி என்னை சிறப்பு பேச்சாளராக அழைத்து விட்டு வேறு ஒருவரை பேசச் சொல்லலாம். இது எனக்கு எவ்வளவு அவமானம் தெரியுமா..? “ எனக் கோபமாய்க் கேட்கவும், “சிதம்பரம் சார்.. தயவு செய்து கோபிக்காதீங்க. உங்களுக்கு ஒரு அவமானமும் இல்லை. ஏனென்றால் சிறப்பு பேச்சாளர் யார் என்று அறிவிப்பு செய்யலை. சரியான நபர் பேசுவார் என்றுதான் சொல்லியிருந்தோம். அதனால கடைசி நிமிஷத்தில மாற்றினது யாருக்கும் தெரியாது. நீங்க கண்டிப்பா வரணும். ஏன்னா நீங்கதான் சிறப்பு விருந்தினர். சிறப்பு பேச்சாளரை கௌரவிக்க வேண்டும். அது மட்டுமல்ல இந்த மாற்றத்திற்கு என்ன காரணம் என்பதையும் அப்போது நான் விளக்குவேன்” என்று சொல்லி ஃபோனை துண்டித்து விட்டார்.



# தொழிலாளர் தினத்தின் சிறப்பு உரையை ஆற்றுபவர் முதலில் தங்களுடைய தொழிலாளர்களை எப்படி நடத்துகிறார் என்று பார்க்க வேண்டும் என்று தோன்றியது. தன்னுடைய தொழிலாளர்களை நன்றாக நடத்தாதவர் எங்ஙனம் இந்த நிகழ்வில் சிறப்புரை ஆற்ற முடியும்?

சிதம்பரத்திற்கு ஒரே குழப்பம். தன்னைப் பேச அழைத்துவிட்டு வேறு யாரையோ பேச வைப்பது அவருக்கு ஆத்திரம் அளித்தாலும், தன்னைச் சிறப்பு விருந்தினராக அழைத்ததற்கான மகிழ்ச்சியும் கடைசி நிமிஷத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கான காரணத்தை அறியும் ஆவலும் அவரை விழாவுக்கு போகத் தூண்டியது.

விழாவிற்குச் சென்ற சிதம்பரத்தை மேடையில் அழைத்து அமர வைத்துவிட்டு பேசத் தொடங்கினார் விழாத் தலைவர். முதல் 5 நிமிட பேச்சை அதிகம் கவனிக்காத சிதம்பரம், சிறப்புப் பேச்சாளரை விழாத் தலைவர் எப்படி தேர்ந்தெடுத்தார் என்று சொல்ல ஆரம்பித்த போது ஆர்வத்துடன் கவனிக்கலானார்.

இன்று தொழிலாளர் தினம். இதைப் பற்றி சிறப்புரை ஆற்ற ஒரு சிலரை மனதில் வைத்திருந்தேன். அதே சமயத்தில் காந்திஜியை பற்றிய ஒரு குறிப்பை படிக்க நேர்ந்தது அதாவது காந்திஜியிடம் ஒரு முதியவர் வந்து தன்னுடைய பேரன் அதிகமாக இனிப்புகளை சாப்பிடுவதாகவும் அவனிடம் அதிகமாக இனிப்பு சாப்பிடுவது கெடுதல் என்று காந்திஜி அறிவுரை சொல்ல வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்.அவன் காந்திஜியிடம் அதிகமாக மதிப்பு வைத்திருந்ததால் அவர் அறிவுரை சொன்னால் அவன் கேட்பான் என்று அவர் நம்புவதாகவும் கூறினார். அதை அமைதியாக கேட்ட காந்தி அவரை இரண்டு வாரம் கழித்து பேரனைக் கூட்டி வருமாறு சொன்னார் அதேபோல் இரண்டு வாரம் கழித்து அவர் பேரனைக் கூட்டி வந்தார். காந்தியும் அவனிடம் அதிகமாக ஸ்வீட் சாப்பிடுவது உடம்புக்கு கெடுதல் என்று சொல்லி அறிவுரை சொன்னார். பெரியவருக்கு குழப்பம்.

"காந்திஜி நான் இரண்டு வாரத்துக்கு முன்பே இந்த அறிவுரையை சொல்லச் சொன்னேன். ஆனால் நீங்கள் இரண்டு வாரம் கழித்து வா என்று சொல்லி அந்த அறிவுரையை இப்போது சொல்கிறீர்களே, அதை அன்றைக்கே சொல்லி இருக்கலாமே” என்று கேட்டார். அதற்கு காந்தி புன்னகைத்தவாறே “இரண்டு வாரத்திற்கு முன்பு நானே அதிகமாக இனிப்பு சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். நான் அவனுக்கு இனிப்பு சாப்பிடாதே என்று சொல்வதற்கு முன் நான் முதலில் இனிப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். அதைக் குறைப்பதற்கு எனக்கு இரண்டு வாரம் தேவைப்பட்டது. இப்பொழுது நானும் குறைத்துதான் இனிப்பு சாப்பிடுகிறேன். இப்போது எனக்கு அறிவுரை சொல்ல தகுதி இருக்கிறது” என்றார்.

இந்தக் குறிப்பை படித்ததும் எனக்கு பளிரென ஒரு ஐடியா தோன்றியது. தொழிலாளர் தினத்தின் சிறப்பு உரையை ஆற்றுபவர் முதலில் தங்களுடைய தொழிலாளர்களை எப்படி நடத்துகிறார் என்று பார்க்க வேண்டும் என்று தோன்றியது. தன்னுடைய தொழிலாளர்களை நன்றாக நடத்தாதவர் எங்ஙனம் இந்த நிகழ்வில் சிறப்புரை ஆற்ற முடியும்? அதனால் நான் ஒரு முடிவெடுத்தேன். நான் பேச அழைப்பவர்களின் வேலைக்காரர்களை ரகசியமாக சந்தித்து மறைமுகமாக அவர்களை அவர்கள் முதலாளி எப்படி நடத்துகிறார் என்று கேட்டேன். என்ன ஆச்சரியம்? நான் பேச அழைக்க நினைத்த பேச்சாளர்கள் தங்களுடைய வேலைக்காரர்களை மோசமாக நடத்துவதாக சொன்னார்கள். ஒரே ஒரு இடத்தில் மட்டும் தங்களை நல்லபடியாக நடத்துவதாக ஒருவரை குறிப்பிட்டு சொன்னார்கள்.

அந்த ஒருவர் தான் இன்று நமக்கு சிறப்புரை ஆற்ற வருகிறார். அவரை பொன்னாடை போற்றி கௌரவப் படுத்துவதற்காக சிதம்பரம் அவர்களை வேண்டுகிறேன் என்று பேச்சை முடித்து சிதம்பரத்திடம் பொன்னாடையை கொடுத்தார்.
கையில் பொன்னாடையை வைத்துக்கொண்டு யாரந்த சிறப்புப் பேச்சாளர் என்று பதட்டத்துடன் காத்திருந்தபோது, சிரித்துக் கொண்டு கைகளை கூப்பியபடியே மேடைக்கு வந்தாள்...

அவர் மனைவி சிவகாமி!

# முன் பனியும் பின் மறையும்



பாலமுருகன். லோ




கேலக்ஸி பதிப்பக வெளியீடான, எழுத்தாளர் இத்ரீஸ் யாக்கூப் அவர்களின் ‘மழையில் நனையாத குடை’ நூலிலிருந்து ‘முன்பனியும் பின் மறையும்’ என்னும் சிறுகதை குறித்து எனது வாசிப்பனுபவம் இது.

கமீலா மற்றும் அமீர் குடும்பங்களைச் சுற்றி வரும்படி கதாபாத்திரங்களை உருவகப்படுத்தியிருப்பார் கதையாசிரியர். இருவர் வீட்டிலும் ஆட்களின் எண்ணிக்கை அதிகம்.

அமீருடைய நண்பன் சிராஜ், இவனைச் சுற்றித்தான் கதை நகர்கிறது. சிராஜ் தனது சொந்த ஊருக்குப் போக வேண்டி, பேருந்தில் ஏறி சன்னல் ஓர இருக்கையாகப் பார்த்து அமருகிறான். அந்தச் சமயத்தில் பேருந்து நிலையத்தில் தேநீர்க் கடை தொடங்கி, பூக்கடை, மிட்டாய்க் கடை, பேக்கரி, உணவகம், அங்கும் இங்குமாக நடமாடும் மனித கூட்டம், அதுமட்டுமா பாதசாரி வியாபாரிகள் தங்களது தலையில் தின்பண்டங்களைச் சுமந்து கொண்டு பேருந்தினுள் ஏறியும், இறங்கியும் அவர்களது வியாபாரத்தை மேற்கொள்கிற அழகையெல்லாம் தெளிவாக உள்வாங்கித் தன் எழுத்தின் மூலம் வெளிக்கொணர்ந்திருப்பார் ஆசிரியர்.

நிறத்தை வைத்துப் பாகுபடுத்திப் பெண்களைப் பார்க்கும் கும்பல் இன்னும் இவ்வுலகில் வலம் வந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களது வாழ்வு இவ்வுலகி நிலைத்து நிற்கிறதா அல்லது சின்னாபின்னமாக மாறி விடுகிறதா என்பதைப் பேசுவதுதான் கதையின் களம். இதில் என்ன வேதனையான விஷயமென்றால் காசு பணத்திற்கு ஆசைப்பட்டு ஒருத்தியைக் கல்யாணம் கட்டிக்கொண்டு அவனது வீட்டிற்குக் கூட்டிவந்த பிறகு அவளுக்கு இழைக்கப்படும் துன்பங்களைச் சொல்லும் கதையாய் நகர்வதுதான்.

"கொட்டிய வார்த்தை அள்ள முடியாது" என்பதற்கு ஏற்ப அமீரின் தாய், கமீலாவை தினம் தினம் வார்த்தைகளால் கொன்று தீர்ப்பாள். மேலும் அமீர் கல்யாணம் செய்து கூட்டிக்கொண்டு வந்த நாட்களிலிருந்து கமீலாவை இரவு தேவைகளுக்கு மட்டும் உபயோகப்படுத்தும் ஒரு போதைப் பொருளாகத்தான் வைத்திருப்பான். அவன் அவளைத் தன் மனைவியாக ஒரு நாளும் சிந்தித்ததில்லை.

கமீலா எப்படியெல்லாம் அமீரின் குடும்பத்தாருடன் போராடினாள் என்பதை விரிவாகத் தனது எழுத்துகள் மூலம் நமக்குத் தெரியப் படுத்தியிருப்பார் கமீலா அவளது வாழ்கையை மாற்றி அமைத்துக்கொண்டாளா? அல்லது அவளது வாழ்வை அந்தப் பாழும் கிணற்றில் விழுந்து தனது வாழ்வை மேலும் கஷ்டமாக்கிக் கொண்டாளா? என்பதை கதையை முழுமையாக வாசிக்கும் போது உங்களால் தெரிந்து கொள்ள முடியும்.

இந்த மழையில் நனையாத குடை தொகுப்பில் மொத்தம் ஒன்பது கதைகளை உள்ளது. ஒவ்வொன்றும் ஒரு விதம். ஒன்றை ஒன்று தழுவி இருக்காது, ஆசிரியரின் வர்ணிப்பு அழகாக அமைந்திருக்கிறது. ஆக மொத்தத்தில் கதைகள் யாவுமே படிப்பவரின் மனதைத் தொடும் என்பதில் எந்த வித ஐப்பாடுமில்லை. கதையைத் தேடித்தேடிப் படிப்பவருக்கு இந்த மழையில் நனையாத குடை ஒரு மாறுபட்ட அனுபவத்தைக் கட்டாயம் ஏற்படுத்தும். ஆசிரியருக்கு வாழ்த்துகள்.

இந்தப் புத்தகத்தின் விலை 180 ரூபாய். இதை வாங்க வேண்டுமானால் கேலக்ஸி புக்ஸ் இணையத் தளப் பக்கத்தில் www.galaxybs.com என்ற இணையப் பக்கத்திலும் ஆர்டர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

# தியாகம்

உமா ஸ்வாமிநாதன்
பெங்களூரு







வீட்டின் வாசலில் நின்று யாரோ 'அம்மா' என்று குரல் கேட்டது. வந்தவன் வாசலில் போட்டிருந்த கோலம் மிதி படாமல் ஓரமாக நின்று குரல் கொடுத்தான்.

தெருவில் கோவில் உற்சவம் அமர்க்களம். வீதிகளில் கடைகளும் கூட்டமும் இருந்தது. கோவிலில் சீதா கல்யாணம் உற்சவம். எல்லார் வீட்டிலும் பெரிய பெரிய கோலமிட்டு செம்மண் இட்டிருந்தனர்.

குரல் கேட்டு வெளியே வந்தாள் தேவகி, "என்னப்பா? என்ன வேணும்?" என்றாள்.

"உங்க வீட்ல கல்யாணம்ன்னு சொன்னாங்க. அதான் ஏதாவது வேலை இருக்கா கேக்க வந்தேன்"

தேவகிக்கு ஒன்றும் புரியவில்லை. பிள்ளைக்கு கல்யாணம் ஆகல என்கிற வருத்தத்தோடு இருப்பவள், வீட்டு வாசலில் ஒருவன் வந்து இப்படி சொன்னதும் ஏதோ அசிரிரி மாதிரி இருந்தது. அவனிடம் பதில் சொல்லி அனுப்பிய தேவதி நினைவுகளில் மூழ்கினாள்.

தேவகியின் திருமணமாகி வந்த வீடு வாசல் திண்ணையோடு இரண்டு கிரௌண்ட்க்கு காலி இடம் கிணறு மரங்கள் செடிகளுடன் இருந்தது.

வீட்டுக்காரர் வாசுவுக்கு கவர்ன்மெண்ட் ஆபீஸ்ல வேலை, ஆனால் வருமானம் போதாது.ஒருவர் சம்பளத்தில் ஆறு பேர் சாப்பிடணும். தியாகு பெரிய பிள்ளை அவனுக்குப் பின் இரண்டு தங்கை, ஒரு தம்பி. குழந்தைகள் எல்லாருமே நன்றாக படிப்பார்கள்.

தியாகு அந்த வருஷம் பனிரெண்டாம் வகுப்பில் பள்ளியில் முதல் மாணவனாக வந்திருந்தான். எல்லார்க்கும் ரொம்ப பெருமை. தியாகுவை நிறையக் கல்லூரிகளில் சேர்த்து கொள்வதாய் சொன்னார்கள். அவனோ குடும்பச் சூழலால் அப்பாவுக்கு உதவியாய் வேலைக்கு போக முடிவு எடுத்தான். பிரைவேட் கம்பெனியில் வேலை கிடைத்தது.தியாகு உழைக்க ஆரம்பித்தான்.

"ஆஹா தியாகுவ எப்படி மறந்தேன் இருவரும் சின்ன வயசுலேருந்து ஒண்ணா பழகினவா. நன்றாக புரிந்து கொள்ள முடியும்."

தேவகிக்கு ஒன்றும் புரியவில்லை. பிள்ளைக்கு கல்யாணம் ஆகல என்கிற வருத்தத்தோடு இருப்பவள், வீட்டு வாசலில் ஒருவன் வந்து இப்படி சொன்னதும் ஏதோ அசிரிரி மாதிரி இருந்தது. அவனிடம் பதில் சொல்லி அனுப்பிய தேவதி நினைவுகளில் மூழ்கினாள்.

தேவகியின் திருமணமாகி வந்த வீடு வாசல் திண்ணையோடு இரண்டு கிரௌண்ட்க்கு காலி இடம் கிணறு மரங்கள் செடிகளுடன் இருந்தது.

வீட்டுக்காரர் வாசுவுக்கு கவர்ன்மெண்ட் ஆபீஸ்ல வேலை, ஆனால் வருமானம் போதாது.ஒருவர் சம்பளத்தில் ஆறு பேர் சாப்பிடணும். தியாகு பெரிய பிள்ளை அவனுக்குப் பின் இரண்டு தங்கை, ஒரு தம்பி. குழந்தைகள் எல்லாருமே நன்றாக படிப்பார்கள்.

தியாகு அந்த வருஷம் பனிரெண்டாம் வகுப்பில் பள்ளியில் முதல் மாணவனாக வந்திருந்தான். எல்லார்க்கும் ரொம்ப பெருமை. தியாகுவை நிறையக் கல்லூரிகளில் சேர்த்து கொள்வதாய் சொன்னார்கள். அவனோ குடும்பச் சூழலால் அப்பாவுக்கு உதவியாய் வேலைக்கு போக முடிவு எடுத்தான். பிரைவேட் கம்பெனியில் வேலை கிடைத்தது.தியாகு உழைக்க ஆரம்பித்தான்.

தங்கைகளை டீச்சர் ட்ரைனிங் படிக்க வைத்து வேலை கிடைத்ததும் ஒரே வீட்டில் அண்ணன் தம்பிக்கு பொண்ணு கேட்டு வந்தனர். கொஞ்சம் கடன் வாங்கி இரண்டு பேருக்கும் கல்யாணம் முடிந்து, பிறகு ஒரு வருடம் பூரா பண்டிகை சீர் செய்யவும் பிரசவ செலவு என்று கடன் ஏறி கொண்டே போனது.

கொஞ்ச நாளில் தியாகு அப்பா மாரடைப்பால் தவறிவிட்டார். ஆபீஸ்லிருந்து வந்த பணம் கல்யாண கடனுக்கு கூட போதவில்லை. இதற்கு நடுவில் தியாகுவின் தம்பி கூடப் படித்த பெண்ணை காதலித்து கல்யாணமும் பண்ணி வீட்டை விட்டு தனியாக போய்விட்டான்.

தியாகுவுக்கும் வயது ஏறிக்கொண்டே போனது. தேவகிக்கும் உடல்நலம் குறைந்தது. சீமந்த புத்திரன் இவன் வாழ்க்கை குடும்பத்துக்காக உழைத்து வீணாகிறதே என அவளின் மனம் வேதனையில் உருகியது.

அன்று கோவிலுக்கு போனவள் கோமதி மாமியை பார்த்தாள். அவளும் இதே தெருவில் இருந்தவள், இருப்பவள்தான். அவளோட பசங்களும் தேவகி பசங்களும் ஒண்ணா படிச்சவங்க. பசங்கலாம் கல்யாணமாகி பட்டணத்துல இருக்கறதால கோமதியும் அடிக்கடி அங்கே போய்டுவா.

"பெரிய பொண்ணு ராதா கல்யாணம் சொல்லவே இல்லை நீ. ரொம்ப தங்கமான பொண்ணு என்றாள் தேவகி.

"அவ தான் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு அவ தங்கை தம்பிக்கு லாம் கல்யாண ஏற்பாடு பண்ணா. டீச்சர் வேலைக்கு போயிண்டுருக்கா. பெண்கள் படிக்கணும் ஆசிரியர் தொழில் உன்னதமானது. ஆசிரியர் வேலைக்கு போகணும். சமையல் ரூமிலேயே அடைபடக்கூடாதுனு தியாகுதான் அடிக்கடி சொல்வானாம்."

உடனே ஆச்சர்யமாய் "அப்போ ராதாவுக்கு கல்யாணம் பண்ணலியா?" என்று கேட்டாள்.

"அது ஒன்று தான் ரொம்ப கவலையா இருக்கு தேவகி" என்றாள் கோமதி.

"கோமதி... நான் ஒண்ணு சொல்லட்டா ராதாவுக்கும் தியாகுவுக்கும் கல்யாணம் பண்ணலாம். நமக்கும் கொஞ்சம் நிம்மதியா இருக்கும். முப்பத்தியெட்டு வயசாறது ரெண்டு பேரும் ஒரே வயது. என்ன சொல்ற?"

"ஆஹா தியாகுவ எப்படி மறந்தேன் இருவரும் சின்ன வயசுலேருந்து ஒண்ணா பழகினவா. நன்றாக புரிந்து கொள்ள முடியும்."

"ராதாவுக்கு நம்ம ஊர் ஸ்கூல்க்கு தான் மாத்திருக்காங்க அவள் அடுத்த வாரம் வாறா. அதான் நாங்க முன்னாடி வந்தோம்"

"கோமதி நாம உடனே ஜாதகப் பொருத்தம் பார்ப்போம். அதுக்கப்பறம் முடிவு பண்ணுவோம்" என்ற தேவகி, உடனே அதற்கும் ஏற்பாடு செய்தாள்.

இரண்டு ஜாதகமும் அமோக பொருத்தம் இவர்களுக்கு பதினைந்து வருடம் முன்பே கல்யாணம் ஆகிருக்கணும். இவர்கள் தான் வேண்டாம் னு தள்ளி போட்டுருக்காங்க . வர வெள்ளி கிழமை நல்ல நாள் அன்றே கல்யாணத்த முடியுங்கோ நன்னா இருப்பா இரண்டு பேரும் என்றார் சோதிடர்.
இருவருமே உடம்பில் புது உற்சாகத்தோடு, சில முடிவெடுத்து வீட்டுக்கு வந்தனர்.

தேவகி தனது பிள்ளைகளுக்குப் போன் பண்ணி அண்ணா கல்யாணம் நீங்கள்லாம் வந்து நடத்தி வைக்கணும். அவனுக்கு இன்னும் தெரியாது னு சொல்லி விவரம் எல்லாம் சொல்ல, எல்லாருமே ஒருவாரம் லீவு போட்டு குடும்பத்தோடு மாமியார் மாமனாருடன் வந்தார்கள்.

தியாகுவிடமோ 'குல தெய்வம் கோவிலுக்கு போகணும் எல்லாரையும் வரசொல்லிருக்கேன்' என்று சொல்லி வைத்திருந்தாள் தேவகி.
தியாகுவும் 'அப்போ நானும் ஒரு வாரம் லீவு கேக்கறேன் எல்லாரும் சேர்ந்து இருக்கலாம்' என்றான்.

தேவகியோ 'இப்போ வேண்டாண்டா லீவு இருக்கட்டும் நான் சொல்றேன் அப்போ தேவைப்படும்' என்று சொல்லி மறுத்துவிட்டாள்.
கோமதியும் அதேபோல் சொல்லி வரச் சொல்லியிருந்தாள்.

ராதவும் புதிய பள்ளியில் சேர்ந்திருந்தாள்.

பள்ளியில் இருந்து வரும் வழியில் தியாகுவைப் பார்த்தாள் அந்த பள்ளிப்பருவம் அவள் அவனிடம் பேசியது எல்லாம் ஞாபகம் வந்தது. அப்படியே தான் இருக்கான் கொஞ்சம் குண்டாயிருக்கான். அதற்குள் தியாகுவே, "என்ன ராதா? எப்போ வந்தே..?" எனக் கேட்டான்.

"இனிமே இப்படி தான் தினம் உன் கண்ணில் படுவேன். உன்னால் தப்பிக்க முடியாது இங்க மாற்றலாகி வந்துருக்கேன். அப்பா அம்மா வும் வந்தாச்சு இனிமே இங்க தான்" என்று குறும்பாக சொன்னாள்.

தியாகுவும் "நீ மாறவே இல்லை ராதா சரி வீட்டுக்கு வா எல்லாரும் வந்திருக்காங்க" என்றான்.

"சாயந்திரம் வரேன்" என்று கிளம்பினாள்.

தியாகுவால் ஆபீசில் வேலை செய்ய முடியல. நினைவுகள் பின்னோக்கிப் பயணித்தது.

"தியாகு எனக்கு உன்ன ரொம்ப பிடிக்கும் என்ன கல்யாணம் பண்ணிக்கிறியா? நீ சரி னு சொன்னா எங்க அப்பாகிட்டே சொல்றேன். உங்க அப்பாவும் எங்க அப்பாவும் நல்ல நண்பர்கள். உனக்கு என்னை கல்யாணம் பண்ணிக்க பிடிக்குமா?" என்று கேட்டாள் ராதா.

"இப்போ நான் கல்யாணம் பண்ணிக்கற நிலைமை இல்லை. தங்கைகள் எல்லாம் முடித்து தான் யோசிக்கணும்" என்றான்.

தங்கை கல்யாணம் முடிந்ததும், தியாகு அப்பா தவறிவிட, கல்யாண கடன்கள் இருந்தது. அதோடு தம்பி உதவுவான் என்று நினைத்தால் அவன் காதல் திருமணம் முடிந்து தனியாக போய்விட்டான். எல்லா பொறுப்பு, கடன் எல்லாம் தியாகுவே சமாளிக்க வேண்டிருந்தது.

கொஞ்சம் சுதாரிப்பதற்குள் வயது ஏறியது. இனி கல்யாணம் வேண்டாம் என்றிருக்கும் போது இப்போ ராதாவை பார்த்ததும் ஏதேதோ எண்ணங்கள் தோன்றியது.
மனம் லேசானது உற்சாகமானது.

அன்று மாலை...

"அம்மா... நான் தியாகு வீட்டுக்கு போய்ட்டு வரேன்" என்ற ராதாவிடம், "நாளைக்கு போலாம் இன்னிக்கு கொஞ்சம் வேலை இருக்கு குலதெய்வம் கோவிலுக்கு கொண்டு போக வேண்டியதெல்லாம் எடுத்து வை" என்றாள்.

அங்கு கோவிலில் முன்பே சொல்லி வைத்திருந்ததால் ரொம்ப அழகா அலங்காரம் பண்ணி எல்லாரும் காத்திருந்தார்கள். ஊர் மக்கள் எல்லாரும் வந்திருந்தார்கள். பொண்ணையும் மாப்பிள்ளையும் வீட்டிலேயே ஓரளவுக்கு அலங்காரம் பண்ணி அழைத்து வந்தார்கள். எல்லாம் கோவிலுக்குதான் என்பதால் சந்தேகம் வரவில்லை.

இவர்கள் நுழைந்ததும் மேள தாளத்துடன் அழைத்து சென்றனர். பூஜை முடிந்ததும் கல்யாணமேடைக்கு இருவரையும் கூட்டிச் சென்று அமர வைக்க, இருவரும் ஒருவருக்கொருவர் புரியாமல் பார்க்க.

அதற்குள் ஊர் மக்களில் பெரியவர் ஒருவர், "அதாகபட்டது என்ன வென்றால். நமக்கெல்லாம் குழந்தையிலிருந்து நன்கு தெரிந்த நம்ம ஊர் தியாகுவும், ராதாவும் இது வரை தன் குடும்பத்துக்காக உழைத்து, தங்கள் வாழ்க்கையை மறந்து விட்டதால் ஊர் மக்களும் அவர்களை பெற்றவர்களும் இன்றைய சுபயோக சுபதினத்தில் இருவருக்கும் கல்யாணம் பண்ணுவதாக அந்த குலசாமி முன்பு முடிவெடுத்து இன்னும் சிறிது நேரத்தில் மாங்கல்யதாரணம் முடிந்ததும் அனைவரும் தியாகு ராதா தம்பதிகளை மனமார வாழ்த்தி ஆசிர்வதிக்கணும்னு கேட்டுக்கிறேன்" என்றார்.

இருவரையும் யோசிக்க விடாமல் மேடையில் உட்காரவைத்து மாலை போட்டு மந்திரங்கள் சொல்லி மாங்கல்யதாரணமும் ஆனது. அனைவர் முகத்திலும் அத்தனை சந்தோஷம் கோமதியும் தேவகியும் கட்டிக்கொண்டு அழுதனர்.

"தியாகுவை இப்படியே விட்டுட்டு போய்டுவேனோனு பயந்துட்டேன்" என்றாள் தேவகி.

"என்ன தியாகு? நான் கேட்டப்போல்லாம் மாட்டேன்னு சொல்லிட்டு இப்படி கட்டாய தாலி கட்டறே . இரு உனக்கு சரியான தண்டனை கொடுக்கணும்"னு சொல்லி ராதா சிரிக்க, "அவ்ளோ தான் நான் நல்லா மாட்டிகிட்டேன்" என்றவன், "எனக்கு எதுவுமே தெரியாது கோவிலுக்கு போகணும்னு சொன்னாங்க. இங்க என்னடான்னா..." என இழுத்தான்.

ராதாவும், "நான் நேத்தி உங்க வீட்டுக்கு கிளம்பினப்போ எங்கம்மா நாளைக்கு போலாம்னா அப்போ கூட எனக்கு எந்த சந்தேகமும் வரல" என்றாள்.

இருவருக்கும் பலவிதமான உணர்ச்சிகள் இதென்ன அதிசயம்?

"வேணும் வேணும்னு கேட்டப்போல்லாம் கிடைக்கல இனிமே இல்லைனு முடிவு பண்ணினதுக்கப்பறம் இப்படி" என்று ராதா கூற, தியாகுவும் "அப்போ என்னால் முடிவு எடுக்க முடியல" என்றான்.

இவர்கள் பேசியது எல்லாம் கேட்டு "அண்ணா எங்களுக்காக இப்படி பண்ணுவியா? ராதாவை கல்யாணம் பண்ணிண்டு ரெண்டு பேரும் சேர்ந்து எங்களுக்கு செய்திருக்கலாமே" என்றார்கள் தியாகிவின் உடன்பிறப்புகள்.

"இல்லம்மா அப்போ எனக்கு ஒரு பயம் இருந்தது என்னோட வாழ்க்கையில் உங்களை கவனிக்காம விட்டுடுவேனோன்னு" என்றான்.

"இது பிரமன் போட்ட முடிச்சி அண்ணா. எங்களுக்கு மனசு நிறைஞ்ச சந்தோசம்ண்ணே"

"திரும்ப இதே மாதிரி சந்தோஷமான விஷயத்துக்கு எல்லாரும் வருவோம். நாங்க வருவதற்கு நீ தான் சந்தர்ப்பம் ஏற்படுத்தி தரணும்" எனச் சொல்லி எல்லாரும் சிரித்தார்கள்.

ராதா ரொம்ப தீவிரமா விரல் விட்டு எண்ணிக்கொண்டிருந்தாள்.

ராதாவின் தம்பியும் தங்கையும் " நீ என்னக்கா இப்போ போய் ஸ்கூல் கணக்கு போடற?" எனக் கேட்க, "இல்லடா இது ஜனவரி மாதம் ... ஜூன், ஜூலைலை உங்களலாம் வர வழைக்கலாமான்னு யோசித்தேன்" என்று சொல்லவும் தியாகு புரியாமல் முழித்தான்.

எல்லாரும் சேர்ந்து ஓ என்று கத்த.... ராதா வெட்கத்தில் தியாகுவின் தோள் சாய, அவனும் விசயம் புரிந்து வெட்கச் சிரிப்பை வெளிப்படுத்தினான்.



# சோளகர் தொட்டி






R.சுபாஷினி

இந்நூலின் ஆசிரியர் ச.பாலமுருகன் அவர்கள் ஈரோடு மாவட்டம் பவானியைச் சேர்ந்தவர். கோவையில் வழக்குரைஞராகப் பணியாற்றுகிறார். தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தோடு இணைந்து, பழங்குடி மக்களின் மீதான மனித உரிமை மீறல்களுக்கு எதிரான செயல்பாடுகளை இயக்கமாக்கிய முக்கியமானவர்களுள் ஒருவர். பழங்குடி மக்களின் பண்பாடு, வாழ்க்கை, தொன்மங்கள் மற்றும் வனம் போன்றவற்றுடன் தனக்குள்ள பிணைப்பை இந்நாவலில் வெளிப்படுத்தியுள்ளார்.

வீரப்பன் உலவிய காடுகளில் வாழும் பழங்குடித் தமிழர்களே சோளகர்கள். தொட்டி அவர்கள் வாழும் ஊராகும். நாகரிகத்தின் பயனாய் விளைந்திருக்கும் சீரழிவுக்கு உட்படாத உண்மையும் எளிமையும் இயற்கையோடு இயைந்த மக்கள் நாயக வாழ்க்கை முறையும் கொண்ட அப்பழங்குடித் தமிழர்கள் வீரப்பன் தேடுதல் வேட்டையில் சிக்கிச் சிதைந்து போன துன்பியல் நிகழ்வுகளை இலக்கியப் படைப்பாக்கியிருக்கிறார் பாலமுருகன் எனப் புத்தகத்தின் முன்னுரையில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தியா டுடே எழுதியதைப் படித்த பிறகு புத்தகத்தின் இரண்டாம் பகுதியைப் படிக்கும் துணிவே எனக்கு அற்றுப் போனது. உள்ளுக்குள் நடுக்கம் பிறந்தது என்பது உண்மை. ஆனால் அதை முதல் பாகம் படித்த பின்புதான் படித்தேன். எனவே இரண்டாவது பகுதியை படிக்கும் கட்டாயத்துக்கு உள்ளானேன்.

சோளகர்கள் பற்றிய இந்நாவல் அவர்களைப் பற்றி அறியாத பாவிகளான நமக்கே எழுதப்பட்டது என்றும், இந்நாவலைப் படித்ததும் மலைவாழ் மக்களுக்கு எதேனும் செய்ய வேண்டும் என்ற துடிப்பு நமக்குப் பிறக்கும் என்றும், அதுவே ஓர் அருமையான படைப்பிலக்கியத்தின் வெற்றி என்றும் அருணன் கூறுகிறார்.

தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் வி. பி. குணசேகரன் பதிப்புரை எழுதி இருக்கிறார். மக்கள் இந்த நாவலுக்கு ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். இந்நாவல், 2019-ல் 12 பதிப்புகளைக் கண்டிருக்கிறது. இதுவே மக்களின் ஆதரவுக்கு சாட்சி.

சோளகர்களை நன்கு அறிந்த ஆசிரியர், அவர்கள் வாழ்க்கை முறையைப் பதியாமல் விட்டுவிட்டால், அது பிற்காலத்தில் கற்பனையாக நினைக்கப்பட்டு விடக்கூடும் என்ற அச்சத்தினாலேயே இதை எழுத முன்வந்ததாய் என்னுரையில் கூறுகிறார்.

புத்தகம் இரண்டு பாகங்களாக எழுதப்பட்டிருக்கிறது. முதல் பாகம் இதமாகவே இருக்கிறது. பழங்குடியினரின் வாழ்க்கை முறை மிக எளிது. எந்த நேரத்திலும் அவர்கள் அதை சிக்கலாக்கிக் கொள்வதில்லை. கூட்டமாய் வாழ்வதும், கூடி வாழ்வதும் இவர்கள் சிறப்பு. பிடித்திருந்தால் திருமணம் செய்வதும், பிடிக்காவிட்டால் விலகுவதும் இவர்களின் பழக்கம்.

குழந்தை இருந்த போதும் மறுமணம் என்பது தடையில்லை. அதே மாதிரி கணவனின் தம்பியை மறுமணம் புரிவதும் அங்கீகரிக்கப்படுகிறது.

காடு அவர்களுக்குத் தாய் வீடு. பறவைகள், விலங்குகள் போல் காட்டில் பயமின்றிச் சுற்றித் திரிகிறார்கள். மிக அழகான உலகம் அவர்களுடையது.

புயலாக வீரப்பன் நுழைய, அவனைப் பிடிப்பதற்காக வரும் இரு மாநிலத்து காவல்துறையின் அட்டகாசங்கள் என விரியும் கதையை... ஐயோ... விவரிப்பதற்கும் கூட துணிவு வேண்டும். நகரத்தில் வாழ்வதாய் பெருமைப்படுகிறோம். இல்லை இது நரகம். வாழ்வில் மறக்க முடியாத நாவல். ஏன் படித்தோம் எனத் துவளச் செய்கிறது. கலைந்த குருவிக் கூடாய் அவர்கள் வாழ்க்கை. எல்லாவற்றையும் இழந்து உயிர் மட்டும் சுமந்து வாழ்வதோடு கதை முடிகிறது.

நான் இதை ரசித்துப் படித்தேன் என்று சொல்ல முடியாது. என் வாழ்க்கையில் மறுபடி படிக்கவே விரும்பாத புத்தகம் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் சுகமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, கஷ்டப்படுவதாக நினைத்து தனக்குத்தானே சுய இரக்கம் கொள்பவர்கள் கட்டாயம் படிக்க வேண்டிய புத்தகமிது.

அமேசானில் அச்சுப் புத்தகமாகவும், கிண்டில் பதிப்பாகவும் கிடைக்கிறது. வேறு சில பதிப்பகங்களும் வெளியிட்டிருக்கின்றன.

சோளகர் தொட்டி - ஒரு வாழ்வியலின் துன்பத்தைச் சொல்லும் நிஜக்கதை.

# சந்தியா ராகம்




சந்தியா ராகம்...

எனக்கு அவ்வப்போது சில படங்களைத் தேடி பார்க்க வேண்டுமெனத் தோன்றும். அப்படித்தான் சில வருடங்களுக்கு முன் சந்தியா ராகத்தை யுடியூப்பில் தேடிப் பார்த்தேன், சின்னப் பையன் குடுகுடுன்னு மலையேறுகிற மாதிரி படம் எந்தத் தடங்களும் இல்லாமல் ஓட ஆரம்பித்தது.

கருப்பு வெள்ளைப் படமான சந்தியா ராகம் தொடங்குவதே கவிதையாய்... ஒரு கிராமத்தில் மாடு கத்தும் பின்னணியில் நாட்டுக்கட்டுச் சேலை கட்டிய பெண்கள் தண்ணீர் தூக்கிக் கொண்டு போவது, நாற்று நடுவது, எருமைகள் தண்ணீரில் நீந்திக் கடப்பது, மாடு ஓட்டிக் கொண்டு போவது, மாட்டு வண்டி போவது, பேன் பார்ப்பது, கோழிக்குஞ்சுகள் என கேமரா வாழ்வியல் கவிதைகளை உள் வாங்கியபடி சொக்கலிங்க பாகவதரின் வீட்டுக்குள் நுழைகிறது. அப்படியே கட்டிலில் இருந்து எழும் சொக்கலிங்கம் தனது காலை மெதுவாக அழுத்தி ஊன்றி எழுந்து முகம் கழுவி மனைவி விசாலாட்சியை அழைப்பதில் தொடர்கிறது.

குளிக்கப் போகும் சொக்கலிங்கப் பாகவதர் சின்னக் குழந்தையாய் மாறித் தண்ணீருக்குள் கல்லை எடுத்து தவளை (தண்ணீரின் மீது கல்லை செரட்டி எறிந்தால் அது தாவித்தாவி போகும், அதனால் அதை நாங்கள் தவளை என்போம்) விடுவதும், பசங்க விளையாண்டு அப்படியே விட்டுச் சென்ற சில்லு நொண்டிக் கட்டத்தில் வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டு நொண்டி அடித்துப் பார்ப்பதும், சிறுவர்களின் பம்பர விளையாட்டை ரசித்து கோசெடுத்து தனது கைகளில் விடச் செய்வது என கிராமத்து துள்ளல் பெருசாக வலம் வருகிறார்.



பரிவை சே.குமார்

இவரைப் போன்று ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு துடுக்கான பெரிசு இருப்பார். எங்க ஊரிலும் எங்கய்யா ஒருத்தர் இருந்தார். எல்லாவற்றிலும் கலந்து கொள்வார். நூறு வயதுக்கு மேல் வாழ்ந்து சமீபத்தில்தான் இயற்கை எய்தினார். அவர் இறக்கும்வரை நாங்கள் அவரை இளைஞர் மன்றத் தலைவர் என்று சொல்வதை ரசிப்பார்.

குளித்து, சிறுவனாய் விளையாடி மகிழ்ந்து வீட்டுக்கு வந்து தனது மனைவி இறந்திருப்பது கண்டு அழுவதும், காரியங்கள் முடிந்ததும் தனக்கு குழந்தைகள் இல்லாததால் தனிமையில் வாழ விரும்பாமல், சென்னையில் சிறிய வாடகை வீட்டில் மனைவி அர்ச்சனாவுடனும் மகள் வள்ளியுடனும் (பேபி ராஜலட்சுமி) வாங்கும் சம்பளத்தில் இழுத்துக்க பறிச்சுக்க என்று வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கும் தம்பி மகனான ஓவியர் வீரசந்தானத்தைத் தேடி வருகிறார். கிராமத்தில் ஆர்ப்பரிக்கும் காட்டருவியாக சுற்றியவர் சென்னைக்குள் நுழையும் போதே சிகரெட்டுப் பிடிக்கும் சிறுவர்கள், ஆட்டோக்காரனின் 'சாவு கிராக்கி' என்ற வசனம் என எல்லாம் தாங்கி எதோ வாழ்க்கையை ஓட்டணுமே என ஒரு வழியாக வீரசந்தானத்தின் வீட்டு விலாசத்தை விசாரித்து வந்து சேருகிறார்.

தனது வாரிசு வீட்டிற்கு வாழ்வின் இறுதியில் போகிறவர்களில் பெரும்பாலானோர் நிம்மதியான வாழ்வை வாழ்வதில்லை என்பதே நிதர்சனம். எவ்வளவுதான் பிள்ளைகளைப் பார்த்துப் பார்த்து வளர்த்துப் படிக்க வைத்தாலும் பெரும்பாலான பிள்ளைகள் பெற்றோரைப் பார்ப்பதை ஒரு கடமையாக, இல்லை கடனாகக் கூடப் பார்ப்பதில்லை. இன்றைய சமூக வலைத்தளங்களில் வயதானோரை அடிப்பதையும், மிதிப்பதையும், தெருவில் கொண்டு வந்து போட்டுச் செல்வதையும் பார்க்க நேர்வதைத் தவிர்க்க முடியவில்லை, அப்போதெல்லாம் மனசுக்குள் எழும் பெரும் வலியும் வேதனையும் என்ன மனிதர்கள் இவர்கள் என்ற நினைவின் பெருமூச்சொலியாய் கரைந்து செல்கிறது. தன் பிள்ளைகளே பார்க்காத இந்தக் காலத்தில் மட்டுமல்ல எந்தக் காலத்திலும் ஏதோ நம்பிக்கையில் தனது உறவுகளின் வீட்டைத் தேடிச் செல்வது என்பது மிகப்பெரும் சோகம்.

சென்னை வந்த இரவில் அறைக்குள் கணவன் வீரசந்தானத்திடம் தங்களது குடும்பச் சூழலில் மாமா இங்கே தங்கி விடுவாரோ என அர்ச்சனா கவலையுடன் கேட்பதும், தொடரும் உரையாடலில் அர்ச்சனாவிடம் கோபமாக பேசுவதைக் கேட்க நேரும் போது உடைந்து போகிறார். அர்ச்சனா அப்படிக் கேட்கும் போது இவரும் சராசரி மருமகள்தான் என்று நினைக்கும் போது அடுத்த நாள் கணவனின் பையில் இருந்து காசை எடுத்து விட, அதை அறிந்து அவன் வினவ, 'பாவம் அவர் வந்திருக்காருல்ல... வாய்க்கு ருசியா எதாவது சமைக்க வேண்டாமா' என்று கேட்கும் போது அவரின் நல்ல குணம் பதியப்படுகிறது.

தங்களின் தேவைக்காக ஒரு இடத்தில் போய் ஒதுங்கும் போது தனக்கு அவர்கள் செய்வதற்கு பிரதி உபகாரமாக எதுவும் செய்யாமல் சும்மா இருக்க, அதுவரை உழைத்த உடம்பும் மனசும் இடம் கொடுப்பதில்லை. அப்படித்தான் சொக்கலிங்கமும் பேத்திக்கும் மருமகளுக்கும் சின்னச் சின்ன வேலைக செய்து அவர்களுடன் நெருக்கமாகிப் போகிறார். குழந்தைக்கு வாங்கிக் கொடுத்த வடையில் ஏற்படும் பிரச்சினையால் அன்றிரவே யாரிடமும் சொல்லாமல் அங்கிருந்து கிளம்பிவிடுகிறார். அவரைத் தேடும் படலத்துடன் அவர் காணாமல் போனதற்கு மனைவிதான் காரணம் என வீர சந்தானம் எரிந்து விழுவதுமாக கதை நகர்கிறது.

அவரைத் தேடி அலைகிறார்கள்... கண்டு பிடித்தார்களா..? அல்லது அவர் திரும்பி வீட்டுக்கு வந்தாரா..? என்பதுதான் தொடரும் கதைக்களமாய்...

சொக்கலிங்க பாகவதர் கிராமத்து கிழவனாகவே வாழ்ந்திருக்கிறார். ஒவ்வொரு காட்சியிலும் அவரது நடிப்பு பிரமிக்க வைக்கிறது. வீடு படத்தை தூர்தர்சனில் பார்க்கும் போது ஒரு வீட்டையும் இந்தக் கிழவரையும் காட்டும் போது அந்த வயதில் இந்தாளையும் வீட்டையும் வச்சி படம் ஓட்டுறான் பாரு.... இந்தக் கிழவனை எங்க இருந்துடா புடிச்சானுங்க எனச் சொல்லியிருக்கிறோம். ஆனா இதில் காபி குடிக்கும் போது, மனைவி இறக்கும் போது, மருமகளிடம் மனைவியின் சமையல் பற்றி பேசும் போது, மகனிடம் கக்கூஸ் எங்கப்பா இருக்குன்னு கேக்கும் போது, மருமகளிடம் திட்டு வாங்கும் போது, நாடக நாயகனாக நடித்துக் காட்டும் போது... என இப்படியே நிறுத்தாமல் பல போதுகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். இவரை பாலுமகேந்திரா மட்டும்தான் அழகாக பயன்படுத்தியிருக்கிறார் என்று நினைக்கும் போது நல்ல கலைஞனை மற்றவர்களும் பயன்படுத்தி இருக்கலாமோ எனத் தோன்றியது.



வீர சந்தானம் சாதாரணக் குடும்பத்து நாயகனாக அருமையாக நடித்திருக்கிறார். சண்டை போட்டுப் படுத்திருக்கும் மனைவியிடம் சமாதானம் ஆக முயற்சித்து மெதுவாகப் பேசுவதும், பின்னர் மனைவிக்கும் குழந்தைக்கும் போர்த்தி விட்டுவிட்டு படுப்பதும், பெரியப்பாவைத் தேடித் திரிவதும், அந்தக் கோவத்தில் மனைவி சாப்பிட்டுச் செல்லச் சொல்லும் போது 'ஆமா அங்க உக்காந்திருக்கவன் உங்கப்பந்தானே' எனக் கத்திவிட்டுச் செல்வது என மிகையில்லாமல் நடித்திருக்கிறார்.

அர்ச்சனா... சொல்லவே வேண்டாம்... ஊர்வசி விருது பெற்றவரல்லவா... நடிக்கச் சொல்லியா தரவேண்டும். வரவுக்கும் செலவுக்கும் தட்டுத் தடுமாறி வாழ்க்கை நடத்தும் பெண்ணாக வாழ்ந்திருக்கிறார். கணவனிடம் எதாவது பழம் வாங்கிட்டு வாங்க என்று சொல்லும் போது 'காஷ்மீர் ஆப்பிள் வாங்கிட்டு வரவா... குடுக்கிற மூணு ரூபாயில பேச்சைப் பாரு...' என்று அவன் சொல்லிச் செல்ல அப்படியே முகத்தில் ஒரு சின்ன புன்னகை அரும்ப விடுவார் பாருங்கள்... சான்ஸே இல்லை... இப்படி சீனுக்கு சீன் கலக்கியிருப்பார்.

டீக்கடையில் அமர்ந்து பேசுபவர்கள் பெரியவர்களை கவனிக்காத பிள்ளைகள் பற்றி பேச்சு வரும் போது வாழ்வின் வலியையும் அழகாகப் பதிந்திருக்கிறார் பாலுமகேந்திரா. கலர் படமாக இருந்தால் காட்சிப் படுத்துதலில் பார்வையாளனின் பார்வை கதாபாத்திரங்களை விடுத்து பின்னணிக் காட்சியில் போய்விடும் என்பதால் இது போன்ற படங்களை கருப்பு வெள்ளையில் வெளியிடவே பாலுமகேந்திரா விரும்பியதாக மாலியன் என்பவரின் கட்டுரையில் படித்திருக்கிறேன். அது உண்மைதான் போல... கருப்பு வெள்ளையில் அந்த மனிதர்களையும் அவர்களின் மனங்களையும் அருமையாகப் படம் பிடித்திருக்கிறார்.

படம் ஆரம்பித்து சில நிமிடங்களுக்குப் பிறகே பெயர் போடுகிறார். அப்படிப் போடும் போது 'எம்தோழனும் தந்தையுமாகிய பாலநாதனுக்கு சமர்ப்பணம்' என்று வெள்ளை எழுத்துக்களை கருப்புப் பின்னணியில் காட்டுகிறார்.

பின்னணி இசை எல். வைத்தியநாதன் என்று போடுகிறார்கள். குன்றக்குடி வைத்தியநாதனோ? பாலுமகேந்திரா என்னும் மகா கலைஞனின் இது போன்ற படங்களை தேடிப் பிடித்து பார்க்கும் ஆவலைத் தூண்டிவிட்டது இந்தச் சந்தியா ராகம்.

சந்தியா ராகம் கண்டிப்பாக பார்க்க வேண்டிய ஒரு படம்.




Say hello to luxury, adventure, and unforgettable moments. Dubai welcomes you with open arms!

**FJ Tours and Travels**

UAE : +971564333826

India : +918925813513



# Elevate Your Brand with Precision Printing

PrinTech Solutions
Your Print Partner

Your premier partner for top-tier printing solutions!





*PrinTech Solutions LLC*

## WHY CHOOSE US

- Unparalleled Quality
- Swift Turnaround
- Dependable Service
- Innovation at its Finest
- Eco-Friendly Practices

## OUR SERVICES

- *Digital Printing*
- *Custom Design Services*
- *Packaging Solutions*
- *Stationery Printing*


CONTACT US TODAY

sales@printechuae.com
+971 58 124 1941